

# மாற்றம் தந்த மக்களுக்கு
# ஏற்றம் தரும் அரசின்
# 100 நாள் சாதனை மலர்

# தமிழரசு


**சிறப்பு வெளியீடு எண் : 3**

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள்தொடர்புத் துறை

திருவள்ளுவர் ஆண்டு 2042
ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2011



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **மூ. இராசாராம்,** இ.ஆ.ப.,
செயலாளர் / ஆணையர்
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்
செய்தித்துறை

நிருவாக ஆசிரியர்

**க. குமாரவேலு**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

மலர்த் தொகுப்பில் உதவி

**ந.இளங்கோ**
**எஸ்.ஆர்.சாரதி**

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச.ஜெயலலிதா**
**ரெ.அன்பழகன்**
**இரா.ராஜசேகரன்**

உதவி ஆசிரியர்கள்

**மு.சத்தியசீலன்**
**த.கலைச்செல்வன்**
**ப. கலைநேசன்**
**சு.கமலா**
**கோ.சண்முகம்**

நிருபர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

இதழ் உதவியாளர் / கணினி வடிவமைப்பு

**அ.மதன்**

கணினி வடிவமைப்பு

**இரா.பாலாஜி**



தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in


தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான் இந்த அரசினுடைய குறிக்கோள்.

– மாண்புமிகு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்



## இந்த மலரில்...


★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை ..... 3**

★ **மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களின் முன்னுரை ..... 6**

★ **மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள் ..... 7**

★ **மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் கட்டுரைகள் ..... 36**

★ **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுக்கள் ..... 69**

★ **பத்திரிகைகளின் பார்வையில் ..... 72**

★ **பயன்பெற்றவர்கள் பாராட்டுகிறார்கள் ..... 75**

**செல்வி ஜெ ஜெயலலிதா**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மாற்றத்தைக் கொண்டு வந்த தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தருகின்ற அரசு

தமிழக மக்களின் மகத்தான ஆதரவுடன் மூன்று மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான அரசு தன்னுடைய பணியில் 100 நாட்களை இன்று நிறைவு செய்ததையொட்டி, இங்கே சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் பலரும் பேசி, தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

இன்றைய தினம் பேசிய உறுப்பினர்கள், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களை, தெரிவித்த பாராட்டுக்களைக் கேட்கின்றபோது ஏதோ சம்பிரதயாத்திற்காக தெரிவிக்கப்பட்ட பாராட்டுகள் போல எனக்குத் தோன்றவில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வந்த உணர்வுகளை, எழுந்த உணர்வுகளை இங்கே வெளிப்படுத்தியதாகவே நான் கருதுகிறேன். இந்தப் பாராட்டுக்களையெல்லாம் கேட்கின்றபோது எனக்கு மகிழ்ச்சி என்பதை விட, என்றுமே என் வாழ்க்கையில் தோன்றாத ஒரு அச்ச உணர்வு இப்போது தோன்றி இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். 100 நாட்கள் முடிந்த பின்னர் எங்கள் ஆட்சியின் பணி 100 நாட்கள் முடிந்த பின்னர் இன்று ஒருவர்கூட குறை சொல்லாமல் இப்படி தாராள மனதோடு, முழு மனதோடு பாராட்டு தெரிவித்திருக்கிறார்களே,

இது தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்க வேண்டுமே என்று எண்ணும்போது ஒரு சிறிய அச்ச உணர்வு ஏற்படுகிறது.

இந்த 100 நாட்களுடன் எல்லாம் முடிந்துவிடவில்லை. இன்னும் எத்தனையோ 100 நாட்கள் இருக்கின்றன. இன்னும் ஓராண்டு நிறைவு செய்ய வேண்டும். அதன் பின்னர் 2 ஆண்டுகள் நிறைவு செய்ய வேண்டும். பின்னர் 5 ஆண்டுகள் நிறைவு செய்ய வேண்டும். அந்த 5 ஆண்டுகள் முடியும் வரையிலும் இந்த 100 நாட்கள் பணியை மிஞ்சுகின்ற அளவுக்கு எங்கள் அரசின் பணிகள் அமைய வேண்டுமே தொடர்ந்து இந்த அவையில் வீற்றிருக்கின்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து நம்மை வாழ்த்திப் பாராட்ட வேண்டுமே, அதற்கு ஏற்றாற்போல் நம்முடைய செயல்பாடுகள் அமைய வேண்டுமே என்று நினைக்கும்போது இது மிகப்பெரிய சவாலாகவே எனக்குத் தோன்றுகிறது.

என்னைப் பொறுத்தவரை, அனைவருடைய ஆதரவோடும், நல்வாழ்த்துக்களோடும் சாதிக்க முடியும் என்றே நம்புகிறேன். காரணம், நாங்கள் எதைச் செய்தாலும் உள்ளச் சுத்தியுடன் செய்கிறோம். மக்களை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் எங்களிடம் கிஞ்சித்தும் இல்லை உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த தி.மு.க. ஆட்சியின் காலத்தில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மக்களுக்கு கேஸ் அடுப்பு வழங்குகிறோம் என்றார்கள். எல்லோருக்கும் கொடுக்கவில்லை. ஒரு சிலருக்கு மட்டும் கேஸ் அடுப்பைக் கொடுத்தார்கள்.

ஆனால், கேஸ் அடுப்பைக் கொடுத்தவர்களுக்குக்கூட கேஸ் சிலிண்டரைக் கொடுக்கவில்லை. அதைப் போலவே, சில விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்தோம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள். ஆனால் மின் இணைப்பு கொடுத்த விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை. ஆகவே, அப்படியெல்லாம் நாங்கள் மக்களை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் இல்லாதவர்கள். எதைச் சொன்னாலும் அதை உள்ளச் சுத்தியோடு சொல்கிறோம். கருமசிரத்தையோடு செயல்படுத்துகிறோம். இதுதான் எங்களுடைய வரலாறு.

இந்த நேரத்தில் தமிழக மக்களுக்கு நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். இன்று ஒரு உண்மையை நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன். இது ஏற்கெனவே எனக்குத் தெரிந்த விவரமென்றாலும் அதைச் சொல்லக் கூடிய ஒரு சந்தர்ப்பம் அமையவில்லை. இன்று சொல்லிவிடலாம் என்று எண்ணுகிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள் மலைபோல் நம்பி இருந்தது பண பலத்தைத்தான். ஆட்பலத்தைவிட, படை பலத்தைவிட, அதிகார பலத்தைவிட அவர்கள் நம்பியிருந்தது பண பலத்தைத்தான்.

3 மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் தி.மு.க.வினர் புழக்கத்தில் விட்ட பணம் எவ்வளவு தெரியுமா? 5,000 கோடி ரூபாய். அந்தத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இந்தியத் தேர்தல் ஆணையம் சில கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. அப்போது இந்தியத் தேர்தல் ஆணையம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தி.மு.க.வினரிடமிருந்து 50 கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றப்பட்டது. இது எல்லா பத்திரிகைகளிலும் வெளியே வந்தது. இந்தச் செய்தி வந்தது. அப்போது முன்னாள் முதலமைச்சர் குடும்பத்திற்கு மிகவும் நெருக்கமானவர்கள், இங்கே சென்னை மெரினா கடற்கரையில் நடைபயிற்சி பயின்று கொண்டிருந்தார்கள். எனக்கு வேண்டியவரும் அவர்கள் அருகிலேயே பெஞ்ச்-ல் அமர்ந்து கொண்டிருந்தார். இவர் யாரென்று அவர்களுக்குத் தெரியாது. அப்போது ஒருவர் கேட்கிறார், எலக்ஷன் கமிஷன் பரவாயில்லையே! 50 கோடி ரூபாயை அவர்கள் கைப்பற்றி விட்டார்களே என்று சொல்லுகிறார். அதற்கு இன்னொருவர் சொல்கிறார். இந்த 50 கோடி ரூபாய் என்பது எங்களுக்கு, அதாவது முன்னாள் முதலமைச்சரின் குடும்பத்திற்கு ஒரு பானை தண்ணீர் கொண்டு செல்லும் போது சிதறி சில துளிகள் விழுமே, அது போன்ற சிதறல்தான் என்றார்.

இந்த 50 கோடி ரூபாய் வெறும் சிதறல், எங்களுக்கு அது ஒரு பொருட்டே அல்ல. ஒட்டுமொத்தமாக எங்கள் அண்ணன், எந்த அண்ணன், அஞ்சாமல் இருந்து, இன்று காணாமல் போன அண்ணன் புழக்கத்தில் விட்ட பணம் 5,000 கோடி ரூபாய் என்று அவர்கள் அங்கே தெரிவித்தார்கள். இதை எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், அந்த 5,000 கோடி ரூபாயைப் புழக்கத்தில் விட்டு, இவ்வளவு ஆசை காட்டி, அவர்கள் என்ன செய்தாலும் மக்கள் அதற்கெல்லாம் மசியாமல், இடம் கொடுக்காமல் அதற்கு இளகிவிடாமல், மக்கள் உறுதியாக இருந்து, இவர்கள் எவ்வளவு பணத்தைக் கொட்டினாலும் சரி, எத்தனை பவுன் தங்கத்தைக் கொடுத்தாலும் சரி, எத்தனைச் சேலைகளைக் கொடுத்தாலும் சரி, என்ன கொடுத்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிப்போம். அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களிப்போம் என்ற ஒரு உறுதியுடன் இருந்து சாதித்துக் காட்டினார்கள்.

அதனால்தான் இன்று கொடுத்த விளம்பரங்களில் சொல்லியிருக்கிறோம். "மாற்றத்தைக் கொண்டு வந்த தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தருகின்ற அரசு" என்று . ஆகவே, இந்த நேரத்தில் மக்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய சட்டமன்றக் கட்சித் தலைவர்களெல்லாம் குறிப்பிட்டார்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும்

குறிப்பிட்டார். இந்த அரசுக்கு, இந்த முதல்வருக்கு செய்ய வேண்டும் என்ற மனம் இருக்கிறது. ஆனால் ஒட்டுமொத்தத்தில் அமைச்சர்கள் பேசுகின்ற பேச்சுக்களைப் பார்க்கும்போதும், முதல்வர் சொல்லுகின்ற கருத்துகளைப் பார்க்கும்போதும், நிதிப் பற்றாக்குறைதான் அவர்களுக்கு ஒரு தடையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை.

இன்று என்னுடைய நிலைமை எப்படிப்பட்டது என்று சொல்ல வேண்டுமென்றால், ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். ஒரு தாய் இருக்கிறார், அவருக்கு 10 பிள்ளைகள் இருக்கிறார்கள். 10 பிள்ளைகளும் பசியோடு இருக்கிறார்கள். ஆனால், தாயிடம் இருப்பதோ ஒரு தோசை. வீட்டில் இருப்பது ஒரு தோசை, அது ஒரு குழந்தையின் பசியைப் போக்குவதற்குக்கூட போதாது. ஆனால், இருப்பது அவ்வளவுதான். ஆகவே, ஒரு குழந்தைக்கே ஒரு தோசையைக் கொடுத்து 9 பிள்ளைகளை பட்டினி போடுவதா? அல்லது அந்த தோசையை துண்டு துண்டாக ஆக்கி 10 பிள்ளைகளுக்கும் பகிர்ந்து கொடுப்பதா என்றால், ஒரு நல்ல தாய் என்ன செய்வாள்? இருக்கின்ற ஒரு தோசையை 10 துண்டுகளாகப் பிரித்து 10 பிள்ளை களுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுப்பாள். இதனால் அந்தக் குழந்தைகளின் பசி ஆறப் போவதில்லை. அந்தக் குழந்தைகளின் பசியைப் போக்க முடியாது என்பது தாய்க்கு நன்றாகவே தெரியும். ஆனால், இருப்பது அதுதான்: ஆகவே, அந்த நிலையில் இன்று நான் இருக்கிறேன். தமிழக மக்களுக்கு எவ்வளவோ செய்ய வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது; எங்கள் அரசுக்கு இருக்கிறது.

ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் எப்படி தமிழக மக்களை கடனாளியாக்கி விட்டுச் சென்றார்கள் என்பதை இங்கே பேசிய அனைவரும் குறிப்பிட்டார்கள். மத்திய அரசும் நமக்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யாமல் எப்படி பாராமுகமாக இருக்கிறது என்பதையும் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், அத்தனையையும் மீறி நாங்கள் சாதிப்போம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த நேரத்தில் தமிழக மக்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது இதுதான். “வருந்தாதே ஏழை மனமே, வரும் காலம் நல்ல காலம், மனம்போல இன்பம் நேரும், திருநாளும் வந்து சேரும். தினம் இரவும் பகலும் மாறி வரும் முறையை எண்ணிப் பாரு”, என்பதைச் சொல்லி, நல்லகாலம் வரும் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது.

இன்று விலையில்லா அரிசி, இன்னும் கிரைண்டர், மிக்சி, மின் விசிறி போன்ற எத்தனையோ பொருட்களை மக்களுக்குக் கொடுப்பதைப் பற்றி இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். ஆடு–மாடுகள் வழங்குவதைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அதற்குப் பாராட்டு தெரிவித்தார்கள். எனக்கு மனதில் இருக்கின்ற எண்ணம், ஆசை இதுதான். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும். ஒரு காலக்கட்டத்தில் தமிழக மக்களுக்கு யாரும் எந்த உதவியும் இலவசமாகத் தர வேண்டிய அவசியம் இருக்கக்கூடாது. தமிழக மக்கள் யாரிடத்திலேயும் கையை நீட்டிப் பெறுகின்ற நிலைமை இருக்கக்கூடாது. அந்த நிலையை எனது வாழ்நாளில் நான் காண வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. அதுதான் என்னுடைய இலட்சியம். உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடும், நல்வாழ்த்துகளோடும், தமிழக மக்களின் அன்போடும், ஆதரவோடும் எனது இலட்சியம் நிறைவேறியே தீரும், நிறைவேற்றியே தீருவோம் என்று சொல்லி மீண்டும் ஒரு முறை அனைவரும் தெரிவித்த பாராட்டுகளுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
முதலமைச்சராகப் பொறுப்பேற்று
நூறு நாட்கள் நிறைவடைந்ததையொட்டி
பாராட்டுரைகளுக்கு நன்றி தெரிவித்து
சட்டமன்றப்பேரவையில் ஆற்றிய உரை (24.8.2011)

✶

**ஞா. செந்தமிழன்**
செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



## முன்னுரை

# பொற்காலம் படைக்கும் பொன்மனத்தாய்

**ஜனநாயகம் என்பதே மக்கள் ஆட்சிதான். மக்கள் விரும்பினால் எத்தகைய ஒரு மாற்றத்தையும் கொண்டு வர முடியும்"** என்பது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொன்மொழியாகும்.

மக்கள் சக்தி வழங்கிய மகத்தான தீர்ப்பைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழக மக்கள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் கழக தேர்தல் வாக்குறுதியில் சொல்லியதை நிறைவேற்றியும் தமிழகத்தில் வாழ்கின்ற மக்களின் வறுமையை விரட்டி அவர்தம் வாழ்வு வளம்பெற முதலமைச்சராக பொறுப்பேற்ற அன்றைய தினமே இந்தியாவே வியக்கும் அளவுக்கு 7 மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்த முதல் கையெழுத்திட்டார்கள்.

இதுவரை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே "சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை" என்ற புதிய துறையை உருவாக்கி, அதற்கென ஒரு அமைச்சரை நியமித்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களையே சாரும்.

மக்கள் நலப்பணிகளோடு தமிழ்நாட்டின் பெருமைக்குக் காரணமான பெருமக்களுக்கும் சிறப்புச் சேர்க்கும் பணியையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு செய்து வருகிறது.

ஆதிதிராவிட மக்களின் விடிவெள்ளி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டது ஆன்றோர்களையும், சான்றோர்களையும் போற்றிப் பாராட்டும் பண்புக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு உத்திரவாதம் அளிக்கும் உன்னதச் செயல்பாடுகளோடு இலங்கையில் உள்ள தமிழர்களும் சம உரிமையோடு வாழ வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் இயற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டார்கள். இந்த வகையில் எண்ணற்ற பணிகளை ஆற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஒவ்வொரு துறையிலும் முத்திரை பதிக்கும் சாதனைகளைப் படைத்து வருகிறது.

ஏழை, எளியோர், உழைப்பாளிகள், விவசாயப் பெருங்குடி மக்கள், மாணவ மாணவியர், மகளிர், ஆதரவற்றோர், அரசு ஊழியர், தொழிலாளர்கள், தொழில் துறையினர், வணிகர்கள் என எல்லா பிரிவினருக்கும் ஏற்ற திட்டங்களைத் தீட்டி அவர்கள் வாழ்வு வளம்பெற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைப்போடு பணியாற்றுகிறது.

இந்த வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு 100 நாட்களில் புரிந்த சரித்திர சாதனைகளைத் தொகுத்து செய்தி மக்கள் தொடர்புத் துறை சாதனை மலராக உங்கள் முன் படைத்துள்ளது. தமிழக அரசு துறைதோறும் ஆற்றிய நலத்திட்டப் பணிகள் இந்த மலரை அலங்கரிக்கின்றன. இந்த 100 நாள் சாதனை மலர் படிக்கின்ற பொதுமக்களுக்கு மட்டுமன்றி, மாணவச் செல்வங்களுக்கும் மக்கள் நலத் தொண்டர்களுக்கும், ஆய்வு மேற்கொள்வோருக்கும் மிகுந்த பயன் அளிக்கும் என்று நம்புகிறேன். கருத்துக்கு விருந்தளிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள 100 நாள் சாதனை மலர் உங்கள் உள்ளம் கவரும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் முன் வைக்கிறேன்.

★

# மாற்றம் தந்த மக்களுக்கு
# ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்



- காவல்துறையில் உள்ள நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களை உடனடியாக நிரப்ப இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- காவல் துறையில் பணியில் இருக்கும்போது மரணமடைந்த, 4 காவல் ஆளிநர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிருந்து ரூ.8 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
- சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல்துறைக்கு உறுதுணையாக செயல்படும் ஊர்க்காவல் படையினர் எண்ணிக்கை 11,622 லிருந்து 16,000 ஆக உயர்வு.
- ஊர்க்காவல் படையினரின் தினப்படி ரூபாய் 65/–லிருந்து 150/– ரூபாயாக உயர்வு.
- மத்திய அரசு அனுமதித்துள்ள 30 கூடுதல் கடலோர காவல் நிலையங்கள் கட்டுவதற்கு நிலம் கண்டறியப்பட்டது. கடலில் ஆபத்தில் சிக்கிய 3 படகுகளும் 15 மீனவர்களும் மீட்கப்பட்டனர்.
- ரேஷன் அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 191 வாகனங்களையும், 7,803 குவிண்டால் ரேஷன் அரிசி மற்றும் 40,656 லிட்டர் மண்ணெண்ணெயையும் கைப்பற்றி, 3,921 வழக்குகள்





பிரிவும், 7 காவல் ஆணையரகங்களில் ஒவ்வொரு பிரிவும், கரூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக, ஏனைய 28 மாவட்டங்களில் ஒவ்வொரு பிரிவும், ஆக மொத்தம் 36 நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பதிவு செய்து, 2,238 எதிரிகள் கைது செய்யப்பட்டு, அவர்களுள் 68 நபர்கள் கருப்புச் சந்தை தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர்.

- மணல் குவாரியில் திருட்டுத்தனமாக மணல் தோண்டுதல் மற்றும் மணல் கொள்ளை ஆகியவற்றை தடுக்கும் பொருட்டு தீவிர நடவடிக்கை தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டதின் விளைவாக 1,576 வழக்குகள் பதியப்பட்டு, 2,597 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதுடன் 2,963 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.
- நில மோசடி சம்பந்தமான நிகழ்நிலை புகார் தருவதற்காக பிரத்யேகமான வசதி தமிழ்நாடு காவல்துறை வலைதளத்தில் வழங்கப்பட்டுள்ளது. 2011 ஜூலை மாதத்தில் பெற்ற 731 புகார்களில் 78 புகார்கள் நில மோசடி சம்பந்தமானவை.
- இதுவரை 8396 புகார்கள் பெறப்பட்டு, 393 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 345 நபர்கள் கைது செய்யபட்டுள்ளனர். 631.39 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது. அவற்றின் மதிப்பு ரூ. 232.864 கோடி மதிப்பாகும்.
- இது தொடர்பாக தமிழ் நாட்டில் மாநில காவல் தலைமையகத்தில் ஒரு



- நில அபகரிப்பு வழக்குகளை மட்டும் கையாள 25 சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்திடவும், அதற்கென தொடரும் செலவினமாக ரூ. 5,46,75,000/– மற்றும் ரூ. 37,50,000/– தொடராச் செலவினமாகவும் அரசு அனுமதித்துள்ளது.
- பெருகி வரும் சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காக பொறியியல் சார்ந்த சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்காக 19 மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.19.60 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- பொறியியல் சாராத சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்காக 5 மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.3.22 கோடியும், சென்னை காவல் ஆணையருக்கு ரூ.2.18 கோடியும் புறநகர் காவல் துறை ஆணையருக்கு ரூ.1.99 கோடியும் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பணிகளுக்கு சென்னை காவல் துறை ஆணையர், புறநகர் காவல் துறை ஆணையர், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோருக்கு ரூ.33.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- தடய அறிவியல் துறை கணினிமயமாக்கப்பட்டு வருகின்றது.
- முதல் முறையாக 2011–2012 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்த திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூபாய் ஒரு இலட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. (ஒட்டு மொத்த செலவினம் ரூ.1,09,000.37 கோடி).
- ரூ.173.87 கோடி வருவாய் உபரி வரவு செலவுத் திட்டமதிப்பீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை 2.90 சதவீதம், அதாவது பதிமூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி 3 சதவீதத்திற்குள்ளாகவே உள்ளது.
- காவிரி பாசனப் பகுதியில், நடப்பாண்டில் 1.37 இலட்சம் எக்டரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக, மேட்டூர் அணையின் 64 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக ஜூன் 12–க்கு முன்னதாக, இந்த ஆண்டு குறுவை சாகுபடியினை சீக்கிரம் துவக்குவதற்கு 6.6.2011 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.
- ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலரும் ஒரு கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் அனைத்து தொழில் நுட்பங்களையும் முழுமையாகப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை சாகுபடியான 3.029 இலட்சம் எக்டரில் 1,62,000 எக்டரில் இத்தொழில்நுட்பம் பின்பற்றப்பட்டுள்ளது.
- கூட்டுறவுப் பயிர்க் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ.3,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 7.8.2011 வரை ரூ.882.18 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 9 மாவட்டங்களில் புதியதாக நிறுவப்பட்டுள்ள உயிர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி துவங்கப்பட்டுள்ளது.
- வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் தொழில் நுட்பங்கள் குறித்து 383 பயிற்சிகள் நடத்தப்பட்டு 19,150 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- 967 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.37.340 லட்சம் நிதி ஒதுக்கீட்டில், தோட்டக்கலை, கால்நடை, மீன்வளர்ப்பு, பட்டு வளர்ப்பு சார்ந்த செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- முன்னோடி விவசாயிகளின் வயல்களில் 57 உழவர் பள்ளிகள் அமைக்கப்பட்டு, 1,425 விவசாயிகள் பயன்பெறும் வகையில் முக்கிய தொழில்நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன.
- காவிரி பாசன பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் பணிமனை மற்றும் கண்காட்சி தஞ்சாவூர் மாவட்டத்தில் 31.07.2011 முதல் 04.08.2011 வரை 5 நாட்கள் நடைபெற்றது. இதில் சுமார் 7,400 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.
- மக்களின் உடல் நலத்திற்கும், சுற்றுச் சூழலுக்கும் கேடு விளைவிக்கும் நிரந்தர அங்கக மாசுபடுத்தி என்று ஸ்டாக்ஹோம் குழுமம், எண்டோசல்பான் பூச்சி மருந்தை பட்டியலிட்டதைத் தொடர்ந்தும், உச்சநீதிமன்றம் எண்டோசல்பான் பூச்சி மருந்திற்கு தற்காலிகத் தடை விதித்ததைத் தொடர்ந்தும், தமிழக மக்களின் நலன் காத்திட, தமிழக அரசு, தமிழகத்தில் எண்டோசல்பான் பூச்சி மருந்து உற்பத்திக்கும் விற்பனைக்கும் தடை விதித்துள்ளது. தமிழகத்தில் சுமார் ஒரு இலட்சம் லிட்டர் எண்டோசல்பான் மருந்துக்கு விற்பனை தடை ஆணை பிறக்கப்பட்டு முடக்கம் செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகளின் நிதிச் சுமையைக் குறைக்கும் வகையில், உரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 4% மதிப்புக் கூடுதல் வரியிலிருந்து (VAT), 12.07.2011 முதல் விலக்களித்ததன் மூலம் 50 கிலோ உர மூட்டை ஒன்றுக்கு ரூ.10/– முதல் ரூ.25/– வரை குறைந்துள்ளது.
- 12.7.2011 முதல் வேளாண் பயிர்ப் பாதுகாப்பு இடுபொருட்கள் (இரசாயன மருந்துகள்) மற்றும் விசைத் தெளிப்பான்களுக்கு நான்கு சதவிகிதம் மதிப்பு கூடுதல் வரியிலிருந்து (VAT) விலக்களிக்கப் பட்டுள்ளது.

- 21 இலட்சம் விவசாயிகளுக்கு விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 41 இலட்சம் விவசாயிகளின் வயல்களில் மண்மாதிரி சேகரிப்பு பணி நடைபெற்று வருகிறது.

- உதகமண்டலம் அரசு ரோஜாத் தோட்டத்தில் பாரம்பரிய ரோஜா ரகங்களை மட்டும் கொண்ட பூங்காவும், குன்னூர், காட்டேரி அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.30.7 இலட்சம் செலவில் பூங்காவும் உருவாக்கப்பட்டுள்ளது.

- நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் இதுவரை 1749 களப்பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

- நுண்ணீர்ப் பாசனத்திற்கு இதுவரை சிறு குறு விவசாயிகளுக்கு 75 சதவீதமாக வழங்கப்பட்ட மானியம், தற்போது 100 சதவீதமாகவும், இதர விவசாயிகளுக்கு 65 சதவீதமாக வழங்கப்பட்ட மானியம், தற்போது 75 சதவீதமாகவும் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

- அரசு தோட்டக்கலை பண்ணைகளில் 20.46 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

- சுமார் 40 பண்ணை மேலாளர்களுக்கு நடவுக் கன்றுகள் உற்பத்திப் பயிற்சியளிக்கப்பட்டது.

- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலமாக 4.46 இலட்சம் மெ.டன் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு, இதன் மூலம் ரூ.19.73 கோடி சந்தைக் கட்டணமாக வசூலிக்கப் பட்டுள்ளது.

- நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், 640 விவசாயிகளுக்கு ரூ.17.62 இலட்சம் செலவில் 16 பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

- 179 உழவர் சந்தைகளில் நாளொன்றுக்கு சராசரியாக ரூ. 3.78 கோடி மதிப்பிலான 2,598 மெ.டன் காய்கறி மற்றும் பழங்கள் 9,746 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 4.70 இலட்சம் நுகர்வோர்கள் பயனடைந்துள்ளனர்.

- துறையின் டிராக்டர்கள் மூலம் 54,294 மணி நேரம் உழவுப் பணிகள், மண்தள்ளும் இயந்திரங்கள் மூலம் 34,234 மணி நேரம் நில மேம்பாட்டுப் பணிகள், நெல் அறுவடை இயந்திரங்கள் மூலம் 8,646 மணி நேரம் அறுவடைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பாசனப் பகுதிகளில் 6,367 ஹெக்டேர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

- 13,324 எக்டேர் விதைப்பண்ணைகள் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கு பதிவு செய்யப்பட்டு 39,139 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 17,731 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 15,008 விதை மாதிரிகள் தரப்பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளது.



- 21,884 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளது

- 20,605 விதை உற்பத்தி யாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டுள்ளது.

- 3610.09 ஏக்கர் அங்ககச் சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.



- தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இவ்வருடம் புதியதாக துணைத் திட்டங்களுக்காக மத்திய அரசு ரூ.127.38 கோடி ஒதுக்கி அதற்கான திட்டங்களும் ஒப்பளிப்பு பெறப்பட்டது சிறப்புடையதாகும்.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதியில் மகளிருக்காக தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 19.6.2011 அன்று துவக்கி வைக்கப்பட்டு, ரூ. 615 இலட்சத்தில் அக் கல்லூரியில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. நடப்புக் கல்வியாண்டில் 39 மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

- ஏழு புதிய பயிர் இரகங்கள், மூன்று பண்ணைக் கருவிகள் மற்றும் ஆறு புதிய தொழில்நுட்பங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.7.2011 அன்று காணொலிக்காட்சி மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ரூ. 348 இலட்சம்



## மழை நீர் சேகரிப்பு

**"மாநிலம் முழுதும் உள்ள கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலம், மழை நீரின் ஒவ்வொருத் துளியையும் சேமிப்பதற்கான பெருந்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. கிடைக்கும் நீரை, திறம்படப் பயன்படுத்த, நீர்வரத்துப் பகுதி அணுகுமுறை இன்றியமையாததாகிறது. தமிழ்நாட்டில் வேளாண்மைக்குப் புத்துயிரளிக்க, இந்த அணுகுமுறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறேன்."**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், ரூ. 289 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

- அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பாட்டிற்காக ரூ. 46 இலட்சம் செலவில் கட்டப்பட்ட சமுதாயக்கூடம் திறந்து வைக்கப்பட்டது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 46 தினக்கூலி தொழிலாளர்களுக்கு நிரந்தர பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

- மூடப்பட்டிருந்த வழுதூர் எரிவாயு மின் நிலையம்–2 (92.2 மெகாவாட்) மீண்டும் 17.5.2011 அன்றும் மூடப்பட்டிருந்த குத்தாலம் எரிவாயு மின் நிலையத்தில் (101 மெகாவாட்) பாரத மிகுமின் நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட புதிய எரிவாயு நிலைப்பான் மாற்றப்பட்டு 28.5.2011 அன்றும் மீண்டும் இயக்கி வைக்கப்பட்டது.

- காரே பெல்மா செக்டர்–II நிலக்கரிப் பகுதியிலிருந்து நிலக்கரியை எடுப்பதற்கும் சுரங்க வளாக அனல் மின் நிலையம் அமைப்பதற்கும் ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- 53.25 கி.மீ. நீளமுள்ள 230 கி.வோ. மின் சுற்றுப் பாதை ஒத்தக்கால் மண்டபத்திலிருந்து பல்லடம் வரை 27.6.2011 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

- 400 கி.வோ. சுங்குவார்சத்திரம் துணை மின் நிலையம் அதனைச் சார்ந்த மின்னூட்டியையும் ரூபாய் 227.35 கோடி செலவில் 16.8.11 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

- 178 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளது.

- 2 மெகாவாட் அளவிற்கு சூரிய ஒளி மின் உற்பத்தி கூட்டப்பட்டுள்ளது.







- கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது 25,312 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 24,877 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்குகளில் 21,01,614 லிட்டர் கள்ளச்சாராயம், 2,19,232 லிட்டர் சாராய ஊறல், 49,074 லிட்டர் எரிசாராயம் மற்றும் இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட 403 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. 2,18,495 அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

- கிராமப்புர ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் ''சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்'' இந்த அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 60,000 பசுமை வீடுகள் வீதம் ஐந்து வருடங்களுக்கு சுமார் 3,00,000 வீடுகள் கட்டித்தரப்படும். நடப்பாண்டில் (2011–12) கிராமப் புரங்களிலுள்ள வீடற்ற ஏழை எளிய மக்களுக்கு ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி அளவில், ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய ஒளி மூலம் மின்வசதிபெறும் 60,000 பசுமை வீடுகள் ரூ.1,080 கோடி செலவில் கட்டித்தரப்படும்.

- ஊராட்சித் தலைவர்களுக்கு மாத மதிப்பூதியம் ரூ.1,000/– வீதமும் அமர்வுத் தொகை ரூ.100/–ஆக உயர்த்தியும் உறுப்பினர்களுக்கு அமர்வுத் தொகை ரூ.50/–ஆக உயர்த்தியும் வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- 9 மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு அரசு ரூ.750 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

- குடிநீர் விநியோகத்தை சீரமைத்திட 54 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்க கலந்தாலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவினை நிறைவேற்றும் வகையில், சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டத்தின் (Mass Cleaning Programme) கீழ், சென்னை மாநகராட்சியின் 10 மண்டல அலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

- சென்னையில் பல்வேறு இடங்களில் புதிய தெரு விளக்குக் கம்பங்கள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோயம்பேடு மேம்பாலம் அருகே இரண்டு உயர்கோபுர மின்கம்ப விளக்குகளும், அங்கிருந்து மதுரவாயல் செல்லும் சாலையில் 250 வாட் சோடியம் ஆவி விளக்குகளுடன் கூடிய 12 புதிய தெரு விளக்குகளும் நிறுவப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் 85 எண்ணிக்கையில் Induction வகை தெருவிளக்குப் பிட்டிங்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

- 10 மண்டலங்களில் ரூ.1.67 கோடி செலவில் மேம்பாட்டுப்பணிகளும் பல்வேறு இடங்களில்

## கல்வி

**“கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதே எனது கோட்பாடாகவும் எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது”**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்



சாலைப்பணிகள் ரூ.4.01 கோடி செலவிலும் முடிக்கப்பட்டுள்ளன. 8 மழைநீர் தூர்வாரும் பணிகள் ரூ.14 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

- தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களுக்கும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்திட பெரும் திட்ட வரைவு தயாரிக்க மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ஆய்வுப்பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

- ஆந்திர மாநிலம், கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து இதுவரை சுமார் 3.244 டி.எம்.சி நீர் பெறப்பட்டது. மீண்டும் தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஆந்திரபிரதேச அரசு 2 டி.எம்.சி. அளவு நீரை கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து வழங்குவதற்காக 16.08.2011 அன்று திறந்துவிட்டுள்ளது.

- ஐந்து மாத இடைவெளிக்குப் பிறகு வீராணம் ஏரியிலிருந்து 18.7.2011 முதல் சுமார் 180 எம்.எல்.டி. குடிநீர் சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- போதுமான அழுத்தத்துடன் சமச்சீரான அளவில் குடிநீர் வழங்குவதற்காக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 8 மண்டலங்களில் வால்வுகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சுமார் 130 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் போரூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.12.36 கோடி மதிப்பீட்டில் முடிக்கப் பட்டது.



- கடந்த 2001–03 ஆண்டுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைப்பது கட்டாயமாக்கப்பட்டது. மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அனைத்து கட்டடங்களிலும் ஏற்படுத்தியதால் சென்னை மாநகரில் நிலத்தடி நீர்மட்டம் சராசரியாக 20 அடி என்கின்ற அளவிற்கு உயர்ந்தது. அதைப் போன்று நீரின் உப்புத் தன்மை சராசரியாக 2000 பிபிஎம் என்கின்ற அளவிற்கு நீரின் தரம் மேன்மையடைந்தது. எனவே, மழைநீர் சேகரிப்பு பயன்களை தொடர்ந்து பொதுமக்கள் பெறுவதற்காக மீண்டும் கடந்த ஆண்டுகளைப் போன்றே மக்களிடம் சென்றடைவதற்காக மக்கள் இயக்கமாக மாற்றப்படும். இதற்காக தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாணவர் சமுதாயத்தின் மூலமாகவும், மகளிர் சுயஉதவி குழுக்கள் மூலமாகவும் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி மழைநீர் சேகரிப்பின் பயன்களை தொடர்ந்து மக்கள் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

- சுமார் 22,000 சிறு தேயிலை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் கூடுதல் விலையாக ரூ.11.20 கோடி அளித்துள்ளது.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க இதுவரை ரூ.25 கோடி மூலதன மானியம், ரூ.3 கோடி மின்னாக்கி மானியம், ரூ.1 கோடி மதிப்புக் கூட்டு வரி மானியம் மற்றும் ரூ.2.25 கோடி குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்பட்டுள்ளன.



- உள் கட்டமைப்பு திட்டத்தின் மூலம் 4 இடங்களுக்கு சுமார் ரூ.12.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.
- கரூர் மாவட்டம் ஆத்தூர் தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.3.97 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
- சிட்கோவை புனரமைக்க நில விலை நிர்ணயம் கொள்கை திருத்தியமைத்தல், நடைமுறைகளை எளிமையாக்கல், அதிகாரத்தை பரவலாக்குதல், மின் ஆளுகை நடவடிக்கை உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 1.7.2011 முதல் சமையல் எரிவாயு மீதான 4 விழுக்காடு மதிப்புக் கூட்டுவரிக்கு விலக்களித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்மூலம் ஒரு சிலிண்டரின் விலையில் ரூ.14.73 குறைக்கப்பட்டு 1.36 கோடி நுகர்வோர்கள் பயனடைந்துள்ளனர்.
- 12.07.2011 முதல் இரசாயன உரங்கள், புழுபூச்சிக்கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள், தாவர வளர்ச்சி சீராக்கிகள் ஆகியவற்றிற்கு 4 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 12.7.2011 முதல், மனித ஆற்றலால் இயங்காத அல்லது மிருகங்களால் இயக்கப்படாத வேளாண் உபகரணங்கள், திவலைப் பீற்றிகள், தெளிப்பான்கள், சொட்டு நீர்ப் பாசன சாதனங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் மற்றும் துணைக்கருவிகள் போன்றவற்றிற்கு 4 விழுக்காடு மதிப்புக் கூட்டுவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

## நிலத்தடி நீரை உயர்த்துவோம்

**“நிலத்தடி நீர் மட்டம் குறைந்துகொண்டே வருவதாலும், அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினாலும், தமிழ்நாடு கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது. எனவேதான், மழை நீர் சேகரிப்புத் திட்டம், மழை நீரை, நிலத்தடி நீருடன் இணைத்துப் பயன்படுத்தும் திட்டம், நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தொடங்கிச் செயற்படுத்தி வருகிறேன்.’’**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- உள்ளாட்சி அமைப்புகளிடம் உரிமம் பெற்று வணிகம் செய்யும் சிறு வணிகர்களும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர்ந்து கொள்ளலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.100/– செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியுள்ளது.
- அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் சிறப்பான திட்டத்தினைப் படிப்படியாக செயல்படுத்த அரசு திட்டம் வகுத்துள்ளது.



## மதச்சார்பின்மை

**"சமூகத்தில் அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிகாண முடியும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளை இனியும் அனுமதிக்க முடியாது என்பதும் உறுதி செய்யப்பட வேண்டும். மதச்சார்பற்ற கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கு வழி காண முடியும் என்ற ஒரு நம்பிக்கையையும் சிறுபான்மையினருக்கு ஏற்படுத்திட வேண்டும்".**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- புதிதாக 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

- சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துடன் ஒருமுகமாக இணைக்க, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

- முதன்முறையாக இவ்வாண்டு கல்லூரிக்கல்வி இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் வரும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பணியிட மாறுதல் ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு முறையில் வழங்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் ஆசிரியர் பட்டப்படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர்களுக்கிடையே பணிமூப்பு வரிசையை ஒழுங்குறத் தரவரிசைப்படுத்தும் பட்டியல் வெளியிடப்படாமல் இருந்த சூழ்நிலையில், போர்க்கால ரீதியில் பட்டியல் விரைந்து தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது உளவியல் நெறிமுறையில் தயாரிப்பது (Heuristic Algorithm) இதுவே முதன் முறையாகும். இணையதளத்திலும் பலர் காண இத்தகவல் வெளிடப்பட்டது மேலும் ஒரு சிறப்பாகும்.

- தேனி மாவட்டம், போடி நாயக்கனூரில் புதிய பொறியியல் கல்லூரி தொடங்கப்படவுள்ளது.

- தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதி மாணவர்கள் பொதுப் பிரிவின் கீழ் தரவரிசையின் அடிப்படையில் முதலாமாண்டு பி.இ., பி.டெக்., மாணவர் சேர்க்கையில் கலந்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. மேற்கண்ட வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தக் கல்வியாண்டிலிருந்து (2011–2012) மேற்கண்ட வகையைச் சார்ந்த மாணவர்கள் பி.இ. பி.டெக் நேரடி இரண்டாமாண்டு எம்.பி.ஏ., எம்.சி.ஏ., எம்.இ., எம்.டெக் போன்ற முதுகலைப் பாடப்பிரிவுகளில் சேர அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

- 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் தமிழகத்திலுள்ள முதல் பட்டதாரிகளில்லாத குடும்பங்களில் ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிற் கல்லூரிகளில் பயிலும் முதல் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. 2011 – 2012 ஆம் கல்வியாண்டில் இருந்து தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மாணவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி செயல்படுத்தப்பட்டுள்ளது.

- ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 89 மாணவர்களுக்கு பி.இ., பி.டெக்., பட்டப் படிப்பினைத் தொடர்வதற்கு ஏதுவாக தலா ரூ.25,000/– வீதம் ரூ.22,25,000 முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.



- அரசு கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறையில் வகுப்புகளை கையாள்வதற்கு ஏதுவாக 1,661 கௌரவ விரிவுரையாளர்கள் மாதம் ரூ.6,000/– தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்காக ரூ.9.96 கோடி ரூபாய் நிர்வாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக இருந்த 32 இரண்டாம் நிலை முதல்வர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

- 2011–12 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு/நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

- நடப்பாண்டில் தரம் உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர்களின் நலன் கருதியும் தமிழ் மொழிப் பாடத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் 9 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

- அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணாக்கர்களிடையே அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையிலும் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டும் இணைப்புப் பயிற்சி (Bridge Course) நடத்தப்பட்டுள்ளது.

- இந்தியாவிலேயே முதன்முறையாக 65 கல்வி மாவட்டங்களில் மாணவர்களின் நலன்களைப் பேணும்வகையில் இயன் மருத்துவ முகாம் (Physiotherapy) நடத்தப்பட்டுள்ளது.

- மாணாக்கர்களின் உடல்நலம், மனநலம் பேணும் வகையில் அனைத்துப் பள்ளிகளிலும் யோகா (Yoga) பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

- கிராமப்புரத்தில் இருக்கும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை ஊக்கப்படுத்தி, சென்னையில் உள்ள நவீன விளையாட்டரங்கங்களில் மாநில விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

- உலகத் திறனாய்வுத் திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் வீரர்களைக் கண்டறிந்து அவர்கள் விளையாட்டில் மெருகூட்டப்பட தலைசிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சியும், மனரீதியாகவும், சத்துணவு பற்றியும் விளையாட்டு மருத்துவம் சம்பந்தமாகவும் ஆலோசனை வழங்கப் பட்டது.

- ரோயிங் விளையாட்டை தமிழ்நாட்டில் பரப்புவதற்காக 10 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப் பட்டது.

- ரூ.17.81 கோடி செலவில் வனங்களின் பராமரிப்புப் பணிகள் மற்றும் தேக்கு மரத்தோட்டங்களில் ரூ.6.08 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் மற்றும் ரூ.3 கோடி செலவில் 37.772 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கோவை மாவட்டத்தில் வன விலங்குகள் வனத்தைவிட்டு வெளியேறாமல் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும், வன உயிரினங்களின் தாக்குதலால் நிகழும் இழப்புக்களைக் களையவும் ரூ.4.30 கோடி செலவில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு உயிர்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் செயல்படுத்த திட்ட அமலாக்கம் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

- ரூ.22.35 கோடி மதிப்புள்ள 49.447 டன் சந்தன மரக்கட்டைகள் பொதுஏலம் மற்றும் நேரடி விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- ரூ. 75 இலட்சம் மதிப்புள்ள தேக்குமரக்கட்டைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- 15 நிகழ்வுகளில் மனித உயிரிழப்பிற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் ரூ.22.50 இலட்சம் நிவாரணத் தொகையாகவும், முதலமைச்சர் நிவாரணநிதியிலிருந்து 9 நிகழ்வுகளில் ரூ.9.00 இலட்சம் கூடுதல் நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.



**சேமிப்பு**

**“சிறு துளி பெரு வெள்ளம்” என்ற பழமொழி, சிக்கனம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. எனவே, மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைகளுக்காகச் சேமிப்பது அவசியம். மக்களின் சேமிப்பு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் உதவுவதால், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது.”**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- தைலமரத் தோட்டங்களை உருவாக்க 39 இலட்சம் தைலமரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

- முந்திரித் தோட்டங்களை உருவாக்க 65,000 முந்திரி உயர் ரக வீரிய ஒட்டுக்கன்றுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

- காகித ஆலை நிறுவனங்களுக்கு 48,300 மெட்ரிக் டன் மரக்கூழ் மரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ரூ. 12.24 கோடி வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

- அதிக பால் உற்பத்தி தரக்கூடிய வீரிய இன ரப்பர் கன்றுகள் 270 எக்டேர் பரப்பளவில் நடப்பட்டுள்ளன.

- மிகவும் குறைந்த பால் உற்பத்தித் திறனுடைய 42030 ரப்பர் மரங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் மொத்தம் ரூ.13.09 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.

- ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில், ரூ.351 கோடி செலவில், 1,445 கி.மீ. நீள சாலைகளில் அகலப்படுத்துதல் / மேம்படுத்தும்




பணிகள் மற்றும் 59 பாலங்கள் / சிறு பாலங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- சேலம் மற்றும் திருச்சியில் தர உறுதி மற்றும் ஆராய்ச்சியின் மண்டல ஆய்வகக் கட்டடங்கள் தலா ரூ.20 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டன.

- நபார்டு வங்கி கடன் உதவித் திட்டத்தில், நடப்பு நிதியாண்டில் ரூ.23.31 கோடி மதிப்பிலான 23 சாலைகள் (105 கி.மீ.) மேம்படுத்தப்பட்டுள்ளன. ரூ.49.71 கோடி செலவில் 17 பாலப் பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

- இரயில்வே பணித் திட்டத்தில், ரூ.75.07 கோடி செலவிடப்பட்டுள்ளது. தாம்பரம் ரயில் நிலையம் அருகில் சாலை மேம்பாலம் ரூ.78.84 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. நபார்டு திட்டத்தின் கீழ் கி.மீ. 9/2 மன்னார்குடி – திருவாரூர் சாலையில் ரூ.271.34 இலட்சத்தில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஹட்கோ திட்டத்தின் கீழ் கி.மீ. 12/10 நாகூர் – நன்னிலம் – நாச்சியார் கோவில் சாலையில் ரூ.215.65 இலட்சத்தில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில், 91.50 கி.மீ நீள சாலைப் பணிகள் ரூ. 30.38 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பராமரிப்புப் பணிகள் திட்டத்தில் 33.42 கி.மீ நீள சாலைப் பணிகள் ரூ. 18.51 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டத்தில் 95.30 கி.மீ நீள சாலைப் பணிகள் மற்றும் 2 பாலப் பணிகள் ரூ. 17.67 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

- பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், ஆண்டுக்கு 135.00 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், சுமார் 32.46 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எடுத்து வந்துள்ளது. கன்னியாகுமரியில் 3 படகுகளின் மூலம் சுமார் 5.03 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்றதன் வாயிலாக ரூ.100.47 இலட்சம் கட்டண வருவாய் ஈட்டியுள்ளது.

- திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் உள்ளிட்ட 323 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் நடத்தப்பட்டன.

- 39 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.608.02 இலட்சத்திற்கும், 11 திருக்கோயில்களின் திருப்பணியை உபயதாரர்கள் மூலம் செய்திட ரூ.355.20 இலட்சத்திற்கு மதிப்பீடும், 36 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.225.18 இலட்சம் நிதியுதவியும் வழங்கப்பட்டன.

- 5 திருத்தேர் திருப்பணிகளுக்கு ரூ.36.20 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

- 47 திருக்கோயில்களுக்கு கோபுரம் மற்றும் விமானங்களின் பாதுகாப்புக்காக இடிதாங்கி

அமைத்திட ரூ.87.87 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.



● மொழிபெயர்ப்புப் பணிகளுக்கு அறிஞர்கள் குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

● அரசு மைய அச்சகத்தினை நவீனமயமாக்கும் பொருட்டு ரூ.1.10 கோடி மதிப்பில் ஒரு CTP இயந்திரம் நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

● ரூ.94.15 இலட்சம் மதிப்பில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்திட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

● பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அல்லது இந்திய அரசிடமிருந்து நிதி உதவி பெறுவதற்காக முதன்முதலாக கட்டடங்களின் உறுதித் தன்மை சான்றிதழ் இந்திய தரக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

● வழக்குகள் நீதிமன்றத்திற்கு செல்லும் முன்பாகவே நட்பான முறையில் விசாரித்து தீர்வு காண்பதற்காக மாற்று வழி தீர்வு மையம் அமைக்க ரூ.4.20 கோடி செலவில் உயர்நீதிமன்ற வளாகத்தில் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

● ரூ.2.40 கோடியில் சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் ஆண்களுக்கான விடுதி 3 தளங்களாகக் கட்டப்பட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

● ரூ.4.35 கோடி செலவில், சென்னை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள விபத்து மற்றும் பிசியோதெரபி கட்டடத்தின் நான்காவது மற்றும் ஐந்தாவது தளங்கள் அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

● புதிய தொழில் கொள்கை 2011ஐ வகுக்கவும், தொலைநோக்குத் திட்டம் 2025ஐ தயாரிக்கவும், புதிய நில எடுப்புக் கொள்கையை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



● மதுரை–தூத்துக்குடி நெடுஞ்சாலையை, தற்சார்புடைய தொழில் வளர்ச்சிப் பெருவழிப் பாதையாக உருவாக்குவதற்கு விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு–தனியார் பங்களிப்பு அடிப்படையில் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

● சிப்காட் ஒரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் எய்சர் மோட்டார்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அங்கமான ராயல் என்பீல்ட் நிறுவனத்தால் ரூ.350 கோடி முதலீட்டில்



ஆண்டொன்றுக்கு 1.50 இலட்சம் இரு சக்கர மோட்டார் தயாரிப்பதற்கான தொழிற்சாலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 50 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் முனைவோருக்கு வழங்கும் கடனுக்கான வட்டி வீதத்தை வெளிச்சந்தை வட்டி வீதத்தை விட 3% குறைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ரூ.200 கோடி மூலதனத்தில் நாளொன்றுக்கு 100 டன் மெல்லிழை காகிதம் தயாரிக்கும் காகித இயந்திரத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையைக் குறைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் வெளிநாடுகளிலிருந்து சிமெண்டினை இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சர்க்கரை ஏற்றுமதியை ஊக்குவிக்கும் புதிய அரசின் கொள்கைக்கேற்ப ஜூலை மற்றும் ஆகஸ்ட் 2011 மாதங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கட்டுப்பாடற்ற பொது உரிம அடிப்படையில், மத்திய அரசு வழங்கிய அனுமதியின்படி உரிமத்தின் விற்பனை அடிப்படையில் சர்க்கரை ஏற்றுமதி செய்யாமலேயே கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.8.53 கோடி நிகர இலாபம் கிடைத்துள்ளது.

- கட்டுமான பொருட்களின் விலை செங்கல் ஒன்றுக்கு ரூ.1/–ம், ஒரு லாரி லோடு (2 யூனிட்) ஜல்லிக்கு ரூ.700/–ம் விலை குறைக்கப்பட்டு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- தொழிற்சாலைகளுக்கு வழங்கும் இசைவாணைகளை துரிதமாக வழங்க ஏதுவாக, இணையதளம் மூலமாக நேரடியாக விண்ணப்பத்தினை பதிவு செய்யும் முறை 15.6.2011 அன்று துவங்கப்பட்டது.

- திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தத் தேவைப்படும் நிதிக்காக தமிழக அரசு சார்பில் ரூ.200 கோடி வட்டியில்லாக் கடனாக வழங்கப்படும். மேலும் 28,596 விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு ரூ.18 கோடியே 38 இலட்சம் உடனடியாக வழங்க முடிவு செய்துள்ளது.

- 421 அமைவு இசைவாணைகளையும் 415 இயக்குவதற்கான இசைவாணைகளையும் தொழிற்சாலைகளுக்கு வழங்கியுள்ளது. மேலும் சுற்றுச்சூழல் பாதிக்கச் செய்த 31 தொழிற்கூடங்களை சட்டப்படி மூட உத்திரவிட்டுள்ளது.

- சமூகப் பொருளாதார அடுக்கின் அடித்தட்டுப் பிரிவைச் சார்ந்த மாணவ/மாணவியர் வளர்ந்து வரும் உலக தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் பங்குகொள்ள ஏதுவாக ரூ.912.00 கோடி இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் பன்னிரண்டாம்



வகுப்பு மாணவர்களுக்கும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும், பல்கலை தொழில் நுட்ப பயிலகங்களில் படிக்கும் மாணவ/ மாணவியர்களுக்கும் இலவச மடிக்கணினி வழங்கப்படும்.

- இத்திட்டத்தின்படி 2011–2012ஆம் நிதியாண்டில் ஏறத்தாழ 9.12 இலட்சம் மாணவ/மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.
- பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது – செப்டம்பர், 15, 2011 அன்று மாணவ/ மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் தொடங்கப்படும்.
- இலவச மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்திற்காக ரூ.1250 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- அரிசி பெறத் தகுதியுடைய குடும்பங்களைச் சார்ந்த ஏறக்குறைய 1.85 கோடி மகளிருக்கு இலவச மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. நடப்பு நிதியாண்டு 2011–2012இல் 25 இலட்சம் குடும்பங்களுக்கு மேற்கண்ட சாதனங்கள் வழங்கப்படும்.
- மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் பணி, செப்டம்பர் 15, 2011 அன்று முதல் துவங்கப்படும்.
- பட்டா மாறுதல் நிகழ்வுகளில் ஏற்படும் காலதாமதங்களைக் களைவதற்காகவும் வழிமுறைகளை எளிதாக்கி விரைவாக பட்டா மாறுதல்கள் மேற்கொள்ளவும் பட்டா மாறுதல் விண்ணப்பிக்கும் முறையில் மாற்றம் செய்து 8.7.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.
- கிராம நிருவாக அலுவலர்கள் தமது கிராமங்களில் பொதுமக்களின் விண்ணப்பங்களைப் பெற்றிடும் வகையில், திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் (கூடுதல் பொறுப்பு கிராமங்களில்) ஒதுக்கப்பட்டுள்ளது.
- அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வெள்ளிக்கிழமை பட்டா மாறுதல் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் நில அளவை அலுவலர்கள் அனைவரும் வட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமையன்று முழு நேரமும் இந்தப்பணியில் ஈடுபடுவர்.
- பட்டா மாறுதல் உத்தரவுகளைப் பொறுத்தவரை அதிகாரிகளுக்கு உத்தரவுகளை வழங்க ஒரு காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.07.2011 அன்று திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டத்தில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் இத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி மாநிலம் முழுவதும் 2,45,475 பட்டா மாற்றம் கோரும் மனுக்கள் பெறப்பட்டு, 2,22,811 மனுக்களின் மீது பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளன.
- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தில் 2,780 விவசாயக் குடும்பங்களுக்கு 45 ஆண்டுகளாக குடியிருப்பு வீடுகளுக்கு பட்டா கோரிய கிராம மக்களின் நீண்டகால கனவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நனவாகியது.
- கச்சத்தீவை மீட்பது தொடர்பாக, உச்சநீதிமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்த ரிட் மனுவில் வருவாய்த்துறை தன்னை இவ்வழக்கில் சேர்த்துக் கொள்ளும்படி, உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 09.06.2011 அன்று தீர்மானித்தது. அதனடிப்படையில் வருவாய்த்துறை வழக்கில் தன்னையும் இணைத்துக்கொள்ள ஆணை உறுதி

### அந்த நாள்

**‘ஏழ்மை கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே!’ என்று நாம் மகிழ்ச்சிப் பண் பாட வேண்டும்! அந்த நாள் வர வேண்டும்!.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

வாக்குமூலம் (affidavit) ஒன்றை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

- மாணவர்கள் 10ஆம் வகுப்பில் பள்ளிகள் வாயிலாகவே வகுப்பு / இருப்பிட / வருமான சான்றிதழ்களை பெற முதல் காலாண்டிலேயே அதாவது செப்டம்பர் 30க்கு முன் தலைமையாசிரியர்களிடம் விண்ணப்பித்துக் கொள்ள பள்ளி கல்வித்துறை மூலமாக செயல்படுத்தலாம் எனவும் அப்பள்ளி தலைமை ஆசிரியரால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் உரிய வட்டாட்சியருக்கு அக்டோபர் 15க்கு முன் அனுப்பிடவும் வட்டாட்சியர்கள் உரிய விசாரணை செய்து தகுதியின் அடிப்படையில் சான்றிதழ்களை தலைமை ஆசிரியருக்கு டிசம்பர் 31க்கு முன் அனுப்பிட வேண்டும் எனவும் இச்சான்றிதழ்களை ஜனவரி மாதத்திற்குள் மாணவர்களுக்கு தேர்வுக்கு முன்னர் வழங்கிட வழி செய்யும் அரசாணை வெளியிடப்பட்டது.

- தீ விபத்துகளினால் சேதமடையும் குடிசைகளுக்கு உடனடியாக நிவாரண உதவிகள்: முழுவதுமாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.2000/–லிருந்து ரூ.5000/– ஆகவும், பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.1000/–லிருந்து ரூ.2500/– ஆகவும், நிவாரண உதவித்தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

- முதியோர் ஓய்வூதிய ஆணைகள், வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் பட்டா மாறுதல் தொடர்பான ஆணைகளை உடனுக்குடன் மக்களுக்கு வழங்க ஏதுவாக அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றினை ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது புதன் கிழமையன்று கிராமத்திற்கு அனுப்பி மனுக்களைப் பெற்று பதிவு செய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பெறப்படும் அனைத்து மனுக்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பல்வேறு துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராமத்திற்கு (அடுத்த மாதம்) செல்லும் நாளன்று மனுதாரர்களுக்கு முடிவான பதில் வழங்கப்பட வேண்டும் என்று அரசாணை (நிலை) எண்.244, வருவாய்த் துறை, நாள் 08.08.2011 ஆணையிடப்பட்டுள்ளது.

### மத நல்லிணக்கம்

**“நில இயலில், இனத்தில், கலாச்சாரத்தில், மதத்தில் பன்முகங்களைக் கொண்ட தொன்மையான நாகரிகம் தான் இந்தியா. நம் நாட்டின் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொள்ளும் போது உயிர்த்துடிப்பான மத நல்லிணக்கத்தின் மூலமே நம் நாட்டின் ஒற்றுமையைப் பேண முடியும். நமது சமுதாயத்தில் உள்ள பல்வேறு சமூகங்களின் பலதரப்பட்ட கலாச்சார, மதக் கோட்பாடுகளின் கலவைதான் இந்தியாவின் மதச்சார்பின்மை. நம் நாட்டில் வழக்கத்தில் உள்ள பல்வேறு மதங்கள் ஒன்றாக வாழ்வதுதான் ‘சர்வ தர்மா சம்பவா’ என்கிற தத்துவமாகும்.”**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகப் பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாள் விழா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 7.7.2011 அன்று அரசு சார்பில் சென்னையில் கொண்டாடப்பட்டது.

- தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தினை 18.7.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள்.

- சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் ரூ.39 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.7.2011 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ஜுலை 2011இல் தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடத் தரைத்தளத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறை ரூ.20 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு 3.8.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டட தரைதளத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில் நிருபர்களுக்கும், ஒளிப்பதிவாளர்களுக்கும் போதிய அளவு இடவசதி இல்லாத காரணத்தால் ஒளிப்பதிவாளர்களுக்காக கூடுதல் இடவசதி ஒதுக்கீடு ஜுலை 2011இல் பெறப்பட்டது.

- மூன்று ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ.5000/– வீதம் வழங்க ஜுலை 2011இல் ஆணையிடப்பட்டது.

- பத்திரிகையாளர் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம்/ பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி விண்ணப்பங்களை பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை வழங்கும் புதிய பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழு ஆகஸ்டு 2011இல் அமைத்து அரசாணை வெளியிடப்பட்து.

- திருநெல்வேலி அரசுப் பொருட்காட்சி 03.07.2011 அன்று துவங்கி 45 நாட்கள் நடைபெறும். இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் பார்வையிடுவர். அரசுக்கு உத்தேச வருவாய் சுமார் ரூ.65.00 இலட்சம்.

- சேலம் அரசுப் பொருட்காட்சி 07.08.2011 அன்று துவங்கி 60 நாட்கள் நடைபெறும். மூன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் பார்வையிடுவர். அரசுக்கு உத்தேச வருவாய் சுமார் ரூ.85 இலட்சம்.

- இதுவரை மாவட்டங்களில் 23 தனியார் பொருட்காட்சிகளுக்கு அனுமதி. இதன்மூலம் முதலமைச்சரின் பொது நிவாரணநிதிக்கு வருவாய் ரூ.11.82 இலட்சம்.

- பெங்களூருவிலுள்ள இந்திய தேசிய சட்டப் பள்ளியினைப் போன்று 'தேசிய சட்டப்பள்ளி' ஒன்று ஸ்ரீரங்கம் தொகுதியில் நிறுவிட அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி, மதுரை அரசு சட்டக் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி ஆகியவற்றில் காலியாக இருந்த முதல்வர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டன.

- சிறைவாசிகளுக்கு மனரீதியாக மனவளப் பயிற்சி அளித்திட ஏதுவாக அனைத்து மத்திய சிறைகளிலும் புதிதாக ஒன்பது மனஇயல் நிபுணர் பணியிடங்கள் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- சென்னையிலுள்ள அரசு அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்திர உணவுக் கட்டணத்தை, 800 ரூபாயில் இருந்து 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

- மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 75 சதவீதமாக வழங்கப்பட்டு வந்த மானிய உதவிகள் நடப்பு 2011–2012–ஆம் ஆண்டு முதல் 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு இலவசமாக சொட்டு நீர்ப்பாசன வசதி அமைத்துத் தரப்படும். இதன் மூலம் 1,000 விவசாயிகள் பயனடைவார்கள்.

## என் விருப்பம்

**"ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற இலக்கை நான் கொண்டுள்ளேன். தமிழகத்தை முன்னெடுத்துச் செல்வதிலும், இந்த இலக்கை அடைவதிலும் அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற என்னுடைய கூர் நோக்கை மெய்யாக்குவதில் ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்துச் செயலாற்ற வேண்டும் என்பதே என் விருப்பம் ஆகும்.''**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்



- மல்பரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், புழுவளர்ப்பு மனை அமைத்தல், கிருமி நாசினிகள் விநியோகம் மற்றும் பட்டு பல்நோக்கு மையம் அமைத்தல் போன்றவைகளுக்காக 1,548 விவசாயிகளுக்கு திட்ட உதவிகளாக ரூ.3.14 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் பணிபுரிந்து வரும் கைவினைஞர்களுக்கு 100 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 90 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

- இந்நிறுவனம் தொடர்புடைய சுமார் 100 கைவினைஞர்களுக்கு அவர்கள் சுயமாக உற்பத்திக் கூடம் அமைத்து தொழில் முனைவோராக செயல்படுவதற்கு "கைவினைஞர் தொழில் முனைவராகிறார்" என்ற புதிய திட்டத்தின் கீழ் தேவைப்படும் கடன் தொகைகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற அரசு நிதி நிறுவனங்களின் மூலம் வழங்குவதற்கு இக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

- தமிழ்நாட்டில் உள்ள 108 முக்கியத் திருக்கோயில்களில் தங்க ரதம் இழுப்பவர்களுக்கும் மற்றும் பக்தர்களுக்கும் / சுற்றுலாப் பயணிகளுக்கும் கிடைக்கும் வகையில் அந்தந்த திருக்கோவில்களில் உள்ள கடவுள் திருவுருவங்கள் பதிக்கப்பெற்ற பித்தளை விளக்குகளை உற்பத்தி செய்து வழங்குவதில் இக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

- ரூ. 22.3 கோடி மதிப்பில் கதர் உற்பத்தியும், ரூ. 46.5 கோடி மதிப்பில் கிராமத் தொழில்கள் உற்பத்தியும். ரூ. 52.38 இலட்சம் மதிப்பில் கதர் விற்பனையும், ரூ. 56.5 கோடி மதிப்பில் கிராமத் தொழில்கள் விற்பனையும் செய்யப்பட்டுள்ளது.

- முதன்முறையாக நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் வாசனைப் பொருட்களின் திருவிழா சுற்றுலாத் துறையின் சார்பில் 23.05.2011 மற்றும் 24.05.2011–ல் நடத்தப்பட்டது.

- ஆடி மாதத்தில் "108 அம்மன் கோயில்கள்" ஆன்மீகச் சுற்றுலா 18.7.2011–இல் துவக்கப்பட்டது.

- மதுரை அருகே நாகனாகுளத்தில் படகு சவாரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் தமிழ்நாடு சுற்றுலா தகவல் மையம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை





● அருங்காட்சியக "செய்தி மலர்" மற்றும் வேதியியல் பிரிவில் பழம்பொருட்களைப் பாதுகாத்தல் பற்றிய கையேடு வெளியிடப் பட்டது.

● அரசு அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்கள் பற்றிய (சீனா, ரோமானியா மற்றும் வெனிசுலா) புத்தகம் வெளியிடப்பட்டது.

● விருதுநகர் மாவட்ட அருங்காட்சியகத்தில் "செப்புப் பட்டய புகைப்படக் கண்காட்சி" ஜுலை மாதத்தில் நடத்தப்பட்டது.

● திருவாரூர் மாவட்ட அருங்காட்சியகத்தில் "மரபுச் சார்ந்த பழங்குடிப் பொருட்கள்" பற்றிய சிறப்பு கண்காட்சி நடத்தப்பட்டது.

ரூ.500/–லிருந்து, ரூ.1000/–ஆக உயர்த்தப்பட்டு 76,407 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறுகின்றனர். ஆண்டு செலவினம் ரூ.92.28 கோடியாகும்.

- மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் திருமண நிதி உதவித் தொகையான ரூ.25,000/– உடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கமும் இலவசமாக வழங்கும் திட்டத்தில் 300 பேர் பயன்பெற ரூ.1,05,32,400 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பட்டயம் அல்லது பட்டப்படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.25,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தியும், அத்துடன் திருமாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் இலவசமாக வழங்கும் திட்டத்தின் மூலம் 190 மாற்றுத் திறனாளிகள் பயன்பெற ரூ.1,14,20,520/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சிறுவர் அருங்காட்சியகத்தில் முதல் முறையாக "தானியங்கி ஒலி விளக்கக் கருவி" பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.
- "அருங்காட்சியக அரும்பொருட்கள் பாதுகாப்பு" என்ற தலைப்பில் 37–ஆவது வேதியியல் பாதுகாப்பு புத்துணர்வு பயிற்சி ஒரு மாதத்திற்கு நடத்தப்பட்டது.
- சேலம் மாவட்ட அருங்காட்சியகத்தில் "பாம்புகள் பற்றிய புகைப்படக் கண்காட்சி" ஜுலை மாதத்தில் நடத்தப்பட்டது.
- சிவகங்கை மாவட்ட அருங்காட்சியகத்தில் "வன உயிரினங்கள்" என்ற தலைப்பில் சொற்பொழிவு மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டது.
- தொல்லியல் துறையால் சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் 132 கல்வெட்டுக்கள் மைப்படி எடுக்கப்பட்டுள்ளன.
- பழம்பொருட்கள் பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் 86 கலைப்பொருட்கள் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தமிழ் ஓலைச் சுவடிகள் 3,320 பக்கங்கள் எண்மியல் (Digital) படம் எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.



- இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் 5 திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ் பயன்பெறும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்டு வரும் நிதி உதவி தொகையான ரூ. 25,000/–த்துடன், திருமாங்கல்யம் செய்வதற்காக, 4 கிராம் தங்கம் (22 காரட்) இலவசமாக வழங்கும் திட்டம் மற்றும் பட்டதாரி /பட்டயப்படிப்பு முடித்துள்ள பெண்களின் திருமணத்திற்கு ரூ.50,000/–நிதி உதவி மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்காக 4 கிராம் தங்கம் (22 காரட்) இலவசமாக வழங்கும் திட்டம் 06.06.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டன.

- சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், அனைத்து திருமண நிதி உதவித் திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஒய்வூதியத் திட்டங்கள் ஆகிய திட்டங்களை தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளன.



- சமூகப் பாதுகாப்பு ஒய்வூதியத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஒய்வூதியத் தொகையினை ரூ.500/–லிருந்து ரூ. 1000/–ஆக உயர்த்தி மே 2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சி விதிமுறைகள் மற்றும் நிபந்தனை களை பின்பற்றாததால் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஈரோடு, 23.02.2011 முதல் மூடப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மூடப்பட்டிருந்த இவ்வாலையை உடனே திறக்க வேண்டிய நோக்கத்துடன் மாசு கட்டுப்பாடு வாரியம் விதித்த அபராதத் தொகை ரூ.1,11,46,363/– முழுவதையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு செலுத்தப்பட்டது. மூடப்பட்டிருந்த இவ்வாலை 10.06.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வீடியோ கான்பரன்சிங் முறையில் துவக்கி வைக்கப்பட்டு, ஆலையின் உற்பத்தி மீண்டும் தொடங்கப்பட்டது.

- திருப்பூர் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் மாசுடன் கூடிய சாயக்கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து நடைமுறைப் படுத்துவதற்கு இரண்டு தொழில்நுட்பங்கள் சாத்தியமானது என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த இரண்டு



உறுப்பினர்களுக்கு தற்போது தனிநபர் ஒய்வூதியமாக வழங்கப்படும் ரூ.450/–ம், குடும்ப ஒய்வூதியமாக வழங்கப்படும் ரூ.550/–ம் உயர்த்தப்பட்டு மாதம் ரூ.1,000/– ஆக வழங்க நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 2,21,347 நெசவாளர் உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

- கடந்த ஏப்ரல் 2011 முதல் ஜூலை 2011 வரையிலான சில்லறை விற்பனை ரூ.2687.39 இலட்சமாகும். இது கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் நடைபெற்ற ரூ.2626.44 இலட்சம் விற்பனையைக் காட்டிலும் ரூ.61.00 இலட்சம் கூடுதல் விற்பனையாகும்.

தொழில்நுட்பங்களில் ஏதாவது ஒரு தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்த அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் தேவைப்படும் நிதியான ரூ.200 கோடியை வட்டியில்லாக் கடனாக அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

- ஒவ்வோர் ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை ஒட்டி இலவச வேட்டி–சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் பயன்பெறுவதோடு அல்லாமல், கைத்தறி, விசைத்தறித் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. வரும் 2012 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ரூ.269 கோடி மதிப்பில் உத்தேசமாக 159.04 இலட்சம் சேலைகளும் 158.19 இலட்சம் வேட்டிகளும் 3.18 கோடி பயனாளிகளுக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் சுமார் 13,000 கைத்தறி நெசவாளர்களுக்கும், 41,000 விசைத்தறி தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

- தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியத்தில் உள்ள நெசவாளர்

- அடுத்த கல்வி ஆண்டு முதல் பள்ளிக் குழந்தைகளுக்கு 4 செட் சீருடைகள் இலவசமாக வழங்கப்படும். 6ஆம் வகுப்பு முதல் பயிலும் மாணவர்களுக்கு, இதுகாறும் வழங்கி வந்த அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், மாணவியருக்கு பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார்கமீசும் வழங்கப்படும். இந்த சீருடை வழங்கும் திட்டத்திற்காக, ரூ.202.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- கடந்த ஏப்ரல் 2011 முதல் ஜூலை 2011 வரையிலான கால கட்டத்தில், பிரதம நெசவாளர் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட சரக்குகளுக்காக, ரூ.3,314 இலட்சம் கோ–ஆப்டெக்ஸ் பணப்பட்டுவாடா செய்துள்ளது.

- திருநெல்வேலியில் அமைந்துள்ள எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் சின்டெல் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்நிறுவனம் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் முதற்கட்டமாக சுமார்

ரூ. 120 கோடி முதலீட்டில் 2 இலட்சம் சதுரடியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டப்படவிருக்கிறது. இதன் மூலம் சுமார் 2000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் நேரடி வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

- எல்காட், திருச்சியில் 50,000 சதுரடியில் கட்டிமுடித்துள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காவில் 6668 சதுரஅடி இடத்தினை திருவாளர்கள் ஐ லிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் சுமார் 70 தகவல் தொழில்நட்ப வல்லுநர்கள் நேரடி வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

- வேலைவாய்ப்பகங்களில் நேரடி பதிவு செய்ய ஒரு இணையதளம் ஒன்றை எல்காட் உருவாக்கியுள்ளது. இந்த சேவை மூலமாக மாணவர்கள் மற்றும் விண்ணப்பதாரர்கள், பதிவு மற்றும் பதிவை புதுப்பித்தலை வேலை வாய்ப்பகம் செல்லாமலே நேரடியாக செய்யமுடியும்.

- அரசு கேபிள் டிவி நிறுவனத்தை உயிர்ப்பித்து மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து கேபிள் சேவையை நியாயமான கட்டணத்தில் வழங்குவதற்கு இந்த நிறுவனத்தை புதுப்பித்து செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதுடன் கடைக்கோடியில் உள்ள உள்ளூர் கேபிள் டிவி இயக்குபவர்கள் பாதிக்காத வகையில் தனியார் கேபிள் டிவி சேவை அரசுடைமை ஆக்கப்படும்.

- இப்பணியினை மேற்கொள்ள இந்நிறுவனத்திற்கு ஒரு தலைவர் மற்றும் ஒரு நிர்வாக இயக்குனர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தமிழ்நாடு முழுவதும் உள்ள சுமார் 40,000 ஆப்பரேட்டர்களில் 94 சதவீதம் பேர் அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் இணைய விரும்பி விண்ணப்பித்துள்ளனர்.

- அனைத்து அரசுத்துறைகளும், பொதுமக்களும், தமிழக அரசின் அங்கமாக அறிவிக்கப்பட்டுள்ள ஒருங்குறியைப் (UNICODE) பயன்படுத்த ஏதுவாகத் தமிழ் விசைப்பலகை இயக்கி மற்றும் எழுத்துருக்கள் அடங்கிய தமிழ்நாடு அரசு தமிழ்க்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது அரசு இலவசமாக வழங்க இருக்கும் மடிக்கணினிகளில் பயன்படுத்தப்படும்.

## நல்ல அரசின் இலக்கணம்

**“ஒளிவு மறைவற்ற, திறமை மிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பதுதான் ஒரு நல்ல அரசின் இலக்கணம் என்பது எனது எண்ணமாகும். அந்த இலக்கணத்திற்கு ஏற்றவாறு அரசு இயந்திரத்தையும், அதன் அங்கமான அரசுப் பணியாளர்களையும் முழுமையாகப் பயன்படுத்தி, அரசால் வகுக்கப்படும் திட்டங்கள் சிறப்புடன் செயல்படுத்தப்படவும், அதன் பயன்கள் யாவும் மக்களுக்கு உரிய நேரத்தில் திட்டமிடப்பட்டவாறு சென்றடையச் செய்திடவும், எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. அரசுப் பணியாளர் ஒத்துழைப்புடன் இந்தப் பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.”**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- பல்கலைக்கழகங்கள் திரட்டித் தந்த கலைச்சொற்களைச் சீராய்வு செய்து, 14 தொகுதிகளாய்ப் பதிப்பிக்கப்பட்ட கலைச்சொல் பேரகராதிகள் தற்போது தேடுதல் வசதியுடன் குறுந்தகடு வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- 150 மின்நூலகப் புத்தகங்கள் ஒருங்குறிக்கு (UNICODE) மாற்றப்பட்டு இணையதளத்தில் இடப்பட்டுள்ளன.

- குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகள் மின்நூலகத்தில் சேர்க்கப்பட உள்ளன.

- நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழறிஞர்களின் 1478 நூல்கள் இணையதளப்படுத்தப்பட்டுள்ளன.

- இணைய வகுப்பறைப்பாடங்களில் 12 பாடங்களுக்கான ஒலி ஒளிக்காட்சிகள் தற்போது தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

- 2011–2012ஆம் ஆண்டில் ஆதிதிராவிட துணைத் திட்டத்திற்காக 5,007 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாநிலத்தின் ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 21.27 விழுக்காடாகும்.

- ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் விடுதிக் கட்டடங்கள் பழுது பார்த்தல் / அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.76.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னையிலுள்ள 21 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளை மேம்படுத்த ரூ.6.57 கோடி செலவில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

- சுய தொழில் தொடங்கும் நபர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் அளவு உச்சவரம்பு ஏதுமின்றி 30 விழுக்காடு மானியத் தொகையுடன் 7.5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வாடகைக் கட்டடத்தில் உள்ள 93 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி இந்த ஆண்டே தொடங்க ரூ.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆதிதிராவிடர் பள்ளி மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது. கல்லூரி மாணவ, மாணவியருக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகளாகவும் நிலை உயர்வு.

- 779 பள்ளிகளில் கழிவறை வசதிகளை ஏற்படுத்துவதற்காக, சிறப்பு மானியமாக 15.58 கோடி ரூபாய் அனுமதி.

- 10 இலட்சம் ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட உயர் படிப்பிற்கு கல்வி உதவித் தொகை வழங்க 238.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு இலவச மிதி வண்டிகள் வழங்க 43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மகளிருக்கு நலத் திட்டங்கள்

**“நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத் திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் எவருமே இருக்கக்கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள் ”**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

- பழங்குடியினர் நலனுக்கென ரூ.246 கோடி பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், மூலப்பாடி கிராமத்தில் ரூ.4.95 இலட்சம் செலவில் தடுப்பணைகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

- தாட்கோ நிறுவனத்திற்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் பங்கு மூலதனமாக 26 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்படவுள்ளது.

- 19.06.2011 அன்று திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதியில் பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு இரண்டு புறநகர் மற்றும் மூன்று நகர பேருந்துகள் புதிய வழிதடத்திலும் மேலும் மூன்று நகரப் பேருந்துகள் தடநீட்டிப்பும் ஒரு புறநகர் பேருந்து தடமாற்றம் செய்தும் மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும், 18.07.2011 அன்று நான்கு புதிய நகர பேருந்துகள் புதிய வழித்தடத்திலும் மற்றும் ஒரு புறநகர் பேருந்து தட நீட்டிப்பு செய்தும் காணொலிக் காட்சி வாயிலாக கொடியசைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

- மாற்று திறனாளிகளின் நலன் கருதி அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் மாற்று திறனாளிகளுக்கு டிசம்பர் மூன்றாம் தேதி சர்வதேச மாற்று திறனாளிகள் தினத்தையொட்டி ஊதியத்துடன் கூடிய சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- மோனோ இரயில் திட்டத்தினை சென்னை பெருநகரப் பகுதியில் விரைவாக செயல்படுத்திடும் பொருட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆறு உறுப்பினர்கள் கொண்ட அதிகாரம்பெற்ற குழு (Empowered Committee) அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) அவர்களின் தலைமையில் 25.07.2011 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மோனோ இரயில் திட்டத்தினை விரைவாக செயல்படுத்த மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினை முகமை நிறுவனமாகவும் (Nodal Agency) மற்றும் நிருவாக இயக்குநர், மாநகரப் போக்குவரத்துக் கழகம் அவர்களைத் திட்ட இயக்குநராகவும் (Project Director) நியமித்து ஆணைகள் வெளியிடப்பட்டு சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Report) தயார் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவி ரூ.1000லிருந்து ரூ.2000ஆக உயர்த்தப்பட்டு, 1.6 இலட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு ரூ.32 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டம் பெரியமாங்கோடு மீனவ கிராமத்தில் மொத்தம் ரூ.4.72 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது.

- அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் நாகூர் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும்

பணிக்கு ரூ.10.79 கோடிக்கு ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் ரூ. 50 இலட்சம் செலவில் குழாய் பனிக்கட்டி நிலையம் (Tube ice plant) அமைத்திட பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் மூலம் 1,224 மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 82.18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வாங்கிட 20% மானியமாக ஒரு நபருக்கு ரூ. 3000/– வீதம் 1,111 மீனவர்களுக்கு மொத்தம் ரூ. 33.33 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் கீழ் 195 சிறு இறால் பண்ணை விவசாயிகளுக்கு ரூ.2 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்கள் பயனடையும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் அரிசி 1.6.2011 முதல் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தற்போது 1,85,31,983 அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்கள் மாதந்தோறும் பயனடைந்து வருகிறார்கள். ஜுன் 2011 மற்றும் ஜுலை 2011 ஆகிய மாதங்களில் 6,83,239 மெட்ரிக் டன்கள் அரிசி விநியோகிக்கப்பட்டது.

- பொது விநியோகத் திட்டத்தில் ரூ.375 கோடியில், மாதந்தோறும் 1.97 கோடி குடும்பங்களுக்கு மானிய விலையில் அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, கோதுமை மாவு ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

- பொது விநியோகத் திட்டத்தில் 100 நாட்களில் மானிய விலையில் 6,83,239 மெட்ரிக் டன்கள் அரிசி, சர்க்கரை 70,304 மெட்ரிக் டன்கள், கோதுமை 26,975 மெட்ரிக் டன்கள், துவரம் பருப்பு 24,782 மெட்ரிக் டன்கள், உளுத்தம் பருப்பு 18,397மெட்ரிக் டன்கள், பாமாயில் 29,218 கிலோ லிட்டர் கோதுமை மாவு 6508 மெட்ரிக் டன்கள் மளிகைப் பொருட்கள் 1,14,370 பொட்டலங்கள் ஆகியவை வழங்கப்பட்டு 1,96,75,978 குடும்பங்கள் மாதந்தோறும் பயனடைந்து வருகின்றனர்.

- சென்னை, சிந்தாமணி சிட்கோ நகர் 3 என்ற நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்டிருந்த 232 தொழுநோயால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்காக புதிய பகுதி நேர நியாயவிலைக் கடையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.6.2011 அன்று திறந்து வைத்தார்கள். தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக தொழுநோயாளிகளுக்கெனத் தனி பகுதி நேர நியாயவிலைக் கடையை இந்த அரசு அமைத்துள்ளது.

- 13.05.2011 முதல் 31.07.2011 வரை 6659 திடீர் சோதனைகள் செய்யப்பட்டுள்ளன மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955–இன் கீழ் 2360 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட அத்தியாவசியப் பொருள்களின் விவரம்:–

| | | |
|---|---|---|
| பொது விநியோகத் திட்ட அரிசி | – | 1598 மெட்ரிக் டன் |
| பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் | – | 80,352 லிட்டர் |
| பெட்ரோல் | – | 170 லிட்டர் |
| LPG சிலிண்டர்கள் | – | 3078 |

- கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குதலை பராமரித்தல் சட்டம் 1980இன் கீழ் 74 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்கூறிய கடும் நடவடிக்கைகளினால் பொது விநியோகத் திட்டம் பொருட்களை கள்ளச் சந்தைக்கு திசை திருப்புவது பெருவாரியாகத் தடுக்கப்பட்டுள்ளது.

- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் பொருட்டும், ஏழை எளியவர்கள் விலைவாசி உயர்வால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களை 20.07.2011 அன்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் **திருமதி ஹிலாரி கிளின்டன்** அவர்கள் சந்தித்து தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களுக்குப் பாராட்டைத் தெரிவித்தார்.

பொருட்டும், அரசு சிறப்பு பொது விநியோகத்திட்டத்தை 31.12.2011 வரை நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது. பருப்பு வகைகள், செறிவூட்டப்பட்ட பாமாலின் சமையல் எண்ணெய் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் ரூ.25/– மதிப்பிலான 10 மளிகைப் பொருட்கள் அடங்கிய மசாலா பாக்கெட் சிறப்புப் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

- தொழிற்தகராறுகள் சட்டம், 1947 பிரிவு 2–ன் கீழான உடன்பாடுகளைச் செயல்படுத்தவும் தொழிலாளர் நீதிமன்ற தீர்வங்களையும் நடைமுறைப்படுத்து வதற்காகவும் இவ்வரசு மாநிலத்தில் தொழிலாளர் நீதிமன்றங்களின் எட்டு தொகுப்புகளுக்கு செயலாக்கப் பணியமைப்பை உருவாக்க முடிவு செய்துள்ளது. ஒரு தலைமை நிர்வாக அலுவலர் உட்பட 34 பதவிகளை ஒவ்வொரு தொகுப்பிற்கும் ஏற்படுத்த மொத்தம் 8 தொகுப்பிற்குமாக ஆண்டுக்கு ரூ.4.30 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை ரூ. 27.42 இலட்சம் செலவில் உருவாக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் வருவாய் வசூல் சட்டத்தின் பிரிவு 33(சி)(1)–ன்படி தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய தொகையை வசூல் செய்வதற்காக அரசினை அணுகி சான்றிதழ் பெறும் நீண்ட நடைமுறை முடிவுக்கு கொண்டுவரப்படும்.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால், முதன்முறையாக பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேறியவர்களுக்கு அவர்கள் படித்த பள்ளிகளிலேயே ஆன்லைன் மூலம் வேலைவாய்ப்பு பதிவு செய்யப்பட்டது. இதன் மூலம் பத்தாம் வகுப்பில் 7.02 இலட்சம் மாணவர்களுக்கும், பன்னிரெண்டாம் வகுப்பு தேறிய 4.08 இலட்சம் மாணவர்கள் இதனால் பயனடைந்துள்ளனர்.

- மக்களின் உயிர்காக்கும் சிகிச்சைக்காக, நடப்பு ஆண்டில் வழிகாட்டும் நெறிமுறைகளுடன் கூடிய முதலமைச்சரின் விரிவாக்க மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த அரசு ரூ. 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டவும், உபகரணங்கள் வாங்குவதற்கும், சிறப்பு அறைகளுக்கு குளிர்சாதன வசதிகள் குளிர்சாதன வசதியுடன் கூடிய அமரர் கிடங்கு அமைக்கவும் மூன்று முதன்மை குடிமை மருத்துவர் பணியிடங்கள் உருவாக்குவதற்கும் ரூ.392.91 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் கால்நடை ஆய்வாளர் பயிற்சி பெற்ற 154 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை 2 ஆக கால்நடை பராமரிப்புத் துறையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

- இலவச கறவை மாடு வழங்கும் திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளுக்கு 60000 கறவை பசுக்கள் ரூ.232 கோடியில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. 2011–2012 நிதியாண்டில் இலவச 12000 கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.56/– கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- இலவச ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் 5 ஆண்டிற்கு ரூ.925/– கோடி செலவில் 7 இலட்சம் குடும்பங்களுக்கு ஆடு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.56/– கோடியில் 1 இலட்சம் குடும்பங்களுக்கு தலா நான்கு ஆடுகள் வழங்கப்பட உள்ளது.

- நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் செயற்கை முறை கருவூட்டல், வெள்ளாடு/ செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் பசுந்தீவனம் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

- 2011–12ஆம் ஆண்டிற்கு 5500 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடத்திட ரூ. 231 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை நிலையத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், மற்றும் செயற்கை முறை கருவூட்டல், நோய் தடுப்பூசி மருந்துகள் 385 வட்டங்களிலும் ஒரு வட்டத்திற்கு ஒரு முகாம் வீதம் கால்நடை பாதுகாப்பு திட்டம் கிராமங்களில் செயல்பட்டு வருகிறது.

- 2011–12ஆம் ஆண்டில் அஸ்காட் திட்டத்தின் கீழ் நோய் தாக்கக் கூடிய மாவட்டங்களில் கால்நடைகளுக்கு அடைப்பான் நோய், ஆட்டம்மை, தொண்டை அடைப்பான் மற்றும் சப்பை நோய் ஆகியவற்றிற்கான தடுப்பூசி பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது.

- கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 40.01 இலட்சம் டோஸ்கள் கோமாரி நோய்த் தடுப்பு மருந்துகள் தற்போது 19 மாவட்டங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு கால்நடைகளுக்கு முதல் சுற்று தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ஈச்சங்கோட்டை அயலின பெருக்குப் பண்ணைக்கு 2 முர்ரா பொலிகாளை கன்றுகளும் மற்றும் உதகை கால்நடைப் பண்ணைக்கு 7 கலப்பின ஜெர்சி, 4 ஹோல்டீன் பிரிசியன் பொலிகாளைக் கன்றுகளும் வாங்கி வழங்கப்பட்டன.

- 58 படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு வீடுகளுக்கே சென்று செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ளும் பொருட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தை சார்ந்த 70 கிராம நிலைப் பணியாளர்களுக்கு ஈரோடு தேசிய பால்வள வாரியத்திலும் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறையில் பணியாற்றும் 143 கால்நடை ஆய்வாளர்களுக்கு ஈச்சங்கோட்டை அயலின பெருக்குப் பண்ணை பயிற்சி நிலையத்திலும், கால்நடை இனப்பெருக்கம் குறித்த மறு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பணியாற்றும் 7 கால்நடை மருத்துவர்களுக்கு பெங்களூர் அசர்கட்டா மத்திய உறைவிந்து உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- ஈச்சங்கோட்டை அயலின பெருக்குப் பண்ணை மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் பயிற்சி நிலையங்களை பலப்படுத்த தலா ரூ.5.00 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- 19 பயிற்சி பெற்ற படித்த கிராமப்புற இளைஞர்கள் மற்றும் 4 ஓய்வுபெற்ற கால்நடை மருத்துவர்கள் / ஆய்வாளர்களுக்கு வீடுகளுக்கே சென்று கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணியினை மேற்கொள்ள தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஏப்ரல் 2011இல் நாளொன்றிற்கு 17.73 இலட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி, மே 2011இல் 20.84 இலட்சம் லிட்டராக உயர்ந்து, ஜுலை 2011ல் 23.07 இலட்சம் லிட்டர் என்ற நிலையை எட்டியுள்ளது.

- 999 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் புதியதாகத் துவங்கப்பட்டுள்ளன.

- பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பணப்பட்டுவாடா நிலுவை இல்லாமல் வழங்க ஏதுவாக இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களுக்கு ரூ.49.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- தீவிர பால் பெருக்கத் திட்டத்தைச் செயல்படுத்த புதுக்கோட்டை ஒன்றியத்திற்கு ரூ.2.996 கோடியும், விருதுநகர் ஒன்றியத்திற்கு ரூ.2.999 கோடியும் அனுமதி அளித்துள்ளது.

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஓய்வுப் பெற்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் எட்டு உறுப்பினர்களுடன் 05.07.2011 முதல் ஓராண்டுக் காலத்திற்கு திருத்தியமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வழங்கிய பரிந்துரையினை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் 50 விழுக்காடு இடஒதுக்கீட்டினை வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து கடைபிடிக்க 11.07.2011 அன்று அரசு ஆணை வெளியிட்டது.

- கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் ஒன்பது பள்ளிகளை நிலையுயர்த்தவும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்படும் ஆண்டுப் பராமரிப்பு மானியம் நான்கு இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தவும் முடிவு.

- பிரமலைக் கள்ளர் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில், நடப்பாண்டில், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பாலர் பள்ளியுடன் கூடிய 15 ஆங்கில வழிப் பள்ளிகள் தொடங்க முடிவு.

- விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக 2011–2012–ஆம் ஆண்டு திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

- விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு தற்போது அளிக்கப்படும் மாத உணவுப்படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு 19 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிருவாக மானியமாக தற்போது வழங்கப்பட்டுவரும் 45 இலட்சம் ரூபாய், ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி வழங்க முடிவு.

- உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 2400–இலிருந்து 2600 ஆக உயர்த்தப்பட முடிவு.

- உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தில் தற்போது 750 ரூபாயாக உள்ள மாதாந்திர ஓய்வூதியம் 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

- வக்ஃப் வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவை யிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக்கொடைகளை வழங்க ஒருமுறை மானியமாக மூன்று கோடி ரூபாயை வக்ஃப் வாரியத்திற்கு வழங்க அரசு முடிவு.

* * *

**ஓ. பன்னீர்செல்வம்**
நிதி அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி

எல்லா மனிதர்களும் பல்வேறு சாதனைகளைத் தங்களது வாழ்க்கையில் புரிந்திருக்கலாம். ஆனால் சாதனைகளையே சரித்திரமாகக் கொண்ட சாதனைச் சிற்பி, சாதனைகளையே வாழ்க்கையாகக் கொண்டு வாகை சூடிவரும் வானத்து விடிவெள்ளி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களது அரசின் 100 நாள் சாதனைகள் எண்ணிடலங்கா. எத்தனை, எத்தனை ஏழை, எளியோர் நலத் திட்டங்கள், எத்தனை, எத்தனை மகளிர் நலத்திட்டங்கள், விவசாயிகளின் நலத்திற்கு எத்தனையோ திட்டங்கள். இந்த நூறு நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செய்த சிறப்பான சாதனைகளும், செயல்படுத்திய சீர்மிகு திட்டங்களும் ஏராளம்! பயனடைந்தோர் ஏராளம், ஏராளம்!

ஐந்து வருட காலத்திற்குள் ஓர் அரசு செய்ய வேண்டிய சாதனைகளை நூறு நாட்களிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது அரசு செய்து முடித்துவிட்டது போன்ற உணர்வு, அனைத்துத் தமிழர்களுக்கும், தமிழ்ச் சமுதாயத்தினருக்கும் ஏற்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை,

- பாழ்பட்டுக் கிடந்த தமிழகத்தை 100 நாட்களில் சீர்படுத்தியது.
- சீர்கெட்டுக் கிடந்த சட்டம்–ஒழுங்கை 100 நாட்களில் நேர்படுத்தியது.
- வீழ்ந்து கிடந்த ஜனநாயகத்தின் மாட்சியை 100 நாட்களில் மீண்டும் மலரச் செய்தது.
- பல மாதங்களாகத் தீர்க்க முடியாத திருப்பூர் சாயத் தொழிலாளர் பிரச்சினைக்கு ரூ.200 கோடி வட்டியில்லா கடன் வழங்கி 100 நாட்களில் தீர்வு கண்டது.
- முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அப்பாவி மக்களுடைய அபகரிக்கப்பட்ட நிலத்தை மீட்டெடுக்க, 100 நாட்களில் காவல்துறையில் தனிப்பிரிவு ஏற்படுத்தியதோடு, அவற்றை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்தியது.

2006 முதல் 2011ஆம் ஆண்டு வரையிருந்த ஆட்சிக் காலம் மக்களாட்சி வரலாற்றில் இருண்ட காலம். தமிழர்கள் அனைவரும் மிரண்டு கிடந்த காலம். முந்தைய ஆட்சியாளர்களால் சிதைந்து, உருக்குலைந்து கிடந்த தமிழகத்தின் பெருமையை, தமிழர்களின் கௌரவத்தை மீண்டும் மலரச் செய்ததோடு, மக்களாட்சியின் மாண்பினையும், மகத்துவத்தையும் நிலைநாட்டியுள்ளது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைத் தீர்ப்பதில் இரட்டை வேடம் போட்டவர்கள் மத்தியில், அவர்களது இன்னல்களைக் களைய, அவர்கள் இழந்த உரிமைகளை சிங்களர்களுக்கு நிகராகப் பெற்றுத்தர போராடி வருகிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்விற்காக, இலங்கையின் மீது பொருளாதார தடை கொண்டு வரவேண்டும் என்றும், கச்சத்தீவினை மீட்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், சட்டசபையில் சாதுர்யமாகவும், துணிச்சலாகவும் தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் உலகத் தமிழர்களின் நம்பிக்கைக்குரிய ஒரே தலைவியாகவும், உலகத் தலைவர்களுள் ஒருவராகவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவெடுத்துள்ளார்கள்.

தமிழர்களின் எதிர்காலத் தலைமுறை ஏற்றமுற, தமிழகம் தலைசிறந்த மாநிலமாகத் திகழ, "தமிழ்நாடு 2025 தொலைநோக்குப் பார்வைத் திட்டம்" தயாரித்து சாதனை புரிந்த தன்னிகரில்லா தலைவியாக உள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இந்தியாவின் முதுகெலும்பானதும், முதன்மைத் துறையானதுமான வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை

மற்றும் மீன்வளத்துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்து முதலிடம் அளித்ததோடு, 75 இலட்சம் சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சிக்கென பண்ணை சார் சிறப்புத் திட்டத்தைக் கொண்டுவந்ததன் மூலம் விவசாயிகளின் குடும்பங்களில் குதூகலத்தை ஏற்படுத்தியுள்ளது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழைகளின் வாழ்வாதாரத் திட்டங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது மாபெரும் சாதனை. மேலும், வருகிற ஐந்தாண்டுகளில் 7 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு, தலா ரூ.12,000 மதிப்புள்ள நான்கு ஆடுகளையும், 60,000 கறவை மாடுகளை வழங்கவும் ஆணையிட்டுள்ளவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள். அது மட்டுமின்றி, மாணவர்களுக்கென 9.12 இலட்சம் இலவச மடிக்கணினிகள் வழங்கும் மகத்தான திட்டத்தையும், அறிவித்து செயல்படுத்தியிருக்கிறார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்.

எதிர்காலத் தமிழகத்திற்கு நிலை நிறுத்தப்பட்ட வளர்ச்சித் (Sustainable Development) திட்டங்களை வாரி வழங்கி சாதனை படைத்திருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. 2011ஆம் ஆண்டிலிருந்து 6 ஆண்டுகளுக்குள் ரூ.745.49 கோடி செலவில் 104 அணைக்கட்டுகளைப் புனரமைக்கும் திட்டம், பசுமைக் குடில்கள் அமைக்கும் திட்டம், புதிய, புதிய மின் திட்டங்கள் துவக்கும் திட்டம், ஓராண்டிற்குள் தமிழகத்தில் மின் வெட்டே இல்லாமல் ஆக்கும் திட்டம், நதிகளை இணைக்கும் பிற மாநிலங்களுக்கான முன்னோடித் திட்டம், மோனோ இரயில் திட்டம், பல்வேறு பாலங்கள், தடுப்பணைகள் கட்டும் திட்டம், 100 அரசு, மாநகராட்சி, நகராட்சி பள்ளிகளைத் தரம் உயர்த்தும் திட்டம், போன்ற தொலைநோக்குத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இவை மட்டுமின்றி, ஏழைப் பெண்களுக்கு இலவச திருமண உதவித் திட்டங்கள், பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான உதவித் தொகை உயர்த்தும் திட்டம் போன்ற மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தியன் மூலம் சான்றோர், ஆன்றோர் நெஞ்சங்களிலும், ஆதரவற்றோர் உள்ளங்களிலும் குடிகொண்டுள்ள குல விளக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். மேலும், மாதந்தோறும் இருபது கிலோ அரிசியை ஏழைகளுக்கு இலவசமாக வழங்கியதோடு, இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கும் இனிய விழா எடுத்தது மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லரசு.

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்கள் சக்தியின் துணையோடு தமிழர்களின் வாழ்விற்கு இடையூறாக இருந்த அரசியல் பார்த்தீனியச் செடிகளை அகற்றினார். மக்கள் தந்த அதிகாரத்தின் துணையோடு நில வளம், நீர்வளம் ஆகியவற்றுக்கு இடையூறாக இருக்கும் பார்த்தீனியச் செடிகளையும் மாநிலம் முழுவதும் அகற்ற உத்தரவிட்டுள்ளார்.

அறிவுசார் சமூக மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டத்தினை உருவாக்கியதன் மூலம் உலக அரங்கில் தமிழக இளைஞர்கள் உயரங்களை எட்ட உதவி செய்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் மக்களரசாகும்.

இவற்றைத் தவிர, 5 ஆண்டுகளில் சூரிய சக்தியில் எரிகின்ற ஒரு இலட்சம் தெருவிளக்குகள் அமைக்கும் திட்டம், 11 புதிய அரசு கலை–அறிவியல் கல்லூரிகள் அமைக்கும் திட்டம், திருச்சி அரசு மருத்துவமனையில் 100 கோடியில் சிறப்பு சிகிச்சை மையம் அமைக்கும் திட்டம், புதிய காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 4 வருடங்களில் 4 இலட்சம் ரூபாய் வழங்கும் மக்கள் நல்வாழ்வுத் திட்டம் முதலாக மாற்றுத் திறனாளிகள், திருநங்கையினர், சிறுபான்மையினர், நெசவாளர்கள், பத்திரிகையாளர் உட்பட பலதரப்பட்டோருக்கும் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த பண்பாளர் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களைத் தவிர, தமிழகத்தில் இதுவரை வேறு எவருமில்லை.

மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்தின் அளவினை ஒரு இலட்சம் கோடியை மிஞ்சுமாறு செய்ததோடு மட்டுமின்றி, 2011–12ஆம் ஆண்டு ரூ.173.87 கோடி வருவாய் உபரி ஏற்படக்கூடிய வகையில் திட்டங்களைத் தீட்டியது தீர்க்கதரிசியான மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வரலாற்றுச் சாதனை.

திட்டங்கள் தீட்டி இதுபோன்று இந்திய நாடே வியக்கத்தகு அளவில் மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்தியுள்ள நூறு நாள் சரித்திரச் சாதனைகள் என்பது ஒரு முன்னோட்டம்தான். இச்சாதனைகள் பார் வியக்கும் வண்ணம் மேலும், மேலும் தொடரும் என்பது திண்ணம்.

✶

**கே.ஏ. செங்கோட்டையன்**
வேளாண்மைத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# விவசாயிகளின் நலம் காக்கும் கருணை உள்ளம்

**மா**ண்புமிகு **தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், ஒட்டுமொத்த தமிழக மக்களின் ஆதரவோடு, மூன்றாவது முறையாக தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, தொலைநோக்குச் சிந்தனையோடு நாள்தோறும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, மக்கள் வியக்கும் வண்ணம் அதனை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் வாழ்கின்ற அனைத்து மக்களும் நாம் ஏன் தமிழகத்தில் பிறக்கவில்லை என்ற சிந்தனையை உருவாக்குகின்ற வகையில் சரித்திரச் சாதனை படைத்து வரும் இத்தருணத்தில் 100 நாட்கள் சாதனை மலரை வெளியிடுவதில் பேருவகையும் பெரு மகிழ்ச்சியும் அடைகிறேன்.

வளர்ந்துவரும் தமிழகத்தில் மகளிர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட, ஸ்ரீரங்கம் தொகுதியில், மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை துவக்கியது. காவிரி டெல்டா பகுதி பாசன விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேம்பட, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக 62 ஆண்டுகளுக்கு பிறகு ஜுன் 6 ஆம் தேதி தண்ணீர் திறந்து விட்டிருப்பது சரித்திர வரலாற்றில் ஒரு மாபெரும் சாதனையாகும். சொட்டு நீர்ப்பாசன திட்டத்திற்கு, சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கியும், உரம், பூச்சி மருந்து, விவசாயக் கருவிகளுக்கு மதிப்புக் கூட்டு வரியை முழுமையாக தள்ளுபடி செய்தும், வேளாண்மைத்துறையை முதன்மைத் துறையாக அறிவித்தும், தமிழகத்தில் இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கிட **மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி** அம்மா அவர்கள் ஆணையிட்டிருப்பது, இந்திய வரலாற்றில் ஒரு தொலை நோக்குச் சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தமிழகத்தின் டிஏபி உரத் தேவை 47,000 மெட்ரிக் டன்களாகும். ஆனால், மத்திய அரசு விடுவித்தது 26,000 மெட்ரிக் டன்கள் மட்டுமே. இதில், தமிழகத்துக்குச் சேர வேண்டிய நியாயமான டிஏபி உரத் தேவையை பெற்றுத்தர, தமிழக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் பாரதப் பிரதமருக்கு எழுதிய முதல் கடிதம் வேளாண்மைத்துறையைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் பாரதப் பிரதமரை நேரடியாக சந்தித்து வலியுறுத்தி பெற்றுத்தந்தார்கள். **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் உயரிய நோக்கமான தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கினை எய்துவதற்கும், வேளாண்மைத் துறையில் இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கவும், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தமிழக விவசாயிகளின் நலனில் கொண்டுள்ள கருணை உள்ளத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இத்தகைய சரித்திரச் சாதனைகளை உருவாக்கிய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன்.

★

**நத்தம் இரா. விசுவநாதன்**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மக்கள் மனம் குளிரும் மாட்சிமிக்க ஆட்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ள அனைத்து திட்டங்களுக்கும் நூற்றுக்கு நூறு முழு செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக செவ்வனே செயலாற்றி வருகிறார்கள். மக்கள் நலனை முன்னிறுத்தி இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களது சிந்தனையில் உதித்த சிறப்பான திட்டங்களை அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து மக்கள் மனம் குளிரும் வண்ணம் முனைப்பாக துவக்கி செயல்படுத்தி வருகிறார்கள். இந்த செயல் திட்டங்கள் எல்லாம் தமிழக மக்களின் மனதில், அதிலும் குறிப்பாக அடித்தட்டு மக்களின் மனதில் ஆழ பதிந்து இந்த நூறு நாள் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியிலேயே மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தமிழக மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எப்போதுமே துணை இருப்பார்கள் என்ற எண்ணத்தில் சற்றும் தளராமல், ஓய்வில்லாமல் நாம் நிம்மதியாக உறங்க மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களின் வாழ்வு வளம்பெற மக்களுக்கு துணையாக நிற்கும் தியாகச் சுடர், தெய்வத்தாய், தமிழக மக்களின் பேராதரவுடன் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்ற பாதையில் அடிமேல் அடி வைத்து முன்னேறி வருகிறார்கள்.

எரிசக்தித் துறையில் கடன் சுமை ரூ. 45,000 கோடி ரூபாய்க்கு சுமை ஏற்படுத்தி கடந்த தி.மு.க. ஆட்சி வைத்து இருந்தபோதும், மின்வெட்டை படிப்படியாக குறைத்து வருகிறார்கள். குறிப்பாக சென்னை நீங்கலாக, 3 மணி நேரமாக இருந்த மின்வெட்டை ஒரு மணி நேரமாக குறைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் தொடர் நடவடிக்கையில் 100 நாட்களிலேயே மின்வெட்டு குறைக்கப்பட்டுள்ளது. இந்த சாதனை இந்த துறை மட்டும் அல்லாமல் அனைத்து துறைகளிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இந்த சாதனைகளை கடந்த தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் சாதிக்க முடியாத சாதனைகளை 100 நாட்களிலேயே சாதித்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும் எரிசக்தித்துறை மட்டும் அல்லாமல் மற்ற அனைத்து துறைகளிலும் 100 நாட்களிலேயே சாதித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி அனைவரும் வியக்கும் வண்ணம் செயல்பட்டு வருகிறது.

“பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்ட ஈசன் போல” மக்கள் நலனுக்காக உழைத்து சுய நல அதிகார கும்பலின் பேச்சுக்கும், அதிகார துஷ்பிரயோகத்திற்கும் ஆளாகிய போதும் தமிழக மக்கள் நலனே தன் உயிர் மூச்சாக கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சாதாரண தொண்டனாகிய எனக்கு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் என்று பொறுப்பினை வழங்கி பணியாற்றும் நற்பேற்றினை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களது பாதம் பணிந்து நன்றி தெரிவித்து, முன்னேற்ற பாதைக்கு துணை நின்று முழு மூச்சுடன் செயலாற்றுவேன் என்று உறுதிபூண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி என்றென்றும் தொடர்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று என்றென்றும் தொடர்ந்து மக்கள் பணியாற்றிட வணங்குகிறேன்.

★

**கே.பி. முனுசாமி**
நகராட்சி நிர்வாகம் மற்றும்
ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# நூறு நாட்களில் நூறு ஆண்டு சாதனை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவையும், அன்பையும் பெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்ற 100 நாட்களுக்குள், கிராமங்களில் வாழும் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

இந்த ஆண்டு, 60,000 ஏழை மக்களுக்கு 300 சதுர அடியில், ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் வசதியான வீட்டையும், அவ்வீட்டில் சூரிய ஒளியுடன் இயங்கும் விளக்குகளையும், வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றியுள்ளார்கள். ஏறக்குறைய 79,394 குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகளை உருவாக்க ‘தாய்’ திட்டத்தை அறிமுகப்படுத்தி, குக்கிராம மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த திட்டம் வழங்கியுள்ளார்கள். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் மாநில அரசின் பங்குத் தொகையை வீடு ஒன்றிற்கு ரூபாய் 66,250/– என உயர்த்தி ரூபாய் 1 இலட்சம் மதிப்பீட்டில், 1 இலட்சம் பயனாளிகள் பயனடைய இருக்கின்றனர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இந்த ஆண்டு ரூபாய் 3,472 கோடி ஒதுக்கீட்டில் எண்ணற்ற வேலைவாய்ப்பற்ற விவசாயத் தொழிலாளர்கள் பயனடைய உள்ளனர். கிராமங்களில் ஒளி வெள்ளம் பாய்ச்சிட, ஐந்து ஆண்டுகளில் 1 இலட்சம் தெரு விளக்குகள், சூரிய ஒளியுடன் இயங்கும் விளக்குகளாக மாற்றப்பட உள்ளன. பழுதடைந்த அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளையும் புனரமைப்பதுடன், மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் அனைத்து வசதிகளையும் உருவாக்கும் வகையில் பள்ளிகளின் புனரமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 2 கோடியாக உயர்த்தி, அவர்கள் தடையின்றி மக்கள் பணியாற்றிட ஆணையிட்டுள்ளார்கள். கிராமங்களில் வாழும் பெண்கள் சுகாதாரமுடன் வாழ, அனைத்து மகளிர் சுகாதார வளாகங்கள் உடனடியாக புதுப்பிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆணையிட்டுள்ளார்கள். கிராமங்களில் உள்ள அனைத்து சாலைகளையும், பழுதுகளை நீக்கி தரம் உயர்த்தி, எளிதான போக்கு வரத்துக்கு ஆவன செய்துள்ளார்கள்.

சென்னை நகரில் இரண்டு இடங்களில் தானியங்கி பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. 30 பிரதான சாலைகளை, உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக தரம் உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரை தூய்மையான நகராக உருவாக்கவும், அழகை மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன. சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றிட ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 39,000 ஏரிகளை தூர் வாரிட துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை குறித்த காலத்தில் முடித்திட ஆணையிட்டுள்ளார்கள். நகர்ப்புரங்களில் 247 கி.மீ. சாலைகளை மேம்படுத்த ரூ.50.57 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகராட்சி தவிர பிற நகராட்சிகளின் மேம்பாட்டிற்காக ரூபாய் 750 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பல்வேறு நகராட்சிகள், பேரூராட்சிகள், குக்கிராமங்களில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி அவர்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு பல்வேறு திட்டங்கள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

நாளுக்கு நாள் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அளித்து, நூறு நாட்களில் நூறு ஆண்டு சாதனை நிகழ்த்தி, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் கருணைக் கடலே, தாயே, தங்களின் சீர்மிகு தலைமையில் நூறாவது நாள் காணும் நன்னாளில் தங்களைப் போற்றி வணங்குகிறேன்.

✶

**சி. சண்முகவேலு**
ஊரகத் தொழில் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# என்றும் எதிலும் முதன்மை இணையில்லாத தனித்தன்மை

கருணை உள்ளம், கனிந்த தாயன்பு, மனித நேயம், இணையில்லாத தனித் தன்மையுடன் என்றும் முதன்மை, எதிலும் புதுமை படைக்கும் மக்கள் நலம் காக்கும் மகத்தான தலைவியாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒட்டு மொத்த தமிழக மக்களின் பேராதரவினைப் பெற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற 100 நாட்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் மகத்தான பல சாதனைகளை படைத்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுமார் 22,000 தேயிலை சிறு விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, பசுந்தேயிலைக்கான நியாயமான விலை தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்த ஆண்டு மே மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை, பசுந்தேயிலைக்கு 2.8.2011 அன்று கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் கூடுதலாக வழங்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தாயுள்ளத்துடன் ஆணையிட்டு, இதற்காக ரூ.11.20 கோடி ஒப்பளித்துள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள இலவச மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மேஜை மின் விசிறி ஆகியவற்றின் மாதிரிகளை பரிசோதிக்க திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் மத்திய மின் பொருள் பரிசோதனைக் கூடத்திற்கு கூடுதல் உபகரணங்கள் வாங்க ரூ.63 இலட்சம் வழங்கியுள்ளார்கள்.

2011–12ஆம் நிதியாண்டில் இதுவரை ரூ.25 கோடி மூலதன மானியமும், ரூ.3 கோடி மின்னாக்கி மானியமும், ரூ.1 கோடி மதிப்புக் கூட்டு வரி மானியமும் மற்றும் ரூ.2.25 கோடி குறைந்த அழுத்த மின் மானியமும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் வழங்கப் பட்டுள்ளது. சிட்கோ நிறுவனத்தின் 4 முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மத்திய அரசின் சிறு தொழில் குழும வளர்ச்சி திட்டத்தின் மூலம் ரூ.12.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டம், ஆத்தூர் தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.97 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு மைய அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தில் பயிற்சிகளை மேற்கொள்ளுவதற்காக பல்வேறு வசதிகளை உள்ளடக்கிய நவீன பயிற்சி வளாகம் ரூ.4 கோடி செலவில் உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு மல்பரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல், புழு வளர்ப்புமனை அமைத்தல், கிருமி நாசினிகள் விநியோகம் மற்றும் பட்டு பல்நோக்கு மையம் அமைத்தல் ஆகியவற்றிற்காக 1,548 விவசாயிகளுக்கு திட்ட உதவிகளாக ரூ.314.269 இலட்சம் வழங்கியுள்ளது. மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 75 சதவீதமாக வழங்கப்பட்டு வந்த மானிய உதவிகள் நடப்பு ஆண்டு முதல் 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் 1,000 விவசாயிகளுக்கு இலவசமாக சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து தரப்படும். பட்டுக்கூடு உற்பத்தி 2,227 மெட்ரிக் டன்னிலிருந்து 3,199 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இதே போன்று அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடு வர்த்தகம் 882 மெட்ரிக் டன்னிலிருந்து 910 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் கச்சாப்பட்டு வர்த்தகம் 46 மெட்ரிக் டன்னிலிருந்து 52 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் பணிபுரிந்து வரும் கைவினைஞர்களுக்கு 100 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 90 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

திட்டங்கள் தீட்டுவதிலும், சட்டங்கள் ஆற்றுவதிலும், அவற்றை செயலாக்குவதிலும், முனைப்புடன் உள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் தமது பரந்த அனுபவத்தினாலும், ஆழ்ந்த அறிவாற்றலாலும் தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை மீண்டும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவார்கள் என்பதில் ஐயமும் இல்லை. ★

**ஆர். வைத்திலிங்கம்**
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற
வளர்ச்சித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



## வளர்ச்சித் திட்டங்களை வாரி வழங்கும் அரசு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் ஒதுக்கீடுதாரர்களுக்கு கடந்த 100 நாட்களில் 9,665 விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஆக்கிரமிப்பில் இருந்த ரூ.23.52 கோடி மதிப்பிலான 1.59 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்கப்பட்டது. வீட்டுவசதி வாரியம் மூலம் 2011–12ம் நிதியாண்டில், ரூபாய் 340 கோடி மதிப்பீட்டில் 2,427 வீட்டு வசதி அலகுகள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேடு புறநகர் பஸ் நிறுத்தத்தின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக நகரங்களுக்கிடையேயான இரண்டு துணைப்பேருந்து நிலையங்கள் வேளச்சேரி மற்றும் மாதவரம் பகுதியில் ஏற்படுத்தப்பட உள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சி திட்டம், மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டப்பகுதிகளில் ஒதுக்கீடு பெற்று வசித்து வரும் 969 ஒதுக்கீடுதாரர்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் கிரயப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.15.84 இலட்சம் மதிப்பிலான 1920 சதுரஅடி பரப்பளவு நிலத்திலிருந்து ஆக்கிரமிப்புதாரர்கள் வெளியேற்றப்பட்டனர்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் நூறு நாட்கள் சாதனை மலர் சிறக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வாழ்த்துகிறேன்.

★

**அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி**
வணிகவரி மற்றும்
பதிவுத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# நிறைவான ஆட்சி

ஒலியின் ஓசையாய், ஓங்காரத் திருவடிவாய் – விளங்கும்
அன்பின் திருவுருவே, எல்லோரும் போற்றும் வெற்றித் திருமகளே,
எங்கள் அம்மா! உழைப்பின் சிறப்பாய்,
ஊராரின் மன நிறைவாய் எங்களின் குல விளக்காய்,
ஏழைகளின் விடி விளக்காய்,
எதிரிகளின் பாய்ந்து வருகின்ற ஈட்டி முனை தாக்குதல்களைகூட
துணிச்சலோடு எதிர்கொள்கின்ற ஆற்றலையும்,
திறமையையும், தைரியத்தையும் ஒருங்கே பெற்றிருக்கின்ற
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
என்னும் ஆலயத்தின் ஆராதனைக்குரிய தெய்வமே,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை தன்னில்,
பரிவான பார்வை கொண்டு – வணிகர் நலம் பேணி, அரசுக்கு
வருவாய் வரும் துறையாய் – நல்ல பல யோசனைகள்,
நாளும் நல்கி வரும், இதயதெய்வமாம் எங்கள் அம்மா அவர்களின்
நிறைவான ஆட்சிதனில், அரசின் நூறு நாள் சாதனை மலர் சிறக்க
அம்மாவின் மலர் பாதம் பணிந்து வாழ்த்துகிறேன்.

★

**பி. பழனியப்பன்**
உயர்கல்வித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# உயர்கல்வியில் ஒளிசிந்தும் உயர் சாதனைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று 100 நாட்களில் உயர் கல்வித்துறையில் பல சாதனைகளைச் செய்துள்ளார்கள். அவை பின்வருமாறு :

- அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியாக இருந்த கல்லூரி முதல்வர் பணியிடத்தை நிரப்ப உடனடி நடவடிக்கை எடுத்து 29 கல்லூரிகளில் முதல்வர் பணியிடம் நிரப்பப்பட்டது.
- 11 புதிய பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் துவங்கப்பட்டு இந்த ஆண்டிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டு இந்த ஆண்டிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.
- இதுவரை இல்லாத ஒன்றாக கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் பணியிட மாறுதல் ஒளிவு மறைவு அற்ற (Open Electronic Screen) கலந்தாய்வு முறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இலங்கை அகதி மாணவர்களுக்கும் தமிழக மாணவர்களுக்கு என்னென்ன சலுகைகள் உள்ளதோ அதேபோல சலுகைகள் வழங்கி பொறியியல் கல்லூரிகளில் சேர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- சிதறிக்கிடந்த அதாவது 5 மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அண்ணா தொழில்நுட்ப பொறியியல் பல்கலைக்கழகங்களை ஒருங்கிணைத்து ஒரே அண்ணா பல்கலைக்கழகமாக ஒன்று சேர்க்க நடவடிக்கை மேற்கொண்டது.
- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறையில் படிக்கும் மாணவர்களுக்கு பாடம் சொல்லித்தர 1,661 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- பொறியியல் கல்வி படிக்க வசதியில்லாத 91 ஏழை எளிய மாணவர்களுக்கு ரூ.25,000/– வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது.
- தமிழக வரலாற்றிலேயே இல்லாத ஒன்றான B.Ed., கல்லூரிகளில் கல்வி கட்டணம் நிர்ணயம் செய்ய கல்விக் கட்டணக் குழு நியமிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியின் 100 நாள் சாதனையில் ஒரு சில மணி முத்துகளே இவை. உலகம் வியக்கும் மாண்புமிகு அம்மா அவர்களது சாதனைகள் தொடரும். தொடரும். தமிழக மக்களின் வாழ்வு நலம் உயரும். உயரும். ★

**சி.வி. சண்முகம்**
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# இளைஞர்கள், மாணவர்கள் வாழ்வில் பொற்காலம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களின் பேராதரவினைப் பெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்ற 100 நாட்களுக்குள், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த அனுமதி அளித்து தமிழ்நாட்டின் கிராமப்புர மாணவர்கள் மேல்நிலைக் கல்வி பெறுகின்ற வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளார்கள். மேலும் அவ்வாறு உயர்த்தப்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் 9 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் அனுமதித்து அதன் மூலம் 900 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் 10ஆம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தலா 1,500/– ரூபாயும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு 2,000/– ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 25,000/– ரூபாயிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தியதுடன், 4 கிராம் தங்க காசும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன்முறையாக 65 கல்வி மாவட்டங்களின் மாணவர்களின் நலன்களைப் பேணும் வகையில் இயன் மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டுத் துறையில் அதீத ஆர்வம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்த சென்னையிலுள்ள நவீன விளையாட்டு அரங்கங்களில் வளைகோல்பந்து, தடகளம், நீச்சல், கால்பந்து, கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து பிரிவுகளில் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் 3575 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர்.

மேலும் தொல்லியல் துறையில் சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய 3 மாவட்டங்களில் 132 கல்வெட்டுகள் மைப்படி எடுக்கப்பட்டுள்ளன. அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் மையத்தில் தமிழ் ஓலைச் சுவடிகள் 3,320 பக்கங்கள் டிஜிட்டல் படமெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் வாழ்வு என்றென்றும் பொற்காலமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

★

**செல்லூர் கே. ராஜு**

கூட்டுறவுத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# நமக்கெல்லாம் பெரும் பேறு

தமிழகத்தின் தன்னிகரில்லாத தலைவியாகவும், ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் வாழ்க்கையின் விடிவெள்ளியாகவும் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமையப்பெற்றுள்ள அரசு தன்னுடைய 100 நாட்களை நிறைவு செய்யும் இந்த நேரத்தில் மனமெல்லாம் உவகைகொண்டு உளமெல்லாம் உணர்ச்சி பெற்று ஆனந்தக் களிப்பெய்தும் தமிழ்ச் சமுதாயத்தை நன்றியுடன் வணங்குகிறேன்.

இறைவனால் அனுப்பப்பட்ட இறைவனின் தூதராகவே தோன்றி "புகழொடு தோன்றுக" என்பதற்கேற்ப தமிழகத்தை வழிநடத்திச் செல்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியத் திருநாட்டில் உள்ள மாநிலங்களிலேயே நம் தமிழ்நாட்டை முன்னிலை பெற்ற மாநிலமாக மாற்றுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சிக்கு அளவுகோல் ஏதும் இல்லை.

தமிழரின் அன்பென்னும் பிடிக்குள் வாழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சாதனைகள் காலந்தோறும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய துறைகள். எனினும், இவற்றிற்கெல்லாம் ஆணிவேராயிருப்பது கூட்டுறவே. அனைத்துப் பெருமைகளையும் மக்களுக்கு அள்ளித் தருகிற துறையாக "கூட்டுறவு" கருதப்படுகிறது. நாட்டுயர்வின் நாற்றங்காலே கூட்டுறவு என்பதை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூட்டுறவுத்துறையின் ஏற்றத்திற்காக ஏராளம் செய்திருக்கிறார்கள்.

நலிந்த பிரிவினரின் எதிர்காலம் வலிமையானதாக அமையவேண்டும். தமிழக மக்கள் தற்சார்படையும் தனித்தொரு இனிய வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி எல்லா நல உதவிகளையும் அள்ளி வழங்கும். ஏழைகளே இல்லாத நாட்டைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் காட்டியதைப் போல் மாண்புமிகு அம்மா அவர்களும் அரும்பணிகள் ஆற்றுகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நூறு நாட்களை முடிக்கிற இந்தத் தருணத்தில், பலகோடி நூறாயிரம் நாள்களை முடிக்கும் வல்லமையை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இறைவன் வழங்கவேண்டும் என்பதே தமிழக மக்களின் வேண்டுகோளும், பிராத்தனையுமாகும்.

நூறு நாள்களும் "நூற்றுக்கு நூறு" என்னும் உயரிய மதிப்பெண்ணைப் பெற்றுள்ளன.

இந்த நூறு – நமக்கெல்லாம் பெரும் பேறு

வாழ்க புரட்சித் தலைவி அம்மா

வளரட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி.

★

**கே.டி. பச்சைமால்**
வனத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# வனத்துறை படைத்திடும் வரலாற்றுச் சாதனைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று 100நாட்களில் வனத்துறையைப் பொறுத்த வரையில் பல சாதனைகளைச் செய்துள்ளார்கள். அவை பின்வருமாறு:–

1. 2011–12ஆம் ஆண்டில் ரூ.17.81 கோடி செலவில் வனங்களில் பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2. படுகைநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள தேக்கு மரத்தோட்டங்களில் ரூ.6.08 கோடி செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

3. வன விலங்குகள் வனத்தைவிட்டு வெளியேறாமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும், வன உயிரினங்களின் தாக்குதலால் நிகழும் இழப்புக்களைக் களையவும் ரூ.4.30 கோடி செலவில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

4. திட்டம் சாரா தலைப்பின் கீழ் ரூ. 3 கோடி செலவில் 37.772 கிலோ மீட்டர் நீளத்திற்கு வனத்துறையில் சாலைப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

5. 2011–12 முதல் 2018–19 முடியவுள்ள 8 ஆண்டுகளில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 686 கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ள "தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம்" செயல்படுத்த திட்ட அமலாக்க பிரிவினை அமைத்து அரசு ஆணை வழங்கியுள்ளது.

6. ரூ.22.35 கோடி மதிப்புள்ள 49.447 டன் சந்தனமரக்கட்டைகள் பொது ஏலம் மற்றும் நேரடி விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

7. ரூ.0.74 கோடி மதிப்புள்ள 287.282 மீ தேக்குமரக் கட்டைகள் விற்பனை செய்யப்பட்டு அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8. வனத்துறையில் 56 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

9. உயிரின நிகழ்வுகளில் மனித உயிரிழப்பிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 1.50 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.

10. தைலமரத் தோட்டங்கள் எழுப்புவதற்கு கடந்த நூறு நாட்களில் 39 இலட்சங்கள் தைலமரக்கன்றுகளும், முந்திரித் தோட்டங்கள் எழுப்புவதற்கு 65,000 முந்திரி உயர் ரக வீரிய ஒட்டுக்கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

11. அரசு சார்ந்த காகித ஆலை நிறுவனங்களுக்கு கடந்த 100 நாட்களில் 48,300 மெ. டன்கள் மரக்கூழ் மரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூபாய் 1224 இலட்சங்கள் வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.

12. அரசு ரப்பர் கழகத்தில் அதிக பால் உற்பத்தி தரக்கூடிய வீரிய இன ரப்பர் கன்றுகள் 270 ஹெக்டேர் பரப்பளவில் நடப்பட்டுள்ளது.

13. அரசு ரப்பர் கழகத்தில் 42,030 மிகவும் குறைந்த பால் உற்பத்தி திறனுடைய ரப்பர் மரங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் மொத்தம் ரூ. 13,09,29,406/– க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் 10.08.2011 தேதி முடிய ரூ. 3,17,08,218/– கிடைக்கப் பெற்றுள்ளது.

14. அரசாணை எண். 60 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள் – 26.05.2011இன் படி ரப்பர் கழக தொழிலாளர் களுக்கு திருத்தியமைக்கப்பட்ட சம்பள விகிதம் நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது.

15. அரசு ரப்பர் கழகத்திற்கு ISO 9001–2008 தரச் சான்று 26.07.2011 அன்று திருவாளர் மூடி இன்டர்நேஷனல் சர்டிபிக்கேஷன் லிமிடெட், மூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த தரச்சான்று 25.07.2014 வரை அமலில் இருக்கும்.

✶

**எடப்பாடி கே பழனிசாமி**
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள்
துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# சிறப்பான வளர்ச்சி

இந்திய திருநாடே வியக்கும் வண்ணம் இமாலய வெற்றி பெற்று மூன்றாம் முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களுக்குள், ரூ. 623 கோடி மதிப்பீட்டில், நெடுஞ்சாலைத்துறையின் பல்வேறு அலகுகளின் மூலம் 1642 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 80 பாலப்பணிகள் மற்றும் ஒரு இரயில்வே கடவு மேம்பாலம் ஆகியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 16.08.2011 அன்று ரூ. 41 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட 12 பாலங்களை, புகழுக்கே புகழ்தந்து, வெற்றிக்கே வெற்றியை தந்துகொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால், வீடியோ கான்பிரன்ஸ் மூலம் திறந்து வைக்கப்பட்டது.

போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய, வாழ்த்துக்கும், வணக்கத்துக்கும் உரிய, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள அனைத்து இடைவழித்தடச்சாலைகளை – இருவழித்தடச் சாலைகளாகவும், மாவட்ட முக்கிய சாலைகளிலுள்ள ஒரு வழித்தடச்சாலைகளை இடைவழித்தடச்சாலைகளாகவும் பெருகும் போக்குவரத்திற்கு ஏற்றவாறு மூன்று வருடத்திற்குள் அகலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையினை ஆய்வு செய்தபோது, தமிழகத்தில் அகலமான சாலைகள், பாதுகாப்பு பயணம் மற்றும் நெரிசலற்ற போக்குவரத்தை வழங்குவதை குறிக்கோளாக கொண்டு அதற்கேற்றவாறு திட்டங்களை தீட்ட வேண்டும் என்று அறிவுறுத்தியதற்கு ஏற்ப சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், மேம்படுத்துதல், சாலையில் மேம்பாலம் கட்டுதல், ஆற்றுப்பாலங்கள், இரயில்வே கடவில் மேம்பாலம் / கீழ்பாலங்கள் அமைத்தல், புறவழிச்சாலை அமைத்தல், சென்னை வெளிவட்டச் சாலையின் இரண்டாம் கட்ட பணி மற்றும் சென்னை எண்ணூர் – மணலி சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை துரிதமாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சிறந்த ஆற்றலும், எதிர்கால கண்ணோட்டமும் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை சிறப்பான வளர்ச்சியினை அடையப்பெறும் என்பதில் ஐயமில்லை.

★

**எஸ்.பி. சண்முகநாதன்**
இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மின்னொளிரும் சாதனைகளால் பொன்னொளிரும் மாநிலம்

தாய்மை, வாய்மை, நேர்மை என்ற மூன்று தன்மைகளையும் தன் முழு வடிவமாகக் கொண்டு, இம் மாநிலத்தில் ஒரு மகத்தான மாற்றத்தை – ஏற்றத்தை, நாளுக்கொரு திட்டம், பொழுதுக்கு ஒரு சாதனை என்று வெற்றி வரலாறு எழுதிவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்து நூறு நாட்கள் நிறைவேறுகின்றன.

உலகமே வியந்து பார்க்கின்ற திறத்தைப் புகழாதவர்கள் இல்லை. ஊழலால் பிழைத்தவர்கள் ஓடி ஒளிகின்றார்கள். அறம், தமிழ், கலைப் பண்பாடு என்ற மூன்று முனைகளிலும் திருக்கோயில்களில் எழுச்சியும் தமிழுக்கு வளர்ச்சியும் கலைப் பண்பாட்டில் புரட்சியும் நிகழ்த்தி வருகின்ற அம்மாவின் தொண்டர்களில் கோடியில் நானும் ஒருவன்.

கனவெல்லாம்நின் தோற்றம்; இதயத்து ஊறும்
கருத்தெல்லாம் நினதுயர்வுத் திட்டம்: என்றன்
மனமெல்லாம் நின் கோயில்: எளியன் பெற்ற
வாழ்வெல்லாம் நினது பணி!

தமிழகத்தைப் பொன்னொளிரும் முதன்மை மாநிலமாக்க அம்மா ஆற்றிவருகின்ற செயல்கள் வாழ்க! வெல்க!

★

**கே.வி. ராமலிங்கம்**
பொதுப்பணித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# இலட்சிய வேட்கையுடன் பணியாற்றும் இணையற்ற முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தின் தன்னிகரில்லாத முதல்வராகப் பொறுப்பேற்று தமிழகத்தை அனைத்து துறைகளிலும் முன்னோடியாகத் திகழச் செய்யும் இலட்சிய வேட்கையுடன் பணிகளைத் தொடங்கி, நூறு நாட்கள் நிறைவுற்றதை தொடர்ந்து மலர் வெளியிடுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித் துறையின் மாண்பினை செம்மையாக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனையும், அறிவுரையுமே எங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. ஆண்டுதோறும் ஜீன் 12 ஆம் தேதி அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் வழக்கத்தினை மாற்றி, காவிரி டெல்டா விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு, முன்கூட்டியே ஜுன் 6 ஆம் தேதியன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாகும். இந்த சாதனையை இம்மலரில் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன்.

பொதுப்பணித் துறையின் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் 761 ஏரிகள், 5 அணைக்கட்டுகள் மற்றும் 1,056 கி.மீ வரத்துக் கால்வாய்கள் நவீனப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதுடன், சென்னைக்கு அருகே கிருஷ்ணா நதி நீரைச் சேமிப்பதற்காக புதிய ஏரிகளை உருவாக்கவும் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காகவும் மற்றும் திருச்சி மாநகர் குடிநீர் தேவையைப் போக்கவும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கம்பரசன்பேட்டை கிராமத்தில் காவிரியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டத்திற்காக ரூ.32 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கியதும், பொதுப்பணித் துறை முடுக்கிவிடப்பட்டு துரிதப்பணியாற்றி வளர்ச்சியை எட்டுவதற்கு முனைப்போடு செயல்படுவதைக் காட்டுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி, இன்னும் எண்ணற்ற பணிகளைச் செய்து தமிழகத்தை முன்னோடி மாநிலமாக உயர்த்தும் என்பது திண்ணம் என்று கூறி மலர் சிறக்க மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

✶

**எஸ்.பி. வேலுமணி**
தொழில் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# தொழில்துறை முன்னேற துரித நடவடிக்கைகள்

கடந்த கால ஆட்சியில் தொழில்துறையை ஏழாவது இடத்திற்குப் பின்னுக்கு தள்ளி, இம்மாநிலத்தில் தொழில் முதலீடு செய்ய வந்தோருக்கு உரிய முறையில் வாய்ப்பளிக்காமல் அன்றைய சூழ்நிலையில் நிலவிய கடும் மின்சாரத் தட்டுப்பாடு காரணமாகவும், வரிச்சலுகை, தொழில் முனைவோருக்கு வழங்கும் கடனுக்கான வட்டி விகித சலுகை, நில ஒதுக்கீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தராத காரணங்களினாலும் இம்மாநிலத்திற்கு வரவேண்டிய பல்வேறு தொழில் முதலீடுகள் குஜராத் போன்ற மற்ற வெளிமாநிலங்களுக்கு செல்ல காரணமாக இருந்த நிலையை பதவியேற்ற சில நாட்களிலேயே நீக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டை தொழில் துறையில் பல பன்னாட்டுத் தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், நமது மாநிலத்திற்கு அதிக வேலைவாய்ப்பை பெருக்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும், சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து அரசு பதவியேற்று 100 நாட்களுக்குள் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி காட்டியுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, “தொலைநோக்கு திட்டம் 2025” என்ற அடிப்படையில் அனைத்து துறைகளிலும் தமிழகம் முதல் மாநிலமாக கொண்டுவர எடுத்துள்ள முயற்சியில் தொழில் துறையும் மிக முக்கிய இடம் வகிக்கிறது என்பதையும் நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மோட்டார் வாகனங்கள், அதன் உதிரி பாகங்கள் தயாரித்தல், உயிரி தொழில் நுட்பம், மருந்துகள் தயாரிப்பு போன்ற ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே திட்டவட்டமான தொழில் கொள்கைகள் என்ற புதிய தொழில் கொள்கை 2011 –ஐ வகுக்கவும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு, உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற இதர வசதிகளை ஏற்படுத்தி மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கப்பட்டு குஜராத் உட்பட இதர மாநிலங்களும் பின்பற்றும் முன்னோடி திட்டமான “ஒற்றை சாளர முறை”யை பயன்படுத்தி புதிய தொழில் முதலீட்டாளர்களை ஈர்த்து புதிய தொழில் துவங்க மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி துரிதமுறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதனை மாண்புமிகு அம்மாவின் 100 நாள் சாதனைகளுள் ஒன்று என்று பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களின் நலன் கருதி, சென்ற ஆட்சியில் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விலை உயர்ந்து இருந்த கட்டுமான பொருட்கள் கல், ஜல்லி, செங்கல் மற்றும் சிமெண்ட் போன்றவற்றின் விலையை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த விரைவான நடவடிக்கைகளால் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதையும், சிமெண்ட் விலையை குறைக்க அதிக உற்பத்தி, இறக்குமதி போன்ற நடவடிக்கைகள், சர்க்கரை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கொள்கை, காகித உற்பத்தி, அரசு – தனியார் பங்களிப்பு அடிப்படையில் திட்டங்கள், தொழில் முனைவோருக்கு வழங்கும் கடனுக்கான வட்டி சலுகை போன்ற அனைத்து வகையிலும் தொழில் துறையை முன்னேற்ற துரித நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்களால் எடுக்கப்பட்டு வருகிறது என்பதனையும் பெருமையுடனும் மற்றும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶

**டி.கே.எம். சின்னையா**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# சுற்றுச்சூழல் காக்கும் தொலைநோக்குப் பார்வை

உலகின் எல்லா உயிரினங்களும் வாழ்வதற்கும், வளர்வதற்கும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அவசியமாகும். எனவே, சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மக்கள் நலம் ஒன்றையே தனது முழு குறிக்கோளாகக் கொண்டு 24 மணி நேரமும் மக்கள் நலனுக்காக செயல்பட்டு வரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு பொது மக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக பகுதி II திட்டத்தின் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2011–2012ஆம் ஆண்டிற்கு ரூ.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தமிழக அரசால் 1982ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது ஆகும்.

திருப்பூர் சாய ஆலை பிரச்சினை தொடர்பாக திருப்பூர் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஜீரோ நிலையை எட்டுவதற்கான புதிய தொழில் நுட்பத்தை பின்பற்றும் பொருட்டு, சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.200 கோடி வட்டியில்லாத கடன் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கியதன் மூலம் திருப்பூர் சாய ஆலை பிரச்சனைக்கு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பதவியேற்று 100 நாட்களுக்குள்ளாக தீர்வு கண்டு மகத்தான சாதனை புரிந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தொழில் முனைவோர் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியை பெறக் கோரும் விண்ணப்பங்களை இணைய தளம் மூலம் பதிவு செய்யும் முறை 15–6–2011 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில் முனைவோர் சுலபமாக இருக்கும் இடத்தில் இருந்து வாரியத்தின் அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் இந்த வசதியைப் பயன்படுத்தி உலகின் எந்த இடத்திலிருந்தும் தொழில் முனைவோர் தங்கள் விண்ணப்பங்களின் தற்போதைய நிலையைத் தெரிந்து கொள்ளலாம்.

★

**எம்.சி. சம்பத்**
சிறப்புத் திட்ட
அமலாக்கத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.




# உலகமே வியந்து போற்றும் உன்னதத் திட்டங்கள்

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றிபெற்று, மூன்றாவது முறையாக ஒட்டுமொத்த தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக, தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று தமிழக மக்களின் நன்மைக்காக செய்துவரும் சாதனைகள் ஏராளம். 1991இல் முதன் முதலாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது கொண்டுவந்த மகத்தான திட்டங்களில் ஒன்றான தொட்டில் குழந்தைத் திட்டம். 2001இல் இரண்டாவது முறையாக அரியணை அமர்ந்தபோது, சென்னையின் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டுவந்த எழுச்சிமிகு திட்டம் உள்ளிட்ட எத்தனையோ சீர்மிகு திட்டங்கள். தற்போது 2011இல் மூன்றாவது முறையாக ஆட்சிப்பீடம் ஏற்றிருக்கும் வேளையில், பதவியேற்ற அன்றே அரசின் திட்டங்கள் அனைத்தும் உரிய பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் உரிய முறையில் சென்றடையவேண்டும் என்பதற்காக "சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை" என்ற புதிய துறையை உருவாக்கி, அத்துறைக்கு அமைச்சர் ஒருவரையும் நியமித்து ஆணையிட்டுள்ளார்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அறிவித்துள்ள எண்ணற்ற திட்டங்கள் அதாவது, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலவச அரிசித் திட்டம், ஆதிதிராவிட மாணவர்களுக்கு திறன்வளர் பயிற்சி மற்றும் ஆதிதிராவிட மாணவர்களின் விடுதிகளில் மேம்பட்ட சூழலை ஏற்படுத்த அதிக நிதி உதவி, சிறுகுறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்க பண்ணைசார் சிறப்புத் திட்டம், மீன்பிடி தடை காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.1,000/– என்பதை ரூ. 2,000/– என உயர்த்தி வழங்கியுள்ள திட்டம், அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை அளிக்கும் புதிய பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் 24 மணி நேரமும் செயல்படும் மையங்களாக மாற்றியமைக்கும் திட்டம், நடமாடும் மருத்துவமனை திட்டம். கடலூர் உள்ளிட்ட கிழக்குக் கடற்கரையை ஒட்டியுள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் திட்டம், தமிழ்நாட்டில் செயல் படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கும் திட்டம், ஏழைப் பெண்களுக்கு நான்கு கிராம் தங்க திருமாங்கல்யத்துடன் திருமண உதவித்தொகை உயர்த்தி வழங்கும் திட்டம், முதியோர், விதவைகள் ஆகியோருக்கு மாத உதவித்தொகையை ரூ.500/–லிருந்து ரூ.1000/– என உயர்த்தி வழங்கும் திட்டம்.

ஏழை மக்கள் நலனில் அக்கரைகொண்டு, 12,000 குடும்பங்களுக்கு கறவை மாடு வழங்கும் திட்டம், மேலும் 1 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஒரு ஆண் மற்றும் மூன்று பெண் ஆடுகள் வழங்கும் திட்டம், ஏழை மக்களுக்கு காற்றோட்டத்துடன், சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய 60,000 பசுமை வீடுகள் கட்டும் திட்டம், விவசாயிகளுக்கு வட்டியின்றி பயிர்க்கடன் ரூபாய் 3,000 கோடி வழங்கும் திட்டம், கிராமங்களில் உள்ள குடும்பத்திற்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம், குக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த தாய் திட்டம், மேலும் அனைத்து நலத்திட்டங்களுக்கு மகுடமாக, குடும்பப் பெண்களின் சிரமத்தைக் குறைப்பதற்காக, முதற்கட்டமாக 25 இலட்சம் குடும்பங்களுக்கு, வீட்டு உபயோக சாதனங்களான மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி ஆகியவற்றை விலை இன்றி வழங்கும் திட்டம்,

மாணவ/மாணவியர் கல்வித் தரம் மற்றும் ஆளுமையை மேம்படுத்திக் கொள்வதற்காக உலக அளவில் பேசக்கூடிய உன்னதத் திட்டமான, 9.12 இலட்சம் மாணவ/மாணவியர்க்கு விலை ஏதுமின்றி மடிக் கணினி வழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற சீரிய திட்டங்களை உலகத் தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்தில் நிரந்தரமாக வீற்றிருக்கும் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருவதைக் கண்டு உலகமே வியந்து அம்மாவைப் போற்றி வருகிறது.

இந்த மகத்தான அரசின் சாதனைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் என்றென்றும் தொடரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ✶

**பி. தங்கமணி**
வருவாய்த் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# குறைகளை நீக்கி நிறைகளை சேர்க்கும் சாதனைகள் தொடரும்

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற 16.05.2011 நாள் முதல் கடந்த 100 நாட்களில் துறைதோறும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகின்றார்கள்.

ஏழை எளிய, நடுத்தர மற்றும் நலிந்த பிரிவினர்களின் வாழ்வில் ஒளியேற்ற திட்டங்களைத் தீட்டி, அந்தத் திட்டங்கள் சிறந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை நாள்தோறும் கண்காணித்து வருகிறார்கள்.

குறிப்பாக, ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளில் தலையாய பிரச்சினையான அவர்களுக்கு உடனடியாகவும், தேவைக்கேற்பவும் காலதாமதமின்றி சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் பட்டா மாறுதல் போன்றவைகள் கிடைப்பதில்லை என்ற குறைபாட்டினைப் போக்க வருவாய்த்துறை மூலம் அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

முதியோர் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.500/–லிருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது.

- இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்
- இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்
- இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம்
- ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்
- ஆதரவற்ற மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்
- கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்
- 50 வயதை எய்தியும் வாய்ப்பு வசதி இல்லாததால் திருமணம் ஆகாமல் இருக்கும் உழைக்கும் திறனற்ற, உழைக்கும் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

ஆகிய திட்டங்களை சமூகநலத் துறையும், வருவாய்த் துறையும் தனித்தனியே பயனாளிகளின் தகுதிக்கேற்ப செயல்படுத்தி வருகிறது.

மாணவர்கள் அவர்களுடைய ஜாதி, இருப்பிடம் மற்றும் வருமான சான்றிதழ்களைப் பெறுவதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள், தாமதங்கள் இருப்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்கள் வாயிலாக விண்ணப்பித்து குறித்த காலத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்திற்குள் தேவையான சான்றிதழ்களை பள்ளிகள் மூலமாகவே மாணவர்களுக்கு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பட்டா மாறுதல் மற்றும் பட்டா பெறுதல் ஆகியவற்றில் உள்ள சிரமங்களை, தாமதங்களைப் போக்கும் வகையிலும் இதற்காக வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு பொதுமக்கள் அலைந்து சிரமப்படுவதைத் தடுக்கவும், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாகவே விண்ணப்பித்து 15 நாட்களுக்குள் உரிய ஆவணங்களைப் பெறலாம் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அரசு நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் நடவடிக்கையில் வருவாய்த் துறை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தலைமையில் சாதனைகள் தொடரும்; சரித்திரங்கள் படைக்கும்.

✶

**பூ. செந்தூர் பாண்டியன்**
கதர் மற்றும்
கிராமத்தொழில்கள் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# அகிலம் போற்றும் திட்டங்கள் தொடரும் சாதனைகள்

தமிழகத்தின் தவப் புதல்வியாம், தமிழர்களின் காவல் தெய்வமாம், எங்களின் குல விளக்காம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்கு அழகூட்டும் வகையில், துறைகளின் சாதனைகளை, வண்ண மலராக, இதயத்தின் எண்ண மலர்களை பூத்துக் குலுங்கும் வகையில் வடித்துத்தர சொன்னமைக்கு கோடான கோடி நன்றிகள்.

“உலகத்தின் மூலதனமே அறிவு” – ஆகவே அறிவை வளர்த்திட வேண்டும் – மக்கள் அத்தனை பேருக்கு மென்றாய் சிறியரை மேம்படச் செய்தால் – பின்பு தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்” என்கிற பாரதி வரிகளின்படி – அம்மாவின் தன்னலமற்ற தொண்டால், சீரிய அறிவு கூர்மையால் வெற்றி பெற்று 100 நாட்களை கடந்துள்ளோம்.

மண்ணில் விழவில்லை என்றால் விதை மரமாகாது, நீ சாதிக்க எழவில்லை என்றால் சாதனை சரித்திரமாகாது என்பதை எங்களுக்கு உணர்த்தி, துறைதோறும் துறைதோறும் புதுமைகள் செய்து, இந்தியாவின் வளர்ச்சி கிராமங்களின் முன்னேற்றத்தில் உள்ளது என்ற காந்தியடிகளின் கொள்கையினை மனதில் நிறுத்தி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் என்கிற இத்துறையை, திறம்பட ஏற்றம் பெற செய்ய தீட்டியுள்ள திட்டங்கள் ஏராளம் , ஏராளம்.

அவைகளில் சில :–

1) 6ஆவது ஊதியக் குழுவின் தவணை நிலுவைத் தொகை ரூ.397.71 இலட்சத்தை ஊழியர்களுக்கு வழங்கியது.

2) கைமுறை காகித அலகு தொழிலாளர்களுக்கு ரூ.6 இலட்சம் வழங்கியது.

3) 1 சோப்பு அலகு தொழிலாளர்களுக்கு காலமுறை ஏற்ற ஊதிய விகிதம் வழங்க ஆணையிடப்பட்டது.

அன்னையே உங்களிடத்து ஜான்சிராணி லக்குமிபாயை, தில்லையாடி வள்ளியம்மையை, வேலு நாச்சியாரை, ராணிமங்கம்மாவை ஒரு சேரக் காண்கிறோம். அதனால்தான், தாயே, சிலரால் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தும் செய்ய முடியாத மக்கள் நலப் பணிகளை 100 நாட்களில் செய்த தங்களை, திட்டங்களின் டெண்டுல்கர் என்றும், மனித நேயத்தில் பிளாரன்சு நைட்டிங்கேல் என்றும், மக்கள் இதயம் கனிந்து வாழ்த்துவதை செவியார கேட்க முடிகிறது.

அம்மாவின் வழிகாட்டுதலில் இத்துறையினை மேலும் முன்னேற்றம் கண்டிட உழைத்திட உறுதி கூறி அம்மாவின் புகழ் ஓங்குக! அம்மாவின் வெற்றி தொடர்க!! வெல்க நாளும் அம்மாவின் சாதனைகள்!!! என்பதை பணிவுடன் பதிவு செய்கிறேன்.

★

**எஸ். கோகுல இந்திரா**
சுற்றுலாத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# இழந்த பெருமையை மீட்டெடுத்து தமிழகத்தை தலைநிமிரச் செய்தார்

தமிழகத்தை ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பாதையில் நடைபோட வைக்கவும், இழந்த பெருமையை மீட்டெடுத்து, தமிழகத்தை தலை நிமிரச் செய்வது ஒன்றே தன் குறிக்கோளாகக் கொண்டு இரவு பகல் பாராமல் தினமும் 20 மணி நேரத்திற்கு மேல் உழைக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எந்த ஒரு மாநிலத்திலும் யாரும் செய்ய முடியாத சாதனையை நூறு நாட்களில் செய்து தமிழர்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றி உள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டு காலமாக நடந்த கொடுங்கோல் குடும்ப ஆட்சி ஒழிந்து, அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகத்தின் மக்கள் ஆட்சி மலர்ந்த உடன் மீண்டும் ஒரு சுதந்திரம் கிடைத்த உணர்வு தமிழக மக்களிடையே எழுந்துள்ளது. உலகத் தமிழர்களும் ஏகோபித்த நன்றியை தெரிவித்தவண்ணம் உள்ளனர். மாண்புமிகு அம்மாவின் சித்தாந்தம் "அனைத்துத் தரப்பு மக்களும் தன்னிறைவு பெறுவது" என்ற பொருளாதாரக் கோட்பாட்டின் கீழ் அமைந்ததாகும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு வழிவகை செய்துள்ளார்கள். சுற்றுலாத் துறையில், தற்போதுள்ள சுற்றுலா வளர்ச்சிக்கான கட்டமைப்புக்களை மேம்படுத்துவதுடன் சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கும் வகையிலும், அவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை செய்துதர மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 2011–2012 ஆம் நிதி ஆண்டில் 53 கோடி ரூபாய் செலவில் சுற்றுலாத் தல மேம்பாட்டிற்காக ஒன்பது திட்டங்கள் செயல்படுத்த நிதி ஒதுக்கி உள்ளார்கள். மேலும் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ள நான்கு மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டைப் பெறுவதற்கும், வனங்கள், மலைப் பகுதிகள், கடற்கரை ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவிக்க அரசு தனியார் கூட்டு முயற்சிகள் மூலம் சுற்றுலா ஊக்குவிக்கப்படுவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

திருக்கடையூர் மற்றும் நவக்கிரகக் கோயில்களையும் உள்ளடக்கிய சுற்றுலா, தெற்கு சுற்றில் உள்ள இராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி உள்ளடக்கிய தெற்கு மண்டலச் சுற்றுலா போன்ற ஆன்மீகச் சுற்றுலாக்களை மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்மைப்படுத்த அறிவுறுத்தியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களை நிறைவேற்ற சுற்றுலாத் துறை முனைப்புடன் செயல்பட்டு தமிழகத்திற்கு உள்நாடு, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதற்கான சூழ்நிலை உருவாக்கப் படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டுள்ளேன் என்று பணிவுடன் தெரிவுப்படுத்திக் கொள்கிறேன்.

★

திருமதி செல்விஇராமஜெயம்
சமூக நலத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மனதில் பதிந்தது நம்பிக்கை
# முகத்தில் மலர்ந்தது புன்னகை

நூறு என்பது "பரிபூரணத்தை" தருவது. உதாரணமாக நூறு சதவிகிதம் சரியா என்பார்கள். நூறு ஆண்டுகள் வாழ்க என்பார்கள். நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றாயா என்பார்கள். ஆகையினால் இந்த "நூறு" என்ற கூற்றிற்கு பரிபூரணம் என்று பொருள் கொள்ளலாம்.

அதுபோல தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ள அனைத்து திட்டங்களுக்கும் நூற்றுக்கு நூறு முழு செயல் வடிவம் கொடுத்து பணிகளைத் துவக்கி உள்ளார்கள். அனைத்து திட்டங்களையும் நூறு சதவிகிதம் வெற்றியுடன் நிறைவேற்றிட வேண்டும் என்ற நோக்கில் முன்னுரிமை அளித்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து முனைப்பாக திட்டங்களை துவக்கி உள்ளார்கள். இந்த செயல் திட்டங்கள் எல்லாம் தமிழக மக்களின் மனதில், அதிலும் குறிப்பாக அடித்தட்டு மக்களின் மனதில் ஆழ பதிந்து அவர்களுக்கு நூறு சதவிகித நம்பிக்கையை அளித்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியானது அவர்களை எப்படியும் மேல்தட்டுக்கு உயர்த்திடும் என்ற நன் நம்பிக்கையை அந்த அடித்தட்டு மக்களின் முகத்தில் தெரியும் புன்சிரிப்பு மூலம் அறிய முடிகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களுக்கு என்றுமே துணையாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் தமிழக மக்கள் நிம்மதியாக உறங்க, தியாகச்சுடர், தெய்வத்தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் மனம் தளராமல், ஓய்வில்லாமல், உறங்க நேரம் ஒதுக்காமல் தமிழக மக்களின் வாழ்வு மேம்பட பாடுபட்டு வருகிறார்கள். தமிழக மக்களின் பேராதரவுடன் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை முன்னேற்றப்பாதையில் அடிமேல் அடி வைத்து முன்னேற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சாதாரண தொண்டனாகிய என்னையும் சமூகநலத் துறை அமைச்சர் என்ற அந்தஸ்துக்கு உயர்த்தி, இராமர் பாலம் கட்ட அணில் உதவியதைப் போல அவர்களின் கீழ் பணியாற்றும் பேற்றினை நல்கிய அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்களின் முன்னேற்ற பாதைக்கு நானும் முழு மூச்சுடன் செயலாற்றுவேன் என்று உறுதிபூண்டு, அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி தொடர்ந்திட இறைவனை வேண்டி, அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை வணங்குகிறேன்.

★

**பி.வி. ரமணா**
கைத்தறி மற்றும்
துணிநூல் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மொத்த பயன்களும் மக்களுக்கே முழுமையாய் தரும் முன்னோடி ஆட்சி

**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2011 சட்டமன்ற தேர்தலிலே பெரும்பாலான தொகுதிகளில் இருபத்தி ஐந்தாயிரத்திற்கும் அதிகமாக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, தமிழக வரலாற்றில் ஓர் இமாலய வெற்றி என்ற சாதனையைப் படைத்துள்ளார்கள். இந்த மாபெரும் வெற்றியை, மகத்தான வெற்றியை அளித்த தமிழக மக்களுக்காக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த மே 16–ஆம் தேதி தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றதிலிருந்து இன்று வரை பல்வேறு நலத்திட்டங்களை தீட்டி, அதனுடைய மொத்த பலன்களும் முழுமையாக தமிழகமக்களை சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மக்கள் நலத்திட்டங்களுக்கான வரையறைகள் அனைத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களே வரைந்து கொடுத்திருக்கிறார்கள்.

மக்களுக்கான ஆட்சி என்பது இப்படிதான் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் அமைச்சர்களையும், அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழிநடத்தி கொண்டு செல்கிறார்கள். இந்த நூறு நாட்களில் தமிழக மக்கள் பயன்பெறாத துறை ஏதுமில்லை என்ற அளவிற்கு ஆட்சி புரிகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழகத்தை மென்மேலும் உயர்த்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வணங்குகிறேன்.

★

**ஆர்.பி. உதயகுமார்**
தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் நம்பகத்தன்மை மிக்க நல்லரசு

தமிழகத்தின் இழந்த பெருமையை மீட்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 100 நாட்களில் அனைத்து தரப்பு மக்கள் பயன்பெறும் வகையில் வேறு எந்த ஒரு அரசும் செய்ய முடியாத சாதனைகளைச் செய்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, தமிழகத்திலுள்ள அடித்தட்டு மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு, இதற்கென, தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்தி அதன் மூலம் மக்களுக்கான எல்லா சேவைகளையும் அவர்களது இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே, விரைவாகவும், திறம்படவும், நேர்த்தியாகவும், நம்பகத்தன்மையுடனும் வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

மேல்நிலைக் கல்வி (+2) மற்றும் 10–ஆவது வகுப்பு தேறிய அனைத்து மாணவர்களுக்கும் மதிப்பெண் கிடைத்த அதே நாளில் மதிப்பெண் பட்டியலை இணையதளம் மூலம் பதிவு செய்து அட்டையை உடனடியாக பெறுவதற்கான வசதியை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முந்தைய அரசால் தொடங்கப்பட்ட செயலிழந்த நிலையில் உள்ள அரசு கேபிள் டிவியை உயிர்ப்பித்து அரசுடைமையாக்கி சாதனை செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அனைத்து அரசுத்துறைகளும், பொது மக்களும், ஒருங்குறியைப் (UNICODE) பயன்படுத்த ஏதுவாக அரசால் தமிழ்க்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. கலைச்சொல் பேரகராதிகள் தற்போது தேடுதல் வசதியுடன் குறுந்தகடு வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. 150 மின்நூலகப் புத்தகங்கள் ஒருங்குறிக்கு (UNICODE) மாற்றப்பட்டு இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. நாட்டுடைமை யாக்கப்பட்ட தமிழறிஞர்களின் 1478 நூல்கள் இணைய தளப்படுத்தப்பட்டுள்ளன. இணைய வகுப்பறைப்பாடங்களில் 12 பாடங்களுக்கான ஒலி ஒளிக்காட்சிகள் தற்போது தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டங்களுக்கு சான்றிதழ் படிப்பிற்கு – 49 நபர்களும், மேற்சான்றிதழ் படிப்பிற்கு – 1 நபரும், பட்டய படிப்பிற்கு – 15 நபர்களும் பதிவுசெய்துள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★

**ந. சுப்ரமணியன்**
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# உலகமே வியக்கும் அறிவாற்றல் ஆளுமைத்திறன்; அபரிமித மக்கள் செல்வாக்கு

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்**

– என்பது வள்ளுவன் வாக்கு. அதனை மெய்ப்பிக்கும் வகையில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஏழை, எளிய ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர்பால் அக்கறை கொண்டு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, தேவை அறிந்து, பல நல்ல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். மகத்தான திட்டங்கள் பலவற்றை உருவாக்கி ஏழை, எளிய ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர் மேல் கருணை கொண்டவராக அவர்களின் பாதுகாவலராக, அவர்களின் வீடுகளில் விளக்கேற்றி வைத்த, ஒளி தீபமாக விளங்கும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா** அவர்களை இந்த சமுதாயமே போற்றிப் பாராட்டி, வணங்கிக் கொண்டிருக்கிறது.

சமுதாயம் முன்னேற கல்வி வளர்ச்சி அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு இல்லாமை, கல்லாமை அகற்றி இருட்டில் கிடந்த தமிழகத்தை, தமிழக மக்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து நல்லாட்சிபுரியும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் குழந்தைகள் இலவசமாக கல்வி பயிலவும், அவர்கள் பள்ளியில் கல்வியினைத் தொடர ஊக்குவிக்கவும், வருகை எண்ணிக்கையை அதிகரிக்கவும், இடை நிற்றலைக் குறைக்கவும், பதவியேற்ற சில நாட்களிலேயே அவர்களுக்காக சிறப்பான திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள்.

3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் 6.38 இலட்சம் பெண் குழந்தைகளுக்கு இவ்வாண்டு ரூ.40கோடியை ஊக்கத்தொகையாக வழங்கவும் ஆர்வமுடன் கல்வி பயில, நல்ல சூழ்நிலையை உருவாக்க ரூ.83.40 கோடி செலவில் 1080 விடுதிகளை சீரமைக்கவும், இதுவரை கழிப்பிட வசதியின்றி தவித்த குறிப்பாக பெண்கள் பயிலும் 779 பள்ளிகளில் ரூ.21 கோடியில் தண்ணீர் வசதியுடன்கூடிய கழிப்பிட வசதி செய்துத் தரவும் 744 விடுதிகளில் ரூ.66 இலட்சம் செலவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், 20 பள்ளிகளை தரம் உயர்த்தவும், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் 93 விடுதிகளுக்கு அரசுக் கட்டடம் கட்டித் தரவும் இவ்வாண்டிலேயே இப்பணிகள் நிறை வேற்றப்படவும் ஆணை யிட்டுள்ளார்கள்.

திறன் எய்தும் பயிற்சி, தொழில் முனை வோர் ஆவதற்கான பயிற்சிகள், அதிக வேலைவாய்ப்புத் தரும் தொலை தொடர்பு கணினி மென்பொருள் மற்றும் அதன் தொடர்புள்ள பயிற்சிகள் அளித்து, பயனுள்ள வேலை வாய்ப்பினை ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிருத்துவர்களும் பெற்றிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் மாநில அரசின் சிறப்பு நிதியாக ரூ.25 கோடியை ஒதுக்கி, இச்சமுதாய இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார்கள்.

சமூக நீதியை நிலை நாட்டவும் சமுதாயத்தில் இதர வகுப்பினருக்கு இணையாக சமூக பொருளாதார மற்றும் கல்வியில் மேம்பாடு அடையவும், தமிழக வரலாற்றில் முதன் முறையாக 2011–2012 ஆம் நிதியாண்டில் மொத்த மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ. 25,535 கோடியில் பகுக்கப் படும் இனத்தின்கீழ் ரூ.5007 கோடி (21.27%)அதாவது ஆதிதிராவிடர் ஜனத்தொகை விகிதாச்சாரத்திற்கு குறைவில்லாமல் நேரடியாக அவர்களுக்கு செலவிடும் வகையில் ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ளார்கள். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் சுமார் ரூ.12 கோடி அதிகமாகும். அதே அடிப்படையில் ரூ.246 கோடியை பழங்குடியினர் நலனுக்கென பகுக்கப்படும் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரைப் போல் கருணையுள்ளம் கொண்டு, பேறறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வழி நின்று அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவையும் அன்பையும் பெற்று, **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் உலகமே வியக்கும் வண்ணம் மூன்றாவது முறையாக முதலமைச்சராய் பொறுப்பேற்றுள் ளார்கள். மாண்புமிகு முதல்வரின் அறிவாற்றல், ஆளுமைத்திறன், அபரீமிதமான மக்கள் செல்வாக்கினை அறிந்து, வியந்து, அகில உலகில் வளர்ந்த நாடான அமெரிக்காவின் உயர்ந்த பெண்மணி, அந்நாட்டு ஜனாதிபதியின் ஆலோசகர் திருமதி. ஹிலாரி கிளிண்டன் அவர்கள் சமீபத்தில் நேரில் சந்தித்து, பாராட்டிச் சென்றமை தமிழகத்திற்கே பெருமை சேர்ப்பதாக உள்ளது.

✶

**வி. செந்தில்பாலாஜி**
போக்குவரத்துத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# தமிழரின் அன்புப் பிடிக்குள் வாழும் ஆற்றலாளர்

தமிழகத்தின் தன்னிகரில்லாத தலைவியாகவும், ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் வாழ்க்கையின் விடிவெள்ளியாகவும் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமையப்பெற்றுள்ள அரசு தன்னுடைய 100 நாட்களை நிறைவு செய்யும் இந்த நேரத்தில் மனமெல்லாம் உவகைகொண்டு உளமெல்லாம் உணர்ச்சி பெற்று ஆனந்தக் களிப்பெய்தும் தமிழ்ச் சமுதாயத்தை நன்றியுடன் வணங்குகிறேன்.

இறைவனால் அனுப்பப்பட்ட இறைவனின் தூதராகவே தோன்றி "புகழொடு தோன்றுக" என்பதற்கேற்ப தமிழகத்தை வழிநடத்திச் செல்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் .

இந்தியத் திருநாட்டில் உள்ள மாநிலங்களிலேயே நம் தமிழ்நாட்டை முன்னிலை பெற்ற மாநிலமாக மாற்றுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சிக்கு அளவுகோல் ஏதும் இல்லை.

தமிழரின் அன்பென்னும் பிடிக்குள் வாழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சாதனைகள் காலந்தோறும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய துறைகள். எனினும், இவற்றிற்கெல்லாம் ஆணிவேராயிருப்பது கூட்டுறவே. அனைத்துப் பெருமைகளையும் மக்களுக்கு அள்ளித் தருகிற துறையாக "கூட்டுறவு" கருதப்படுகிறது. நாட்டுயர்வின் நாற்றங்காலே கூட்டுறவு என்பதை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூட்டுறவுத்துறையின் ஏற்றத்திற்காக ஏராளம் செய்திருக்கிறார்கள்.

நலிந்த பிரிவினரின் எதிர்காலம் வலிமையானதாக அமையவேண்டும். தமிழக மக்கள் தற்சார்படையும் தனித்தொரு இனிய வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி எல்லா நல உதவிகளையும் அள்ளி வழங்கும். ஏழைகளே இல்லாத நாட்டைக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் காட்டியதைப் போல் தமிழ்நாட்டை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரும்பணிகள் ஆற்றுகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு நூறு நாட்களை முடிக்கிற இந்தத் தருணத்தில், பலகோடி நூறாயிரம் நாள்களை முடிக்கும் வல்லமையை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இறைவன் வழங்கவேண்டும் என்பதே தமிழக மக்களின் வேண்டுகோளும், பிராத்தனையுமாகும்.

நூறு நாள்களும் "நூற்றுக்கு நூறு" என்னும் உயரிய மதிப்பெண்ணைப் பெற்றுள்ளன.

இந்த நூறு – நமக்கெல்லாம் பெரும் பேறு
வாழ்க புரட்சித் தலைவி அம்மா!
வளரட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!!!

★

**கே.ஏ. ஜெயபால்**
மீன்வளத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மக்களின் அல்லலைத் தீர்க்க வாராது வந்த மாமணி

**வா**டிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய அருட்பெருஞ்ஜோதி வடலூர் வள்ளலாரை போல் தமிழக மக்களின் அல்லல்களையெல்லாம் துடைக்க, வாராது வந்த மாமணியாம் இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஒட்டுமொத்த தமிழக மக்களின் பேராதரவினைப் பெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றபின், கையொப்பமிட்ட 7 கோப்புகளில், மீனவர் நலன் காக்கும் வகையில் மீன்பிடித் தடைக்கால நிவாரண உதவித்தொகை ரூ.1000/–ஐ ரூ.2000/– ஆக உயர்த்தி வழங்கியதும் ஒன்றாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டும் வகையில் இழந்த கச்சத்தீவை இலங்கை அரசிடமிருந்து திரும்ப பெற கழகத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மீனவர்களின் உரிமைக்காக போராடியவர். அதனைத் தொடர்ந்து, இவ்வழக்கில் தமிழக வருவாய்துறையும் இணைத்துக் கொள்ள ஆணை உறுதி வாக்குமூலம் தாக்கல் செய்ததோடு, கச்சத்தீவை மீட்க தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில், மீன்பிடி அல்லாத காலங்களில் மீனவ குடும்பம் ஒன்றுக்கு சிறப்பு உதவித் தொகையாக ரூ.4000/– வழங்கிடவும், மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்தி ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க ஆழ்கடல் சூரை மீன்பிடித் தூண்டில் படகுகள் வாங்கிட 25 சதவீத மானியத்தில் ரூ.5 இலட்சம் வரை மீனவர்களுக்கு நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்தினையும் அறிவித்துள்ளார்கள். மேலும், மீன்பிடித் தொழிலுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் 13 கடலோர நகரங்களில் குளிர்பதன மீன்பதப்படுத்தும் பூங்காக்கள் தொடங்கிடவும், நடுக்கடலில் மீனைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்திடும் வகையில் அரசு தனியார் ஒத்துழைப்புடன் சோதனை அடிப்படையில் பதப்படுத்தும் அலகு ஒன்றினை அமைத்திடவும் ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிகாலம் மீனவ மக்களின் வாழ்வில் என்றென்றும் பொற்காலம் என்பதில் ஐயமில்லை.

★

**புத்திசந்திரன்**
உணவுத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# காலம் தந்த கொடை
# தமிழர் நலம் காக்கும் படை

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்றார் கவியரசர் பாரதியார். இந்தக் கவிதை வரிகளுக்கு முற்றிலும் பொருத்தமான வகையில் தமிழ்நாட்டின் பெருமை உலகத் தமிழர்கள் மத்தியில் இன்று உலா வருகிறது.

முக்கனியாய், முத்தமிழாய், மூன்றாவது முறையாக ஆட்சித் தேரை அலங்கரிக்கும் அறிவுலகத் தாரகை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கும் முழுமையான முயற்சியில் அல்லும், பகலும் அயராது ஈடுபட்டு பாடுபட்டு வருகிறார்கள்.

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் – இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்"

என்று பொது விநியோகத் திட்டத்தில் விலையின்றி அரிசி வழங்கி, பக்கத்து மாநிலங்களும் பார்த்து வியக்கும்படி, தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு தனிப்பெரும் புரட்சியை ஏற்படுத்தி, தன் நுண்மாண் நுழை புலத்தை நிரூபித்து இருக்கிறார் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

காலம் தந்த கொடையாக – தமிழர்களின் படையாக வந்துதித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகம் முன்மாதிரி மாநிலமாக விளங்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

★

**சி.த. செல்லப்பாண்டியன்**
தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# ஒப்பற்ற வெற்றிச் சாதனைகள் ஒவ்வொரு நாளும் தொடரும்

கழக நிரந்தரப் பொதுச் செயலாளர்
தொழிலாளர்களின் விடிவெள்ளி

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம்
புரட்சித்தலைவி அம்மா அவர்களே!

வாக்குகள் பெற வாக்குறுதிகள் என்பதை மாற்றி முதல்வரான அன்றே அருமையான, ஏழு மக்கள் நலத்திட்டங்களுக்கு ஆணை பிறப்பித்த அருந்தவத் தலைவியே! தங்களின் மகத்தான சாதனை, மக்கள் நலப்பணிக்கு புதிய திட்டங்களுக்கு கூடுதலாக ரூ.8900/– கோடி அதில் தொழிலாளர் நலத்துறைக்கு கீழ்க்கண்ட திட்டங்கள் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானு கோடிநன்றி! நன்றி! நன்றி!

1. 10 புதிய அரசு தொழி பயிற்சி நிலையங்கள் தொடங்க
2. அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழிற் திறன் பயிற்சி வழங்க
3. திறன் மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை உருவாக்க
4. தமிழ்நாடு மாநில திறன் பதிவுத் தொகுப்பு தொடங்க
5. வானூர்தி பராமரிப்பு, உற்பத்தி சார்ந்த தொழில்கள், கப்பல் மற்றும் அது சார்ந்த சேவைகள் போன்ற உயர் தொழில்நுட்பங்களில் இளைஞர்களை பயிற்றுவிக்க உலகத்தரம் வாய்ந்த ஒரு பயிற்சி மையத்தை தனியார் பங்கேற்புடன் அமைக்க
6. இளைஞர்களை ஊக்குவிக்கவும், குறிப்பாக முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு உரிய பயிற்சிகள் அளிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க
7. இளைஞர்களுக்கான மேற்கண்ட பயிற்சிகளை மேற்கொள்வதற்கான நவீன வகுப்பறைகள், நூலகம், கணினி மையம், கூட்ட அரங்கம், தங்கும் விடுதிகள் போன்ற வசதிகளை உள்ளடக்கிய நவீன பயிற்சி வளாகம் அமைக்க நான்கு கோடி ஒதுக்கீடு
8. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு இரண்டு சீருடைகளும், ஒரு செட் காலணியும் இலவசமாக வழங்க ரூ.4.6 கோடி ஒதுக்கீடு
9. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு அரசு முத்திரையுடன் கூடிய திறன் அடையாள அட்டை வழங்க
10. தனியார் தொழில் நிறுவனங்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து பணைய மூலதன நிதியையும் (Venture Capital) உருவாக்க
11. அமைப்புசாரா நல வாரியங்களை சீரமைத்து அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துவது

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சியினால், முதன்முறையாக பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேறியவர்களுக்கு அவர்கள் படித்த பள்ளிகளிலேயே ஆன்லைன் மூலம் வேலைவாய்ப்பு பதிவு செய்யப்பட்டது. இதன் மூலம் பத்தாம் வகுப்பில் 7.02 இலட்சம் மாணவர்களும், பன்னிரெண்டாம் வகுப்பு தேறிய 4.08 இலட்சம் மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

ஆன நாட்கள் 100 தான் அன்னையே !

**அம்மா** உங்களின் கீழ் பணிபுரியும் ஒவ்வொரு நாளும் திருநாளே !

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இத்துறை மேலும் முன்னேற்றம் கண்டிட, உழைத்திட உறுதி கூறி, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் ஓங்குக அம்மா அவர்களின் வெற்றி, சாதனைகள் நாளும் தொடர, வெல்க நாளும் என்பதை பணிவுடன் பதிவு செய்கிறேன்.

★

**டாக்டர் வி.எஸ். விஜய்**
சுகாதாரத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# மக்கள் நல்வாழ்வுக்காக மகத்தான மாற்றங்கள்

**கோ**டான கோடி தமிழக மக்களின் அமோக ஆதரவைப்பெற்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசு, நடைமுறையில் உள்ள தமிழக சுகாதாரத் திட்டங்களை நன்கு ஆய்வு செய்து 100 நாட்களுக்குள்ளாகவே மகத்தான மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளது.

தமிழக நிதி நிலை அறிக்கையில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு நடப்பு நிதியாண்டுக்கு மட்டும் ரூ.4,761கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக்காட்டிலும் ரூ.872 கோடி அதிகமாகும்.

**டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 24 மணிநேர பிரசவ சேவை, 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மருத்துவமனைகள் (சீமாங்க்) மற்றும் மகப்பேறின்போது பெண் உறவினர் உடனிருக்க அனுமதி போன்ற சிறப்பான பல முன்னோடித்திட்டங்களைத் துவக்கிய பெருமை கொண்ட மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏழைக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் மகப்பேறு நிதியுதவியை ரூ.6000/– லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்ப காலப் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி சேவைகள் பெறும் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் மற்றும் குழந்தைகளுக்கு முறையான தடுப்பூசி சேவைகள் பெறும் அனைத்து தாய்மார்களுக்கும் மகப்பேறு நிதியுதவி வழங்கப்படும். தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த கர்ப்பிணிப் பெண்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவர்.

**காப்பீட்டுத் திட்டம்**

தனியார் மருத்துவமனைகள் இலாபமடையும் வகையில் இருந்த காப்பீட்டுத் திட்டத்தை கூர்ந்தாய்வு செய்து, நான்காண்டுகளுக்கு குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் என்ற பற்றாக்குறை நிலையை மாற்றி ஆண்டுக்கு ஒரு இலட்சம் என உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**நடமாடும் மருத்துவமனைகள்**

தமிழகத்திலுள்ள தொலைதூரப் பகுதிகளில் வாழும் ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு தற்போதுள்ள 395 நடமாடும் மருத்துவக்குழுக்களை மேம்படுத்தி ஆய்வகவசதிகளுடன் கூடிய 395 சிறப்பான நடமாடும் மருத்துவமனைகளை உருவாக்க மாண்புமிகு அம்மாவின் நல்லரசு இசைவளித்துள்ளது.

### நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள்

கிராமப்புர நல்வாழ்வுப்பணிகளில் வெற்றிமுகம் கண்ட தமிழகம், இனி பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை மூலமாக 135 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்து, நகர்ப்புர ஏழை, எளிய மக்களுக்கு நல்வாழ்வு சேவைகளை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதியளித்துள்ளார்கள்.

### வளரிளம் பெண்கள் உடல் ஆரோக்கியம் பேணுதல்

கிராமப்புரங்களில் வாழும் ஏழை, எளிய இளம்பெண்கள் பூப்பெய்திய காலத்திலிருந்து ஆரோக்கியமாக வளரும் வகையில், இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்கும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதியளித்துள்ளார்கள்.

### உணவு மற்றும் மருந்து பாதுகாப்பு ஆணையரகம்

உண்ணும் உணவிலும், அருந்தும் மருந்திலும் கூட கலப்படம் செய்வதை இனி இரும்புக்கரம் கொண்டு தடுத்திட உணவுப்பாதுகாப்பு மற்றும் மருந்துக்கட்டுப்பாடு ஆணையரகத்தை தமிழகத்தில் நிறுவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

### பிறவிக்குறைபாடுகள் சிகிச்சைத் திட்டம்

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டுவிட்ட பிறவிக்குறைபாடுகள் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் திட்டம் ரூ.5 கோடி செலவில் மீண்டும் தமிழகம் முழுமையிலும் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது.

### மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்

அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமல்லா பணியாளர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் காலிப்பணியிடம் ஏற்படா வண்ணம் உடனுக்குடன் நிரப்பிட மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டமாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தொடங்கப்பட உள்ளது.

### புதிய சட்டசபை பல்துறை<br>உயர் சிறப்பு மருத்துவமனையாக மாற்றல்

அனைத்திற்கும் மேலாக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள தலைமை செயலக வளாகத்தினை பல்துறை உயர் சிறப்பு மருத்துவமனையாகவும், மருத்துவக் கல்லூரியாகவும் மாற்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளது அவரது அரசின் 100 நாட்கள் சாதனையில் ஒரு மகுடமாக அமைந்துள்ளது.

✶

**என்.ஆர். சிவபதி**
காலநடை பராமரிப்புத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# இருள் சூழ்ந்த தமிழகத்திற்கு ஒளியூட்டும் முழு நிலவு

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருள் சூழ்ந்திருந்த தமிழகத்திற்கு ஒளியூட்டும் பௌர்ணமி நிலவாய் தான் பொறுப்பேற்ற நூறு நாட்களுக்குள், ஏழை, எளிய மக்களுக்கு 60,000 கறவைப்பசுக்கள் மற்றும் 7,00,000 இலவச ஆடுகள் வழங்க இந்த நிதி ஆண்டில் ரூ.142 கோடி ஒதுக்கப்பட்டு திட்டப் பணிகள் செப்டம்பர் 15–ஆம் தேதி முதல் தொடங்கப்பட உள்ளன. இந்த நிதி ஆண்டில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.231 இலட்சம் ஒதுக்கப்பட்டு 5,500 கால்நடைப் பாதுகாப்புத்திட்ட முகாம்கள் நடத்திடவும், “அஸ்காட்” திட்டத்தின்கீழ் 40.02 இலட்சம் டோஸ்கள் கோமாரி நோய்த் தடுப்பு மருந்துகள் 19 மாவட்டங்களுக்கு விநியோகம் செய்ததுடன் தொண்டை அடைப்பான் நோய், ஆட்டம்மை மற்றும் சப்பை நோய் ஆகியவற்றிற்கான தடுப்பூசி பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் கலப்பின ஜெர்சி கோல்டின்பிரிசன் மற்றும் முர்ரா பொலி காளைகள் இன விருத்திக்காக வாங்கப்பட்டுள்ளன. கிராம நிலைப் பணியாளர்களுக்கும் கால்நடை ஆய்வாளர்களுக்கும் இனப்பெருக்கம் குறித்த மறுபயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இரண்டு இடங்களில் புதிய கால்நடை மருத்துவக்கல்லூரிகள் துவங்கவும், கோழியின உற்பத்தி தொழில்நுட்பத்தில் இளநிலை பட்டப்படிப்பு (பி.டெக்) துவங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் நாள் ஒன்றுக்கு 17.73 இலட்சம் லிட்டராகவும், மே மாதம் 20.80 இலட்சம் லிட்டராகவும் இருந்த பால் உற்பத்தி தற்போது 23.30 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. புதிதாக 999 பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பால் பணப் பட்டுவாடா நிலுவையை நீக்க ரூ.49.65 கோடி வழங்கியதுடன் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சுமார் ரூ.170 கோடிக்கு புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு போனஸ், டிவிடெண்ட், ஊக்கத்தொகை சுமார் ரூ.144 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகம் வெண்மை புரட்சியை நோக்கி வெற்றி நடைபோடுகிறது.

★

**அ. முஹம்மத்ஜான்**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.



# சிறுபான்மையினர் நலம்பெற வழிகாட்டும் ஒளிவிளக்கு

**சி**றுபான்மை மக்களின் காவலர் மாண்புமிகு தமிழக முதல்வர் மாணிக்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்று 100 நாட்களுக்குள் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு 25 கல்லூரி விடுதிகளும் இஸ்லாமிய மாணவியருக்கு 3 பள்ளி விடுதிகளும் ஆகமொத்தம் 29 புதிய விடுதிகள் ரூ. 428–கோடி செலவில் அமைக்கப்படவுள்ளன. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் ரூ.550 லிருந்து ரூ.750 ஆகவும் பள்ளி மாணவர்களுக்கான உணவுக்கட்டணம் ரூ.450–லிருந்து ரூ.650–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் படிக்கும் இவ்வினங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு உணவுக்கட்டணம் ரூ.450–லிருந்து ரூ.650–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியர்களுக்கான பரிசுத் தொகை இருமடங்கிற்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளது. வஃக்பு வாரியத்தின் நிர்வாகச் செலவுகள் அதிகரித்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகை கூட வழங்க இயலாத நிலையில் உள்ளது என்பதை அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வஃக்பு வாரியத்தின் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கிட ரூ. 3 கோடி வழங்கியும், நிர்வாக மானியத்தை ரூ.45–இலட்சத்திலிருந்து ரூ.1–கோடியாக உயர்த்தி வழங்கியும் ஆணையிட்டுள்ளார்கள். உலமாக்களுக்கான ஓய்வூதியத்தினை ரூ. 750–லிருந்து ரூ.1,000– ஆக உயர்த்தியும், பயனாளிகளின் எண்ணிக்கையினை 2400–லிருந்து 2600–ஆக உயர்த்தியும், தமிழ்நாடு ஹஜ் குழு நிர்வாக செலவிற்காக அரசு வழங்குகின்ற மானியத் தொகை ரூ. 10/– இலட்சத்திலிருந்து ரூ. 20/– இலட்சமாக உயர்த்தியும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி வைத்துள்ளார்கள் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நூறு ஆண்டுகள் சாதனையை நூறு நாட்களில் செய்து முடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா பல நூறு ஆண்டுகள் வாழவேண்டும், இந்திய திருநாட்டிற்கே தலைமையேற்று வழி நடத்தி இந்திய மக்கள் அனைவரும் அவர் மூலம் நன்மையடைய வேண்டுமென இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

✶

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு




## பட்டா மாற்ற எளிய வழிமுறை – பொதுமக்கள் நன்றி

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்தில் 11.07.2011 மற்றும் 12.07.2011 ஆகிய தேதிகளில் பெறப்பட்ட பட்டா மாறுதலுக்கான மனுக்கள் மீது பட்டா மாறுதல் செய்து வழங்கப்படும் ஆணைகள் சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து 18.07.2011 அன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் விண்ணப்பதாரர் களுக்கு வழங்கப்பட்டது.

பட்டா மாறுதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பொதுமக்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லாத வகையில் அவ்வாறான மனுக்களை அந்தந்த கிராம நிர்வாக அலுவலரிடம் அதாவது VAO–விடம் சமர்ப்பிக்க வழிவகை செய்து, வீணான அலைச்சலையும், நேரத்தையும், பயணச் செலவையும் குறைத்து பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பங்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

✶ ✶ ✶

## அமெரிக்கா– நியூஜெர்சி சட்டசபையின் தீர்மானம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை பாராட்டி, அமெரிக்காவின் நியூஜெர்சி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நியூயார்க் தமிழ்ச் சங்கத்தின் தலைவரான பிரகாஷ் சாமி சந்தித்தார்.

அப்போது, அமெரிக்காவின் நியூஜெர்சி சட்டசபை, 21.07.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றி இருப்பதைக் காண்பித்தார். அதில், இந்தியாவில் மிகவும் மதிக்கப்படும் தலைவரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தேர்தல் வெற்றியை அங்கீகரிக்கும் வகையில், அவரை கவுரவித்து, “சல்யூட்” செய்வதாக தெரிவிக்கப் பட்டிருந்தது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைக் கவுரவிப்பதுடன், தமிழக மக்களுக்காக அவர் அர்ப்பணித்துள்ளதை வணங்கு வதாகவும், வருங்காலத்திலும் தொடர்ந்து வெற்றிகளை குவிக்க வாழ்த்துவதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. இதைப் பார்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நியூஜெர்சி சட்டசபை உறுப்பினர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

✶ ✶ ✶

# சிறந்த முதல்வர்



**மாண்புமிகு பாரதப்பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பாராட்டித் தெரிவித்ததாவது :**

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கை நியாயமானவை. அவை தீர்க்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என்று இந்திய அரசு இலங்கையை நிர்ப்பந்தித்து வருகிறது. இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து தமிழக முதல்வருடன் கடந்த 14–ஆம் தேதி ஆலோசித்தேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிந்தவர்கள். இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டு மத்திய அரசுக்கு அனைத்து ஆதரவையும் வழங்கி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறந்த முதல்வர் ஆவார்கள். அவர்கள் அனைத்து பிரச்சினைகளிலும் அக்கறை காட்டுகிறார்கள். அவர்களை பாராட்டுகிறேன் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு நல்ல ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தெரிவித்தார்.

* * *

## மக்கள் சக்தி

“உங்கள் அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடித் தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன. சக்தி என்பது மக்கள் சக்தி தானே? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், அணுசக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம் தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆகவேதான் என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன.

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

# இந்தியாவுக்கு முன்னுதாரணம்



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் திட்டங்கள் இந்தியாவுக்கு முன்னுதாரணமாக உள்ளது என்று – முன்னாள் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்கள் பாராட்டினார்**

திண்டுக்கல்லை அடுத்த காந்தி கிராம கிராமிய பல்கலைக் கழக வளாகத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதனை முன்னாள் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் தொடங்கி வைத்துப் பேசினார். இந்நிகழ்வில் அவர் பேசிய போது, "இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர் கிராமங்களில் வாழ்வதால், இந்தியாவின் வளர்ச்சி கிராமப்புர வளங்களை மையமாகக் கொண்டுள்ளது. இதுவே வளமான இந்தியாவின் 2020ன் முக்கிய அம்சமாகும். கிராமப்புரங்களில் கல்வி தரத்தை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் முதலில் அதற்கு தேவையான அனைத்துவிதமான கட்டமைப்புகளையும் ஏற்படுத்த வேண்டும். இதனை புரா திட்டம் மூலம் செய்ய வேண்டும். தமிழக அரசு புரா திட்டத்தை மாநிலம் முழுவதும் நிறைவேற்ற முடிவு செய்திருப்பது இந்தியாவுக்கே முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

மருத்துவ வசதி அனைவருக்கும் வேறுபாடு இல்லாமல் கிடைக்க வேண்டும். தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதில் 2ஆவது விவசாயப் புரட்சித் திட்டம், வெண்மைப் புரட்சித் திட்டம், எத்தனால் பயோ எரிசக்தி உற்பத்திக்கு சிறப்பு கரும்பு வளர்ப்புத் திட்டம், சோலார் மற்றும் மரபு சாரா மின்சார உற்பத்தி திட்டங்களை சிறு, குறு மற்றும் பெருந்தொழில் மேம்பாடு கல்வி, மருத்துவம், நதிநீர், அடிப்படைக் கட்டமைப்பு புரா திட்டத்தின் மூலம் நீடித்த கிராமப்புர மேம்பாடு போன்ற அனைத்து துறைகளுக்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து தமிழகத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த நீடித்த தன்னிறைவுப் பெற்ற வளர்ச்சிக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை உருவாக்கி இருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டு தமிழக அரசைப் பாராட்டினார்.

✶ ✶ ✶

## நித்தமும் திட்டங்கள்

ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்திற்குள் ஏழை எளியோர், உழவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மகளிர், மாணவர்கள், மீனவர்கள் என்று சமூகத்தின் அனைத்து தரப்பினரது நிலைமை உயர நித்தமும் திட்டமிட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு."

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

# பத்திரிகைகளின் பார்வையில்...



## தமிழர்களின் ஒரே தலைவராக உருவெடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்கு இலங்கை பொறுப்பேற்று பதில் சொல்லும் வரை இலங்கைக்கு அளிக்கப்படும் உதவிகளை நிறுத்திவைக்க அமெரிக்க பாராளுமன்ற வெளியுறவு விவகாரக் குழு முடிவு செய்தது. இந்நிகழ்வு, நியாய உணர்வு கொண்ட அனைவருக்கும் குறிப்பாக, இலங்கைவாழ் தமிழ் மக்களிடம் அனுதாபம் கொண்டுள்ள மக்களுக்கு பெரும் ஆறுதலாக உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முடிவு, மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா, அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் சென்னையில் சந்தித்த நிகழ்வின் பயனாக விளைந்துள்ளது. தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னேற்ற அடையாள நிகழ்வுகளில் வரவேற்கத்தக்க ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

இலங்கைவாழ் தமிழர்களின் துயரங்களைக் களைய, அமெரிக்கா தலையிடுமாறு, செல்வி ஜெ ஜெயலலிதா, ஹிலாரி கிளிண்டனை வலியுறுத்தியதின் மூலம், இந்தியாவிற்கு வெளியில் வாழும் தமிழர்களின் நலனைப் பேணிப் பாதுகாக்க உலகளாவிய அளவில் தன்னால் பங்களிக்க முடியும் என்பதை நிரூபித்துள்ளார். தமிழக முதலமைச்சராக பதவியேற்றதைத் தொடர்ந்து ஜூன் மாதம் தமிழக சட்டமன்றத்தில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கக் கோரியும் போர்க் குற்றவாளிகள் மீது ஐ.நா.சபை நடவடிக்கை எடுக்கக் கோரியும் தீர்மானத்தை நிறைவேற்றினார். இலங்கைக்கு அளிக்கப்படும் உதவிகளை அமெரிக்கா தடை செய்துள்ள நிலையில் உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒரே தலைவராகவும், தமிழர்களின் முகவரியாகவும், உறவுகளின் அச்சாணியாகவும் ஜெயலலிதா உருவெடுத்துள்ளார்.

உலகத் தமிழர்கள் பல்வேறு நாடுகளில் இன்னல்களை எதிர்கொள்ளும் போது, தமிழகத் தலைவர்கள் மற்றும் தமிழக மக்கள் ஆகியோரின் ஆதரவை நாடுவது எப்போதும் வழக்கம். இவ்வாறு தங்களை நாடுகின்ற தங்கள் சகோதரர்கள் மீது மாநில மக்கள் அனுதாபம் கொண்டிருந்தாலும், மு.கருணாநிதி தலைமையிலான முந்தைய அரசு, இலங்கை தமிழ் மக்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டபோது அவர்களை காப்பாற்ற முற்றிலும் தவறிவிட்டது. தி.மு.க. அரசின் இந்த அலட்சியப் போக்கு, உலக அளவில் தமிழர்களிடையே விரக்தியை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்கப் பாடுபடுவது தமிழகம்தான் என்ற பாரம்பரியப் பெருமையை இழக்கச் செய்தது.

இப்போது, உலகளவில் இப்பிரச்சினையைக் கொண்டு சென்றதன் மூலம் தமிழக மக்கள் பெருமகிழ்ச்சி அடையும் வண்ணம் இழந்த நற்பெயரை ஜெ ஜெயலலிதா தமிழகத்திற்கு மீட்டுத் தந்துள்ளார். இலங்கைக்கு எதிராக தடைகளை இந்திய நாடும் அறிவிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

***– நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (23.7.2011)***

* * *

# கால்நடை சிறக்க, விவசாயம் செழிக்க கிராம வளர்ச்சிப் புரட்சி

தமிழகத்தில் ஏழைகளுக்கு இலவசமாக ஆடு, மாடு கொடுக்க முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்துள்ளது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

**நிலம் இல்லாத ஏழைகளுக்கு ஆடு தரப்பட உள்ளது. சிறிதளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மாடு தரப்படும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.**

இத்தனை ஆடு, மாடுகளை எங்கிருந்து பெறப் போகிறார்கள் என்று சந்தேகம் எழும்முன், விவசாயத்துறை அமைச்சர் செங்கோட்டையன் விளக்கமாக அது பற்றி தெரிவித்துள்ள கருத்துப்படி, விரைவில் தமிழக கால்நடை பண்ணைகளில் கலப்பின உற்பத்தி வழியாக பசுக்களை புதிதாக உருவாக்குவது அல்லது வேறு மாநிலங்களில் இருந்து பசு மாடுகளை விலைக்கு வாங்கிக் கொள்வது என்று பல முனைகளில் சிந்தித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

ஆடு, மாடுகள் வருகையால் விவசாய குடும்பத்தினர் அதை அக்கறையுடன் வளர்க்க தீவனங்கள் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டத் துவங்கிவிட்டனர்.

ஆடு, மாடுகள் நகரீயமாக மாறிக் கொண்டிருக்கும் கிராமப் பகுதிகளின் சுற்று வட்டாரப் பகுதிகளில் மேய வழிவகை காணும் முயற்சிகளும் விரைவில் துவங்கிவிடும்.

### தீவன பயிர் பெருக்கம்

அந்தப் பகுதிகள் எல்லாம் பொட்டைக் காடாக, வனாந்திரமாக இன்றுள்ள நிலை மாறி பசுமைமயமாக காட்சி தரத் துவங்கி விடும்.

மழைக் காலத்தில் புல் முதலிய ஆடு, மாடு தீவனம் செழிப்பாக வளரும். ஆனால், வெப்பம் நிறைந்த வறட்சிக் காலத்தில் இந்த ஆடு, மாடுகளின் தீவனத்திற்கும் தமிழக அரசு தீவிரமாக பல புதிய விடைகளை தேட ஆரம்பித்துள்ளது.

அதன்படி ''கால்நடை தீவனப் பயிர் பெருக்கத் திட்டம்'' ஒன்றை ஜெயலலிதா ஆலோசித்து வருகிறார். அந்த திட்டத்தின்படி, ''போர்வெல்'' உதவியுடன் நிலத்தடி தண்ணீர் எடுக்கப்பட்டு மிக சிக்கனமான முறையில் விவசாயம் பயன்பட சொட்டு நீர் பாசனத் திட்டம் கொண்டு வர அரசு தீவிரம் காட்டி வருகிறது.

### இலவசமாய் சொட்டு நீர் பாசனம்

இந்த சொட்டு நீர் பாசன திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு 40 சதவிகிதமும், மாநில அரசு 10 சதவிகிதமும் மானியம் தருகிறது. மீதி 50 சதவிகித தொகையை விவசாயி முதலீடு செய்ய வேண்டியது இருந்தது.

விவசாயிகளின் நலன் காக்கும் கேடயமாக இருக்கும் ஜெயலலிதா, மத்திய அரசின் மானியம் தவிர தேவைப்படும் மீதித் தொகையை முழுமையாக கொடுத்து சொட்டு நீர் பாசனத்தை சிறப்பாக அமுல்படுத்த திட்டம் தீட்டி வருகிறார்.

அதாவது 40 சதவிகித மானியத்தை மத்திய அரசு தரும். மீதமுள்ள 60 சதவிகிதத்தை மாநில அரசே தந்து விடும். அத்திட்டத்தை அமல்படுத்த ஜெயலலிதா மிக தீவிரமாக அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து வருகிறார்.

இப்படியாக ஆடு, மாடு, சொட்டு நீர் பாசனத்திற்கும் செலவு செய்ய வேண்டியது இல்லை என்பதால் ஏழை விவசாயிகள் விவசாயத்தை சிறப்புற கவனிக்க களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆடு, மாடு வளர்க்க தீவனம் அவசியமாக, தேவைப்படுவதால் இரு துறைகளும் பல புதிய வளர்ச்சிகளுக்கு தயாராகி வருகிறது.

### விடை தேடல்

ஜெயலலிதாவின் புரட்சிகர திட்டத்தால் பல மாவட்டங்களில் பல துறைகளில், பல்வேறு கோணங்களில் வேளாண்மை ஆராய்ச்சிகள் மேம்படும்.

பாரம்பரிய வேளாண்மையையும் புதுமையையும் வரவேற்கும்போது உற்பத்தி திறன் அதிகரிக்கும். இந்த வளர்ச்சிக்கு வித்திட்டுள்ள ஜெயலலிதாவின் திட்டம் தமிழ் மண்ணுக்கு வளம் சேர்க்கும், நாடே செழிக்கும்.

உலக அளவில் வேளாண்மை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை

- வேட்டையாடி உணவு சேகரித்தல்
- கால்நடைகளை வளர்த்தல்

- எளிய வேளாண் முறைகள்
- உயரிய வேளாண்மை அதாவது உழுதல்

இன்றைய கால கட்டத்தில் ஜெயலலிதாவின் ஆடு, மாடு திட்டத்தின் பயனாக கிராமங்களின் முன்னேற்றம் உறுதிபடும். நகரங்களின் அனைத்து உணவு தேவைகளும் பூர்த்தியாகும்.

அழகிய வயல்களும், நிழல்தரும் மரங்களும், வாய்க்கால்களும் சீரமைக்கப்பட்டு "கிராமங்களின் முன்னேற்றமே இந்தியாவின் முன்னேற்றம்" என்ற காந்தியடிகளின் கருத்தை நிலை நிறுத்தி கிராமங்களை சொர்க்க பூமியாக மாற்ற களமிறங்கி விட்டார் ஜெயலலிதா.

– ஆர். முத்துக்குமார்,
மக்கள் குரல், (19.07.2011)

✶ ✶ ✶

## "வந்தார்; சந்தித்தார்.... வென்றார்"

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.06.2011 அன்று புதுடில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுடன் தமிழக திட்டங்கள் தொடர்பாக அரை மணி நேரம் முக்கிய ஆலோசனை நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். நூற்றுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் முக மலர்ச்சியுடனும், விளக்கமாகவும் பேட்டியளித்தாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேட்டியை, பல்வேறு மொழி பத்திரிகைகள் முதல் பக்கத்தில் புகைப்படங்களுடன் விவரமாக பிரிசுரித்துள்ளதாக மூத்த பத்திரிகையாளரும், "வார்த்தா" தெலுங்கு நாளிதழின் டெல்லி தலைமைச் செய்தியாளருமான தில்லி ராஜகோபாலன் தெரிவித்தார். இந்தியத் தலைநகர் டெல்லிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் "வந்தார், சந்தித்தார்.... வென்றார்" என்று ஆங்கில நாளிதழ்கள் புகழாரம் சூட்டின.

டாக்டர் நமது எம்.ஜி.ஆர். (16.6.2011)

✶ ✶ ✶

## மிகுந்த மரியாதை

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, டைம்ஸ் நவ் தொலைக்காட்சியின் அர்னாப்கோஸ்வாமிக்கு அளித்த பேட்டியை நான் பார்த்தேன். பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதில் தனித்துவத்துடன் அவர் செயல்படுகிறார்.

மிகச்சிக்கலான பிரச்சினைகளில் கூட தெளிவான பார்வையும் ஆழமான புரிதலையும் கொண்டவர் அவர் என்பது புரிகிறது.

நான் பார்த்த அருமையான தொலைக்காட்சிப் பேட்டிகளில் ஒன்று தமிழக முதலமைச்சர் அவர்களின் அளவுக்கு மிகத் தெளிவான பார்வையுடைய அரசியல் தலைவர்கள் எந்தக் கட்சியிலும் தற்போது இல்லை. இதில் சந்தேகத்துக்கு இடமில்லை !,

தமிழக முதலமைச்சராக உள்ள ஜெயலலிதா அவர்கள் நாட்டின் தலைவராக திறம்பட செயல்படக்கூடியவர்!

காலமும், நேரமும் தீர்மானிக்கும் பட்சத்தில் இந்திரா காந்திக்குப் பின் மிகத் திறமையான பிரதமராக திகழ்வார்கள்!,

அரசியலில் எப்போதும் வேண்டுமானாலும் எதுவும் நடக்கலாம் என்று தமிழக முதல்வர் அவர்கள் தெரிவித்திருப்பதுபோல், 2014–க்கு முன்பு அரசியலில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படலாம் என்று ஜெயலலிதா அவர்கள் கூறியிருப்பதை நானும் நம்புகிறேன்!

எனக்கு தமிழக முதலமைச்சரைத் தெரியாது. ஆனால் அவருடைய அரசியல் வாழ்க்கை பாதையைக் கவனித்து வருகிறேன். அவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன்.

– பங்கஜ் ஹூரா
("ஹிந்துஸ்தான் டைம்ஸ்" அரசியல் பிரிவு எடிட்டர்)

✶ ✶ ✶

# பயன்பெற்றவர்கள் பாராட்டுகிறார்கள்

## தேடி வந்த பணம்

*கடலூர் மாவட்டம், சொத்திக்குப்பத்தைச் சேர்ந்த திருமதி.அலமேலு :*

அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் யாருமே நினைத்துக்கூட பார்க்க முடியாத வகையில் எங்கள் மீனவ மக்கள் மீது அவருக்கு இருக்கிற அக்கறையைக் காட்டற மாதிரி உதவித் தொகை 1000 ரூபாயை இரண்டு மடங்காக்கி 2000 ரூபாய்ன்னு தேர்தலப்ப சொன்ன மாதிரியே உத்தரவு போட்டாங்க. அதோட, அந்த பணத்த சரியான நேரத்தில



எங்கள தேடிவந்து கொடுத்தது ரொம்ப சந்தோசங்க. அம்மா ஆட்சியில இருக்கும்போது, எங்க வாழ்க்கையில கவலையே இருக்காது என மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

* * *

## ஏழை பெண் திருமண உதவித் திட்டம்

*காஞ்சிபுரம் மாவட்டம், எம்.ஜி.ஆர். நகர், வையாவூரைச் சேர்ந்த சுப்பிரமணி :*

என் மகள் எஸ்.வித்யா +2 படித்து தற்சயம் கல்லூரியில் படித்து வருகிறார். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். நாங்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கடந்த ஓர் ஆண்டாகவே என் மகள் திருமணத்திற்காக



மாப்பிள்ளை வந்து திருமணம் நடத்த கேட்டுக் கொண்டார்கள். வறுமையின் காரணமாக நகை மற்றும் தளவாட சாமான் வாங்க வசதி இல்லாததால் திருமணத்தை தள்ளிப்போட்டு வந்தேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் தெய்வம் போன்று இந்த ஒரு அற்புதமான திட்டத்தை அளித்தார்கள். அதன்படி என் மகளுக்கு குறித்த நேரத்தில் திருமணம் நடத்தப்பட்டது. திருமணம் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுகிறது என்பார்கள். ஆனால் அம்மாதான் என் மகள் திருமணத்தை நிர்ணயித்தார்கள் அதை நினைத்தாலே பெரும் ஆனந்தமாக உள்ளது. தங்கத்தின் விலையை பார்த்தாலே எங்களைப் போன்றவர்களுக்கு குதிரை கொம்பாக இருக்கிறது. இருப்பினும் விலையேற்றத்தை பார்க்காமல் எங்களைப் போன்ற ஏழைகளின் மனதை அறிந்து என் மகள் வாழ்க்கைக்கு விளக்கு ஏற்றியுள்ளார்கள். அம்மாவுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

* * *

## சத்தான உணவு

கன்னியாகுமரி மாவட்டம்,
இலந்தவிளைப் பகுதியைச்சார்ந்த திரு. ராஜன் :

நான் இலந்தவிளையில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். திருமணமாகி 5 ஆண்டுகள் ஆகிறது. ஒரு பெண் குழந்தை உள்ளது. பெட்டிக்கடையில் கிடைக்கும் வருமானம் எனது குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை.

மாண்புமிகு அம்மா அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும் என்று அறிவித்தது எங்கள் குடும்பத்திற்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இலவசமாக அரிசி கிடைப்பதால் எங்கள் குடும்பத்தில் காய்கறிகளுடன் நல்ல சத்தான உணவு சாப்பிட முடிகிறது.



பசியைப் போக்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நானும், எனது குடும்பத்தாரும் என்றும் நன்றியுடன் இருப்போம். ஏழை மக்களுக்கான இதுபோன்ற பல திட்டங்களை வழங்கிவரும் அம்மா அவர்கள் நீடுழி வாழ இறைவனை வேண்டுகிறோம்''

✶ ✶ ✶

## யாரிடமும் கையேந்தத் தேவையில்லை

*கன்னியாகுமரி மாவட்டம்,*
*வாகையடி வடக்குத் தெரு திருமதி. சுப்பம்மா (வயது 55) :*

எனது கணவர் காலமாகிவிட்டதால் எந்தவித ஆதரவுமின்றி வாழ்ந்து வருகிறேன். குடியிருக்க வீடுகூட கிடையாது. வாடகை வீட்டில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்துவரும் எனக்கு ஆதரவற்றோர்களுக்கான உதவித்தொகையாக ரூ.1000/– முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்க உத்தரவிட்டது சந்தோஷமாக உள்ளது. ரூ.1000/– என்பது இன்றைய சூழலில் என் ஒருத்திக்கு போதுமானதாக உள்ளது. உதவித்தொகையுடன் இலவச அரிசியும் வழங்கப்படுவதால் வயிறார சாப்பிட முடிகிறது. பணம் தேவை என்று யாரிடமும் கையேந்த தேவையில்லை. வயிறார சாப்பிட பணம் கொடுத்து இலவசமாக அரிசியும் கொடுத்து என்னை சொந்தகாலில் நிற்க செய்த அந்த புண்ணியவதியை என்றும் மறக்க மாட்டேன்.

✶ ✶ ✶

## எனது இலட்சியம்

***நகர்ப்புரங்களுக்கு இணையாக ஊரகப் பகுதிகள் வளர்ச்சி அடைய வேண்டும்; ஊரகப் பகுதி மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பது எனது எண்ணம். ஊரகப் பகுதிகளில் வேளாண் சார்ந்த சிறுதொழில்கள் தொடங்கப்பட வேண்டும்; அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களின் மதிப்பு கூட்டப்பட வேண்டும்; ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே எனது இலட்சியம்.***

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

## சந்தோஷமாக இருக்கிறேன்

*கன்னியாகுமரி மாவட்டம்,*
*கோட்டாரைச் சார்ந்த திரு. எம். சண்முகம் (வயது 77) :*

நெசவுத் தொழில் செய்து வந்த நான் வயதாகியமையால் எந்த வேலையும் செய்ய முடியாமல் ஒருவேளை சாப்பாட்டிற்கு கூட வழியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். எனது ஒரே மகன் திருமணமாகி என்னை தனியாக விட்டு விட்டு சென்று விட்டான். இந்த சூழ்நிலையில் என்போன்ற முதியோர்களுக்கு முதலமைச்சர் அம்மா அவர்கள் ரூ.1000/– உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவித்து உடனடியாக உதவித்தொகை கிடைத்திட செய்தார்கள். அதனால் இப்போது வயிறார சாப்பிட முடிகிறது. நல்லது கெட்டது பார்க்க முடிகிறது. நான் சந்தோஷமாக இருக்கிறேன். எங்களைப் போன்ற முதியோர்களை வாழவைத்த தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் எப்போதும் தமிழக முதல்வராகவே இருக்க வேண்டும்.

✶ ✶ ✶

## பள்ளியிலேயே வேலைவாய்ப்புப்பதிவு

*கிருஷ்ணகிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படித்து*
*+2 தேர்ச்சி பெற்ற மாணவி எஸ்.மஞ்சு :*

'வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய முதல் நாளே சென்று வரிசையில் இடம் பிடித்து இரவு முழுவதும்

காத்திருந்து மறுநாள் காலையில்தான் பதிவு செய்ய முடியும். இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டது. 20 மணிநேரம்



வரிசையில் நிற்கவேண்டியிருந்தது. இதையெல்லாம் போக்கி மதிப்பெண் பட்டியல் வாங்கும் பள்ளியிலேயே இணையதளம் மூலம் வேலைவாய்ப்புப் பதிவு செய்யலாம் என உத்தரவிட்ட முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

✶ ✶ ✶

## வயிறார உண்கிறோம்

*மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இலவச அரிசி வழங்கும் திட்டத்தில் பயன்பெற்றுவரும் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த நீலகிரி கார்டன் மந்துவைச்சார்ந்த திருமதி. முத்திசின் (வயது 65) :*

நான் தொதுவர் இனத்தைச் சார்ந்தவள். இப்பகுதியில் அதிகம் பேர் எருமை மாடு மேய்க்கும் பணியைச் செய்து வருகின்றனர். எங்களுக்குப் போதுமான வருமானம் கிடைப்பதில்லை. வேறு தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தால் எங்களுக்கு வேறு தொழில்கள் ஏதும் தெரியாது. மாடு மேய்த்து கிடைக்கும் வருமானம் எங்களது குடும்பச் செலவிற்கே போதுமானதாக இருக்காது. சாப்பாட்டிற்கு நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வந்தோம்.



தமிழக முதல்வர் அம்மா அவர்களால் தற்பொழுது மூன்று வேளையும் நாங்கள் வயிறார உண்கிறோம். மாதம் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் தாயுள்ளம் கொண்ட அம்மாவுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

✶ ✶ ✶

## உடல்நலனைப் பேண வாய்ப்பு

*சேலம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் ஏ. மகேஸ்வரி :*

“என் பெயர் ஏ.மகேஸ்வரி முனுசாமி, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருவாய் துறையில் நேரடி உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறேன். தமிழக அரசில் பணிபுரியும் மகளிருக்கு சம்பளத்துடன் மூன்று மாதம் பேறு கால விடுப்பு வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தலின்போது மகளிர் அரசு ஊழியர்களுக்கு பேறுகால விடுப்பை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தப்படும் என அறிவித்திருந்தார்கள், பதவியேற்றவுடன் உடனடியாக இத்திட்டத்தை செயல்படுத்தி உள்ளது மிகவும் சந்தோசமாக உள்ளது.



அம்மா அவர்கள் தாய் உள்ளத்துடன் கொண்டு வந்த திட்டத்தால் என் போன்ற மகளிர் குழந்தைகளை மேலும் மூன்று மாதங்கள் கூடுதலாக நன்கு கவனித்துக் கொள்ளவும், எங்களது உடல்நலனைப் பேணிப் பாதுகாக்கவும், வாய்ப்பாக அமையும். இத்திட்டத்தை கொண்டு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.''

✶ ✶ ✶

## ஊக்கம் பெற்றேன்

*10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநிலத்தில் இரண்டாம் இடம் பிடித்த திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம் முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி மாணவன் சதாம் உசேன் அளித்த பேட்டி :*



எனது குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம். எனது தாய், தந்தையர் பீடித் தொழில் புரிபவர்கள். நான் மேலப்பாளையத்தில் அமைந்துள்ள முஸ்லீம் மேல்நிலைப் பள்ளியில் பயின்று வருகிறேன். இப்பள்ளி பின்தங்கிய சிறுபான்மையினரால் நடத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் எனது பள்ளியில் அனைத்து சமுதாயத்தைச் சார்ந்த ஆசிரியர்கள், மாணவ/மாணவியர்களும் உள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் இப்பள்ளி மத நல்லிணக்கத்தில் ஒரு முன்னோடி பள்ளியாகத் திகழ்கிறது. மேலும் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் பெரும்பாலானவர்கள் பீடித் தொழிலாளர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

நான் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் இரண்டாம் இடத்தில் அதிக மதிப்பெண் பெற்று, தேர்ச்சி பெற்றதற்காக தமிழக அரசின் பரிசுத் தொகையான ரூ.20 ஆயிரம் எனக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில்

### தொடரவேண்டிய பணி

மலர்ச்செடிகளை ஓராண்டிலும், மரங்களைப் பத்தாண்டிலும் வளர்த்திடலாம். ஆனால், மனித வளர்ப்புப் பணி என்பது அப்படிக் குறுகிய காலத்தில் முடிந்து விடுகிற பணி அல்ல. என்றும், என்றென்றும் தொடரப்பட வேண்டிய பணி.

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை நேரடியாக சந்திக்கின்ற ஒரு மாபெரும் வாய்ப்பு கிடைத்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் பரிசுத் தொகையினை பெற்றது எனக்கு ஒரு உத்வேகத்தையும், ஊக்கத்தையும், மென்மேலும் சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்ற புத்துணர்வை எனது மனதில் ஏற்படுத்தியுள்ளது.

✶ ✶ ✶

## தரமான அரிசி

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், சோமரசம்பேட்டை, திருமதி. ஆனந்தி வயது (37) :*

நான் விவசாயக் கூலி வேலை பார்ப்பவள். காவிரியில் தண்ணீர் வரும் காலங்களில் மட்டும் தொடர்ந்து விவசாய வேலை கிடைக்கும். நாள் ஒன்றுக்கு ரூபாய் 80 முதல் 100 வரை மட்டும் கிடைக்கும். என் கணவர் மூட்டை தூக்கும் கூலி



வேலை பார்க்கிறார். எங்கள் இருவரின் வருமானமும், குடும்பச் செலவிற்கே போதுமானதாக இருக்காது. 3 குழந்தைகள் உள்ளனர். சில நேரங்களில் பிள்ளைகள் பசிக்குது என்று கூறும்போது ஒரு வேளை உணவுடன் சிரமப்படுவோம். மாண்புமிகு அம்மா இப்போது மாதந்தோறும் 35 கிலோ இலவச அரிசி கொடுக்குறாங்க. அதுவும் தரமான அரிசியா இருக்குது. சீக்கிரம் வெந்துருது. இதனால் எங்க பிள்ளைகள் பசி இல்லாமல் இருக்குது. வளர வேண்டிய இளம் குழந்தைகள் பசியின்றி இருக்குதுங்க. அம்மாவுக்கு எங்களது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

✶ ✶ ✶

## கனவு நனவாகிறது

*விழுப்புரம் மாவட்டம்,*
*சின்னசேலம், இலங்கை அகதிகள் முகாம்*
*செல்வி.விஜிதா (21) :*

நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓரளவு சுமாராப் படிப்பேன். நாங்க அகதிகளாக இருப்பதால் எங்க கஷ்டத்தின் காரணமாக மேல்படிப்பு படிக்க முடியல. பி.எஸ்.சி., மைக்ரோ பையாலஜி படிக்க விரும்புகிறேன். ஒரு குடும்பத்தில் முதல் தலைமுறையா படிக்கறவங்களுக்கு கல்விக் கட்டணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதாக கேள்விப்பட்டேன். நான் இந்தத் திட்டத்தின் கீழ் மேல்படிப்பு படிக்க ஆசைப்பட்டேன்.



மாண்புமிகு அம்மா அவர்கள் விதியைத் தளர்த்தி எங்களுக்கு திட்டம் அறிவித்ததால் என் கனவு நனவாகியுள்ளது. எனக்கு இந்த உதவியை அம்மா அவர்கள் செய்ததற்கு நன்றி. நான் படித்து அம்மாவின் ஆசியோடு நல்ல நிலைக்கு வந்து இங்குள்ள மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

✶ ✶ ✶

## எங்களுக்கும் திட்டங்கள்

*திரு.பி.மோகன், தலைவர்,*
*இலங்கை அகதிகள் முகாம், சின்னசேலம், விழுப்புரம் :*



நாங்க இலங்கையிலிருந்து வந்து இங்கு (தமிழ்நாட்டில்) 20 வருடமா தங்கியுள்ளோம். இம்முறை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களுக்கு செய்துள்ளதை போல எல்லாதிட்டங்களும் ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கும் குறிப்பாக இலவச அரிசி, முதியோர் ஓய்வூதியத்தொகை, பெண் குழந்தைகளுக்கு வைப்பீடுத் தொகை, திருமண நிதியுதவி, திருமாங்கல்யத்திற்கான தங்கம், தொழில் கல்லூரியில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்குதல் உள்ளிட்டவைகளை வழங்குவதாக அறிவித்துள்ளார்கள். இது தவிர ரேஷன் கடையில் பாமாயில், பருப்பு உள்ளிட்டவைகளும் குறைந்த விலையில் மளிகை பொருட்களையும் அறிவித்து வழங்கி வருகிறார்கள். மேலும், எங்களுக்கு பாய், தலகாணி, சமையல் பாத்திரங்கள் உள்ளிட்டவைகளையும் தமிழ்நாட்டிலுள்ள 115 அகதி முகாம்களிலுள்ள இலங்கை அகதிகளும் பயனடையும் வகையில் முதல்வர் திட்டங்களை அறிவித்துள்ளார்கள். குறிப்பாக படிக்கும் பிள்ளைகளுக்கு சலுகை, தையல் இயந்திரம் வழங்குதல், பெண்குழந்தை பாதுகாப்புத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இதற்காக சின்னசேலம் அகதிகள் முகாம் தமிழர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

✶ ✶ ✶




## எங்களுக்கு மகிழ்ச்சி

*விழுப்புரம் மாவட்டம்*
*சின்னசேலம் இலங்கை அகதிகள்*
*முகாமைச் சேர்ந்த செல்வி நளினி (வயது 25) :*

இந்த முகாமில் நாங்கள் வந்த நாட்களாக சிரமப்பட்டுதான் இருந்தோம். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த சலுகைத் திட்டத்தில் ரேஷன் பொருட்கள் மட்டும் அல்லாது குழந்தைகள் படிப்பு, வயதான முதியவர்களுக்கு உதவித்தொகை, உடல் ஊனமாகி முடங்கிக் கிடப்பவர் களுக்கு, விதவை போன்றவர்களுக்கு மாதம் ரூ.1000/– ம் வழங்குவது எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஈழத்தின் முள்வேலிக்குள் முடங்கி கிடக்கும் ஈழத்தமிழர்களின் துயர்துடைக்கவும் அவர்களுக்கு நல்வாழ்வு அளித்திட உலக தலைவர்களிடம் பிரச்சனைகளை எடுத்து செல்வது மட்டுமில்லாமல் தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத் தமிழர்களையும் தமிழ்நாட்டு மக்களை போல விதிகளை தளர்த்தி திட்டங்களில் பயன்களை பயன்பெறவும் வழி வகுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை மனதார பாராட்டுகிறோம்.

✶ ✶ ✶

## முதல் கையெழுத்து

**திருமதி. கிருஷ்ணவேணி (வயது 80) பெருமாள்கோயில் தெரு, வழுதரெட்டி ஊராட்சி**

என் பெயர் கிருஷ்ணவேணி, எனக்கு 80 வயதாகிறது. என்னால் எந்த வேலைக்கும் செல்ல முடியவில்லை. எனது பிள்ளைகள் யாரும் என்னை கண்டுகொள்வதில்லை. அவர்கள் குழந்தை குட்டிகளுடன் இருப்பதால் நானும் அவர்களைத் தொந்தரவு செய்யவில்லை. அரைவயிற்று கஞ்சியைக் குடித்து காலம் தள்ளி வருகிறேன். ஏற்கெனவே நான் ரூ.500/– பென்சன் கவர்மெண்டிலிருந்து வாங்கிட்டி ருந்தேன். ஆனால், மகராசி அம்மா எங்களுக்கெல்லாம் ரூ.1,000/– தருவேன்னு சொன்னாங்க. யாரு சொன்னத செஞ்சிருக்காங்க என நினைத்தேன். ஆனா எல்லாரும் சொன்னாங்க அந்த மகராசி பதவியேத்துக்கிட்டதும் முதல் கையெழுத்தா எங்கள மாதிரி வயசானவங்களுக்கு பென்சன் உயர்த்தி ரூபா 1,000மா கொடுத்துருக்காங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கு. இனி நான் பணம் தேவையின்னு யாருக்கிட்டேயும் போகத் தேவையில்லை. வயிறார சாப்பிட அந்த மகராசி பணம் கொடுத்திருக்காங்க காலம் பூரா எங்களுக்கு படியளந்த மகராசிய மறக்க மாட்டோம். எங்களுக்காக அவங்க நீடுழி வாழணும்.

✶ ✶ ✶

### மதச் சார்பற்ற அரசு

*“நமது நாடு, பல மதங்கள் வேறூன்றி உள்ள நாடு என்பதை மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் அதற்குரிய இடம் அளிக்க வேண்டும். ஒரு மதம் மற்றொரு மதத்தின் வழியில் குறுக்கிடக் கூடாது. பெரும்பான்மையின மக்கள் பெறும் அனைத்து சலுகைகளும், உரிமைகளும், சிறுபான்மையினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே நமது மதச்சார்பற்ற அரசியலமைப்புச் சட்டத்தின் சாராம்சம்”.*

***– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்***





பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு சலுகைகள்




மக்கள் பிரதிநிதிகளுக்கு வசதிகளுடன் ஓய்வறை




தொழில் வளர்ச்சிக்கு புதிய திட்டங்கள்



ஏழை எளியோர்க்கு 20 கிலோ விலையில்லா அரிசி